தளவாய்

அரிய நாதர்

கா. அப்பாத்துரை M.A. L.T.

Book. No
21195, 21971
N 50
108269

...பனி
...ந, சென்னை
[விலை 87 ந. பை.

# தளவாய்

# ஆரியநாதர்

44004

434/2.51

கா. அப்பாத்துரை, [illegible] L.T.

[illegible] OF BOOKS
28 MAY 1957
MADRAS

V2:145, 21 571
M50
128269

[illegible]ம் பப்ளி[illegible]
[illegible]டி செட்டி[illegible]ஷிங் கம்பெனி
[illegible]ட்டித் தெரு, சென்னை

[விலை 87 ந. பை.

# தளவாய் அரியநாதர்

## (அரியநாத முதலியார்)

[Paper used : 26 lbs. White Printing]

ஆசிரியர் :
கா. அப்பாத்துரை, M.A., L.T.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை

பதிப்புரிமை]

[விலை 87 ந. பை.

*First Impression (Revised)* 1950
*Second* ,, 1951
*Third* ,, April, 1957

APPROVED FOR CLASS USE, NON-DETAILED STUDY, BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the Fort St. George Gazette dated 4-4-1956, Page 23]

Kabeer Printing Works, Madras (3531)

## முகவுரை

அரியநாதர் கி. பி. 16-ஆம் நூற்றாண்டுத் தமிழர்; ஏழைக் குடும்பத்திற் பிறந்தவர்; பிழைப்புக்காகப் பலநூறு மைல்கள் நடந்து விஜயநகரம் சென்றவர்; அங்குத் தம் வேலை - ஒழுக்கம் - நுண்ணறிவு இவற்றால் கணக்கர் பதவியிலிருந்து அமைச்சர் பதவி வரை பெற்று மகிழ்ந்தவர்; பின்னர் மதுரையில் நாயக்க அரசை ஏற்படுத்தி நான்கு தலைமுறை அமைச்சராகவும் தளவாயாகவும் இருந்து தமிழ்நாட்டில் ஒழுங்கான அரசியலை நடைபெறச் செய்தவர்; இராயரது பெருநாட்டுத் தளவாய்ப் பதவியும் பெற்றவர்; தம் பொதுநலத் தொண்டினால் தமிழ் மக்கள் 'உள்ளம் கவர்ந்த கள்வர்.'

தமிழ் நாட்டிற் பிறந்த இத்தமிழர், தெலுங்க நாட்டிற் பெரும்பதவிகள் பெற்று, தெலுங்க மன்னர்க்கு அமைச்சராகவும் தளவாயாகவும் இருந்து அழியாப் புகழ் பெற்றார். வரலாற்றில் இடம் பெற்றார் எனின், அப்பேரறிஞர் வரலாறு தமிழ் மாணவர்க்கு ஒரு வழி காட்டியாக அமையும் அல்லவா? ஆதலால், தமிழ் மாணவர்களே, உங்கள் தளவாய்ப் பெரியாரது ஆண்மை மிக்க வரலாற்றைப் படியுங்கள்; படித்துப் பயன் பெறுங்கள். அஃது உங்கள் வாழ்க்கைக்கு விளக்காக அமையும்.

ஆசிரியன்
கா. அப்பாத்துரை

# பொருள் அடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிறப்பும் இளமையும் | ... | 1 |
| 2. | விஜயநகரப் பேரரசு | ... | 15 |
| 3. | விஜயநகரத்தில் அரியநாயகம் | ... | 24 |
| 4. | அரண்மனைச் சேவகம் | ... | 33 |
| 5. | தகுதிக்கு ஏற்ற பதவிகள் | ... | 40 |
| 6. | தமிழ் நாட்டில் இராயர் ஆட்சி | ... | 50 |
| 7. | மதுரையில் நாயக்கர் ஆட்சி | ... | 66 |
| 8. | பாளைய வகுப்பு | ... | 76 |
| 9. | அன்று கொடுத்த ஓலை | ... | 85 |
| 10. | பேரரசின் தளவாய் | ... | 93 |
| 11. | இறுதி நாட்கள் | ... | 105 |
| 12. | மதுரை-ஆயிரக்கால் மண்டபம் | ... | 115 |



# தளவாய்
# அரியநாத முதலியார்

## 1. பிறப்பும் இளமையும்

**அரியநாதர் சிறப்பு**

அரியநாயகர் அல்லது அரியநாதர் என்பவர் வேளாளர்; மிக எளிய குடும்பத்திற் பிறந்தவர்; வறுமையில் வாடியவர்; தம்மீது இரக்கம் கொண்ட ஆசிரியரிடம் இலவசமாகக் கல்வி கற்றவர். இவர் கால்நடையாக விஜயநகரம் சென்ருர்; தென்ஞட்டு மண்டலேசுவரரிடம் கணக்கர் ஆனுர்; பின்னர் அரண்மனைக் கணக்கர் ஆயினுர்; படிப்படியாக உயர்ந்து தளவாய் ஆனுர்; பிறகு அமைச்சர் ஆனுர்; இறுதியில் தமிழ் நாட்டில் நாயக்க அரசு ஏற்பட்டபொழுது அந்த அரசுக்கு அமைச்சராகவும் தளவாயாகவும் இருந்தார்; நாடு முழுவதும் பரவி இருந்த குழப்பங்களையும் அரசியல் அமைதி இன்மையையும் தம் அரசியல் நுண்ணறிவிஞல் அகற்றினுர்; பாளையக்காரரை நிறுவி, அரசை வலுப்படுத்தினுர்; கணக்கு —அரசியல்— சோதிடம் போர் முதலிய பல துறைகளிலும் சிறந்து விளங்கினுர். இவர் சிறந்த தெய்வ பக்தி உடையவர். இங்ஙனம் குடிசையிற் பிறந்த இத்

தமிழர் தம் நல்ல இயல்புகளால் பல உயர்பதவி களைத் தாங்கித் தமிழ்நாட்டில் அழியாப் புகழ் நாட்டினர் எனின், இப்பெருந் தமிழர் வரலாற்றை இக்காலத் தமிழர் ஆகிய நாம் படித்து நல்வழிப் படுதல் நல்லதன்றோ ?

'அரியநாயகர் எவ்வூரினர் ? அவர் இளமைப் பருவம் யாது ? அவர் ஏன் விஜய நகரம் சென்றார் ? அங்கு எவ்வாறு படிப்படியாக உயர் பதவிகளைப் பெற்றார் ? தமிழ்நாட்டில் அவர் செய்த மாபெருஞ் செயல்கள் எவை ? அவரது அழியாப் புகழுக்குக் காரணம் என்ன ?' என்பன போன்ற கேள்விகட்கு இச் சிறுநூலில் விடை காண்போம்.

## காஞ்சி மாநகரம்

தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சி மாநகரம். இஃது ஏறத்தாழ 2,500 ஆண்டுகளாக வரலாற்றுப் புகழ்பெற்ற இடம். புத்தர் பெருமான் இங்கு அறம் உபதேசித்தனராம். அசோகர் காலத்தில் காஞ்சியில் பௌத்தர் கோயில் கட்டப் பட்டது ; பௌத்தப் பள்ளிகள் தோன்றின. அசோகர் காலம் முதல் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வரை காஞ்சி பௌத்தர்க்கு உரிய சிறந்த கலைப் பீடமாகவும் சமயப் பீடமாகவும் இருந்தது. காஞ்சி சமணத்துக்கும் இடம் தந்தது. இந்நகரம் சைவம், வைணவம் என்னும் சமயங்களையும் வளமுற வளர்த்தது. காஞ்சியில் மணிமேகலை அறம் வளர்த்தாள்.

காஞ்சி, பல்லவர் காலத்தில் சிறந்த வட மொழிக் கல்லூரி ஒன்றைப் பெற்றுத் திகழ்ந்தது. அக் கல்லூரிக்கு இந்தியா முழுவதிலுமிருந்து



மாணவர் வந்து பயின்றனர். காஞ்சி வடமொழிக் கல்வியில் பெயர் பெற்றது ; வட இந்தியாவில் சிறப் புற்று விளங்கிய நாலந்தாப் பல்கலைக் கழகத்திற் குத் தர்ம பாலர் என்ற பேராசிரியரை அனுப் பியது ; சீனத்திற்கு அரசகுமாரர் ஒருவரைப் பௌத்த சமயப் பிரசாரகராக அனுப்பிப் பெரும் பெயர் பெற்றது ; அப்பர்—சம்பந்தர்—சுந்தரர் வந்து தரிசித்து மகிழ்ந்த சிவன் கோயில்களை உடையது ; திருமங்கையாழ்வார் போன்ற ஆழ்வார் களால் பாடப்பெற்ற அரும்பெரும் வைணவக் கோவில்களைத் தன் அகத்தே பெற்றது ; தர்க்க வாதங்களில் வல்ல சமண முனிவர் வந்து தரிசித்த 'சமண காஞ்சி'யை உடையது.

காஞ்சி சமயத்துறையிலும் கல்வித்துறை யிலும் சிறந்து இருந்தாற் போலவே அரசியல் உலகிலும் ஒப்பற்று விளங்கியது. அது முதலில் சங்க காலச் சோழர்க்கு உட்பட்டு இருந்தது ; பின்னர் அறுநூறு வருடகாலம் பல்லவர் தலைநகர மாக விளங்கியது ; மீண்டும் முந்நூறு ஆண்டுகள் சோழர் கோநகரமாக இலங்கியது ; அதன் பின் பாண்டியர், ஹொய்சளர் முதலியவர்க்குத் தொண்டை நாட்டுத் தலைமைப் பட்டணமாகத் திகழ்ந்தது. விஜயநகரப் பேரரசு தெற்கே பரவிய காலத்திலும் காஞ்சி தலைநகரமாகவே இருந்தது.

## மெய்ப்பேடு

இங்ஙனம் சமயம்—கல்வி-அரசியல் துறை களில் தலைமணியாக விளங்கிய காஞ்சி மாநகரத் துக்கு அருகில் மெய்ப்பேடு என்னும் சிற்றூர் இருக்கின்றது. அச்சிற்றூரில் வேளாளர் வாழ்ந்து

வந்தனர். அவர்கள் அனைவரும் சைவ வேளாளர். அவருள் பலர் விஜயநகர அரசாட்சியில் உயர் பதவிகள் பெற்று வாழ்ந்தனர். ஆனால், சிலர் பரம ஏழைகளாகவே இருந்துவந்தனர். அத்தகைய எளிய குடும்பம் ஒன்றில் பிறந்தவரே நமது அரியநாயகர்.

### பெற்றோர் வறுமை

அரியநாயகர் தந்தையார் பெயர் காளத்தியப்பர்; தாயார் பெயர் சிவகாமி அம்மை. இருவரும் உயிரும் உடலும் போலவும் நகமும் சதையும் போலவும் மலரும் மணமும் போலவும் வாழ்ந்து வந்தனர். ஆயினும் வறுமை அவர்களை வாட்டத் தொடங்கிற்று. உலகில் பாழும் வறுமை கொடியதன்றோ? அஃது அவர்கள் வாழ்வைச் சிதைத்தது. வேளாண் குடியிற் பிறந்தவர் பிறர்க்குக் குற்றேவல் புரியார் ஆதலால் பிறரிடம் சென்று வேலை செய்து வாழ அவர்கள் விரும்பவில்லை. காளத்தியப்பர்க்குச் சிறிது நிலம் உண்டு. அவர் அதனை உழுது பயிரிட்டு மிக எளிய வாழ்க்கையை நடத்திவந்தார்.

### அரியநாயகர்

இத்தகைய எளிய பெற்றோர்க்குப் பிறந்த அரியநாயகம் என்ற குழந்தை அரச இலக்கணங்கள் பெற்றிருந்தது. அக்குழந்தையின் இனிய முகமும் சிவந்த தோற்றமும் பருத்த உடல் அமைப்பும் பெற்றோரை மகிழ்வித்தன. அப்பெற்றோர் தமது வறுமைக்கிடையே தம் தவக் குழந்தையைச் செல்வமாக வளர்த்து வந்தனர். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.



### நாகம் காட்டிய நற்குறி

ஒரு நாள் காளத்தியப்பர் வெளியே சென்றிருந்தார். அவர் மனைவியார் நீர் எடுத்துவர வெளியிற் சென்றார். குழந்தை ஒரு கந்தைத் துணிமீது தூங்கிக்கொண்டு இருந்தது. அப்பொழுது ஒரு நாகம் அங்கு வந்தது. அது வீடு முழுவதும் சென்று பார்வையிட்டது; இறுதியில் குழந்தை இருந்த இடத்தை அடைந்தது; குழந்தையின் தலைக்குமேல் குடையைப் போலத் தன் படத்தை விரித்துக்கொண்டு குழந்தையைக் கூர்ந்து நோக்கியது.

அந்தச் சமயத்தில் தாயார் உள்ளே வந்தார்; நாகத்தைக் கண்டார்; தம்மை மறந்து நின்றார். ஆள் அரவம் கேட்டதும் மாநாகம் குழந்தையை ஒருமுறை வலம்வந்து சென்றுவிட்டது. அம்மையார்க்கு அக்காட்சி கனவைப்போல இருந்தது. அவர் தம்மை மறந்தவராய்ப் பட்டமரம்போல நின்றுகொண்டு இருந்தார். அவ்வமயம் காளத்தியப்பர் அங்கு வந்தார். அப்பொழுதுதான் அம்மையாருக்குத் தம் உணர்வு வந்தது. அவர் தாம் கண்ட அற்புதக் காட்சியைத் தம் கணவரிடம் உரைத்தார். காளத்தியப்பர், "பெண்ணே, அரியநாயகம் அரசயோகம் பெறுவான் என்பதை நாகம் அறிவித்துச் சென்றது. எல்லாம் ஏகம்பன் * அருள்" என்றார். அம்மையார் களிப்படைந்தார்.

### பெற்றோர் கவலை

அரியநாயகர் ஐந்து வயதுடையவர் ஆனார். "ஐந்தாம் வயதில் கல்வி தொடங்க வேண்டுமே,

* ஏகம்பன் - காஞ்சியில் உள்ள ஏகாம்பரேசுவரர் பெயர்.

என்ன செய்வது! பள்ளிக்கு அனுப்பப் பணம் இல்லையே!'' என்று தந்தையார் கவலை கொண்டனர்; 'செல்வப் பொருள்-கல்விப் பொருள் ஆகிய இரண்டில் கல்வியே சிறந்தது. செல்வம் இல்லாத நிலையில் கல்வியும் இல்லை ஆயின், அரியநாயகத்தின் எதிர்கால வாழ்வு பயனற்றதாகுமே!' என்று வருந்தினர்.

காளத்தியப்பர் வருந்துவதைக் கண்ட அம்மையார், ''ஏகம்பன் திருவருள் இதுவாயின், நாம் என்ன செய்வது! உழவுத் தொழிலையேனும் நம் சிறுவன் கற்கட்டும். நாம் வேறு என்ன செய்யலாம்!'' என்றனர். அப்பொழுது காளத்தியப்பர் கல்வியின் சிறப்பையும் தேவையையும் கீழ்வருமாறு சொல்லலானார் :

## 'கல்வி'—பொருளும் வகையும்

''அன்புடையாய், கல்வி என்பது 'கல்லுதல்—தோண்டி எடுத்தல்' என்னும் பொருள் தரும். அஃதாவது, 'அறிவைத் தோண்டுதல்-படித்தறிதல்' என்பதாகும். அக்கல்வி உத்தியோகக் கல்வி, தொழிற் கல்வி, ஒழுக்கக் கல்வி என மூவகைப்படும். இவற்றுள் முற்கூறிய இரண்டும் உலக வாழ்வைத் தருவன; பின்னதோ எனின், அவ்வாழ்க்கையைச் செம்மையாக்குவது. இம் மூன்றும் வாழ்க்கைக்கு உரியன. எனவே, இவைகளை உடையவரே மேலான மனிதர் என்பது சொல்லாமலே அமையும். உத்தியோகக் கல்வி கற்றவர் உத்தியோகஸ்தர்; தொழில் கல்வி கற்றவர் தொழிலாளர்; ஒழுக்கக் கல்வி கற்றவர் சான்றோர். உத்தியோகஸ்தரும் தொழிலாளரும் ஒழுக்கக் கல்வி



கற்பாராயின், பொன் மலர் மணம் பெற்றவாறு ஆவர். உயிரை வளர்ப்பதும் உலகில் நற்பெயர் எடுக்க உதவுவதும் ஒழுக்கக் கல்வியே யாகும். பெரியோர் வரலாறுகள், அறிவுரைகள், சமயக் கருத்துக்கள், உண்மையான கொள்கைகள் இவற்றை அறிவுறுத்துவதே ஒழுக்கக் கல்வி. அக்கல்வியைக் கற்று, அதன்படி நடப்பவரே அடக்கம் உடைய சான்றோர் ஆவர்.

## கல்விக்கும் செல்வத்திற்கும் உள்ள வேறுபாடு

''கல்வி என்பது ஒருவனது உள்ளத்தில் நிலைத்து நிற்பது. அதனைக் கண்ணால் காண முடியாது; செயலால்தான் அறிய முடியும். அது செல்வம் போல எந்த இடத்திலும் வைக்கத் தக்கதன்று; நினைத்த சமயத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றத்தக்கதும் அன்று. கல்வி, செல்வம் போல நெருப்பில் வேகாதது; வெள்ளத்தால் கொண்டு போகப்படாதது; அரசராலும் கவர்ந்துகொள்ள முடியாதது; பிறர்க்கு நிறையக் கொடுத்தாலும் சிறிதும் குறைவுபடாதது; தோண்டத் தோண்ட (நீர்) ஊறும் மணற் கேணி போல—எடுக்க எடுக்க (பிறர்க்குச் சொல்லச் சொல்ல)க் குறையாமல் (அறிவு) வளர்ச்சியடைவது; கள்வரால் திருடிக் கொண்டுபோக முடியாதது. நாட்டை ஆளும் அரசனும் தன் ஊரளவே சிறப்புச் செய்யப்படுவான்; வெளியூரில் சிறப்புச் செய்யப் பெறான். ஆனால் கற்றவனோ எனின் செல்லும் இடம் எல்லாம் சிறப்படைவான்.

" மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்,
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் ;—மன்னற்குத்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லை ; கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு."

என்னும் பெரியோர் பொன்மொழியும் இக்கருத்தே பற்றி வந்ததன்றோ? எனவே, கல்வி செல்வத்தினும் சிறந்தது என்பது ஒருதலையாகும்.

## கல்வி கற்றல்

" 'இளமையிற் கல்' என்றும், 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்றும் பெரியோர் கூறியுள்ளனர். இவையனைத்தும், 'கல்வி கற்க ஏற்ற பருவம் இளமைப் பருவமே' என்பதை நமக்குத் தெரிவிக்கவில்லையா? பெண்ணே, இளமைப் பருவத்தில்தான் பிள்ளைகளின் மனம் மாசற்று இருக்கும்; உலக விவகாரங்களில் கருத்துச் செலுத்தாத பருவம் அதுவே. அப்பொழுது படிக்கும் படிப்பு 'பசுமரத்து ஆணி போல்' நன்றாக உள்ளத்தில் அமையும். ஆகையால், இத்தகைய சிறந்த பருவத்தில் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிக் கல்வி கற்று வருமாறு பெற்றோர் செய்ய வேண்டும். பிள்ளைகளும் இத்தகைய பருவத்தை வீணாக்காமல் கல்வி கற்று அறிஞர்களாதல் வேண்டும்; உத்தியோகக் கல்வி கற்று, வேலையில் அமர்ந்தபின்—குடும்ப நிலையை ஏற்ற பிறகு ஒழுக்கக் கல்வி சம்பந்தப்பட்ட உயரிய நூல்களை விடாமல் கற்க வேண்டும். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' ஆதலால், உயிரினும் மேலானதான ஒழுக்கத்தைத் தரும் சிறந்த நூல்களைத் தொடர்ந்து படிப்பதே அவர்களின் தலைசிறந்த கடமையாகும். பிள்ளைகள், அவ்வண்ணம் கற்றவற்றை அடிப்படையாகக் கொண்டே தம் வாழ்க்கை என்னும் கவினுறு மாளிகையை அமைத்தல் வேண்டும். இது கருதியே,



" கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக,"

என்று நம் பெரும் புலவர் வள்ளுவர் கூறிச் சென்றார்.

## கல்வியின் பயன்

" மேலும், கற்றவண்ணம் ஒழுகி, 'நாம் அறியாவண்ணம் இவ்வுலகை நடத்துவிக்கும் (நம் சக்திக்கும் மேற்பட்ட) பொருள் ஒன்று உண்டு. அப்பொருளே இறைவன். அவன் முடிவற்ற ஞானமுடையவன். அவனை நாம் எண்ணி எண்ணி, உள்ளம் கசிந்து ஆன்ம வளர்ச்சி அடைய முயல வேண்டும்' என்று கருதி அப்பரம் பொருளை வழிபாடு செய்பவனே மேலானவன்; உண்மையான—முழு அறிவு பெற்றவன். இங்ஙனம் உள் உணர்ச்சி பெறாதவன் கற்ற கல்வி பயனுடைய கல்வியாகாது என்பதனை, நம்மவர்க்கு வான்புகழ் தேடித் தந்த வள்ளுவனார்,

" கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் "

என்னும் அடிகளால் விளக்கிப் போந்தார்.

" அருங்குண நங்காய், இவ்வாறு மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் கல்வி, செல்வம் இவ்விரண்டிற்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளை நன்கு உணர வேண்டும்; வாழ்க்கையை உண்மையான வாழ்க்கையாகச் செய்யும் கல்வி கற்க வேண்டும்; பின்னர்க்

கற்ற வண்ணம் நின்று தம் கடமைகளைச் செய்ய வேண்டும்; இறைவன் மனம் மகிழப் பிறர்க்கு உதவி வாழ்ந்து ஈறிலா இன்பம் அடைய வேண்டும். இதுவே சிறப்புடைமையாகும். ஆதலால், அருந் தவத்தாற் பெற்ற நம் பிள்ளையை நீ எவ்வகையில் வாழவைக்க விரும்புகிறாய்? நீயே நன்கு யோசித்துச் சொல்வாய்.''

## இலவசக் கல்வி

மெய்ப்பேட்டில் வேதியர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த சிவபக்தர். காளத்தியப்பரும் சிவ பக்தர். ஆதலின் அவர் காளத்தியப்பர்மீது மிக்க அன்புடையவராக இருந்தார். அவர் காளத்தியப்பர் கவலையைப் போக்க விரும்பினார்; அரிய நாயகர்க்கு இலவசமாகக் கல்வி கற்பிக்க இசைந்தார். அப்பெரியவர் அரியநாயகரது நுட்ப அறிவைச் சில நாட்களிலே கண்டுகொண்டார். 'எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்' என்பது பெரியோர் வாக்கு; அஃதாவது இலக்கியமும் கணிதமும் இரண்டு கண்களாகக் கருதப்பட வேண்டும் என்பது பொருள். அரியநாயகர் அந்த இரண்டிலும் வளர்பிறை போல அறிவு வளர்ச்சி பெறலானார்.

## உடற் பயிற்சி

மெய்ப்பேட்டுக் கிராமத்து இளைஞர் சிலம்பம், குத்துச் சண்டை, வாள்வீச்சு முதலியவற்றைக் கற்கப் பயிற்சிக்கூடம் ஒன்று இருந்தது. பிள்ளைகள் பலர் அக்கூடத்தில் பயிற்சி பெற்றனர். அஞ்சா நெஞ்சம் படைத்த அரியநாயகர் அக்கூடத்தில் சேர்ந்து பயிற்சி பெறலானார். அவர் பதினாறு வயதிற்குள் உடற்பயிற்சி விளையாட்டுகளையும் போர்ப் பயிற்சி விளையாட்டுகளையும் குறைவறக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அவரே அவ்வூர் இளைஞருள் கல்வியிலும் பிற பயிற்சிகளிலும் முதல்வராக விளங்கினார். அதனால் இளைஞர் அனைவரும் அவரைப் பாராட்டினர்; தங்கட்குத் தலைவராக அவரை மதித்து அன்புடன் நடந்து வந்தனர்.



## ஒரு நாள் மாலை

மெய்ப்பேட்டுப் பிள்ளைகள் ஒருநாள் மாலை ஊர் வெளியில் மற்போர், சிலம்பப் பயிற்சிகளைச் செய்துகொண்டு இருந்தனர். அப்பொழுது அவ்வழியே சாஸ்திரியார் ஒருவர் வந்தார். அவர் கைரேகை, சோதிடம் முதலியவற்றில் வல்லவர். அவர் பிள்ளைகள் விளையாட்டுகளைக் கவனித்தார். அரியநாயகரின் விளையாட்டில் அவர் கருத்துச் சென்றது. அவர் அவரைக் கூர்ந்து கவனித்தார்; அவரை நெருங்கி, "தம்பீ, நான் சிலம்பத்தில் உன் கை வண்ணம் கண்டேன்; உனது கை இரேகை வண்ணத்தையும் காண விரும்புகிறேன், காட்டு'' என்றார்.

## வருவது உரைத்தல்

அரியநாயகர் பெரியோரிடம் மிக்க மதிப்புடையவர்; வணக்க ஒடுக்கம் உடையவர். அதனால் அவர் அப்பெரியவரை முதலில் வணங்கினார்; பின்னர்ச் சிறிது வெட்கத்துடன் தம் கையைக் காட்டினார். இரேகை சாஸ்திர நிபுணர் சிறுவர் கையை உற்று

நோக்கினுர். அரியநாயகர் அவரது முகத்தை உற்று நோக்கினுர். முதியவர் முகம் நொடிக்கு நொடி வேறுபட்டது. முடிவில் அப்பெரியவர் அரியநாயகரைப் பார்த்து,

"அப்பனே, நான் சொல்வதைக் கேள்: உனக்குச் சிறந்த அரசயோகம் இருக்கின்றது. நீ அரசரால் நன்கு மதிக்கப்படுவாய்; குடிகளால் போற்றப் படுவாய். அரசரை ஆக்கும் சக்தி உனக்கு உண்டாகும். உன்னுல் இந்நாடு சிறப்படையும். உனது பெயரும் புகழும் இந்நாட்டில் என்றும் நிலைபெறும். நீ இச்சிறிய கிராமத்தில் இருத்தல் ஆகாது. நீ உடனே விஜயநகரம் செல்; அங்கு அரசரது சேவையில் பங்குகொள்; படிப்படியாக உயர்வைப் பெறுவாய். நீ நன்னிலையில் இருக்கும் பொழுது நான் அல்லது என் மக்களில் ஒருவன் உன்னிடம் வந்து, இப்பொழுது நான் சொன்னதை நினைவூட்டினுல், உனது சம்பத்தில் நான்கில் ஒரு பகுதியேனும் கொடுப்பாயா? பிராமணன் வாக்குப் பலித்ததே என்ற நன்றி இருக்குமா?" என்று கனிவுடன் கூறிக் கேட்டார்.

அரியநாயகர், "ஐயனே, தாங்கள் சொல்வது போல நடந்தால் தங்களை ஒருபோதும் மறவேன். நானே ஏழை......" என்று நாணிக் கூறினுர். பெரியவர், "அப்பனே, நீ இப்பொழுது ஏழை என்பதை நான் நான்கு அறிவேன். நான் சொன்னபடி நீ விஜயநகரம் சென்று இரு; சிறிது காலத்திற்குள் அரச பதவியை அடைவாய். நீ அப்பொழுது என்னை நினைப்பாயா? நினைத்து எனக்கு உதவி செய்வாயா?" என்று கேட்டார்.



**வாக்குறுதி**

அரியநாயகர் அவரை அன்புடன் நோக்கி, "பெரியீர், தாங்கள் ஐயப்படுதல் நியாயமே. 'பணம் கைவரப் பெறின், அருள் உள்ளம் படைத்த பெரியவரும் மனம் மாறுபடுவர்' என்று பெரியோர் கூறுகின்றனர். உண்மை அப்படி இருக்க, என்னைப் போன்ற சாதாரணச் சிறுவனைப்பற்றித் தாங்கள் சந்தேகம் கொள்ளுதல் சரியானதே. நான் தங்கள் யோசனைப்படி விரைவில் விஜயநகரம் செல்வேன். தங்கள் ஆசியும் என் நல்வினையும் சேர்ந்து எனது நிலைமையைத் தாங்கள் கூறியதுபோல உயர்த்துமாயின், என் சொத்தில் கால் பகுதியை உங்கட்குத் தருதல் உறுதி. ஐயம் வேண்டா" என்றனர்.

**ஓலையில் எழுதுதல்**

சாஸ்திரியார் விடவில்லை; தம்பீ, "உன் வாக்குறுதியை ஓர் ஓலையில் வரைந்து கொடு" என்ருர். அரியநாயகர் அதற்கு இணங்கினுர். உடனே பெரியவர் எழுத்தாணியோடு கூடிய ஒரு சூரிக்கத்தியைத் தம் இடுப்பிலிருந்து எடுத்தார்; பக்கத்தில் கீழே காய்ந்து கிடந்த ஒரு பனை ஓலையை எடுத்தார்; அதனைச் சீவித் துண்டித்தார்; ஓலை நறுக்கையும் எழுத்தாணியையும் இளைஞர் கையிற் கொடுத்தார். அரியநாயகர், "எனக்கு அரசயோகம் வந்த காலத்தில் இச்சீட்டை என்னிடம் காட்டுபவர்க்கு எனது சம்பத்தில் கால்பாகம் தட்டாது தருவேன்," என்று எழுதிக் கையெழுத்து இட்டார்; பின்னர் அதனை அன்புடன் சாஸ்திரியாரிடம் கொடுத்து வணங்கினுர்.

### சிறுவர் குறும்பு

அரியநாயகர், "ஐயா, உங்கள் ஊர்—பெயர் ஒன்றும் தெரிவிக்கவில்லையே?" என்று கேட்டார். சாஸ்திரியார், "அவை உனக்கு வேண்டுவதில்லை," என்றார். உடனே அங்கு இருந்த இளைஞருள் ஒருவன், "குறி பொய்க்குமாயின் தம்மை ஏளனம் செய்வர் என்னும் அச்சத்தால் சாஸ்திரியார் தமது முகவரி கூறவில்லை," என்றான். சாஸ்திரியார், "உண்மை பிறகு தெரியும்" என்றார். அவ்விளைஞன், "குறி பலியாவிட்டால் நீங்கள் என்ன கொடுப்பீர்கள்?" என்று குறும்பாகக் கேட்டான். முதியவர், "என் வறுமை முழுவதையுமே கொடுப்பேன். நான் வேறு என்ன தரமுடியும்? என் சோதிடத்தில் ஐயப்பட வேண்டா," என்று கூறி அகன்றார்.

## 2. விஜயநகரப் பேரரசு

### இந்தியாவில் முஸ்லிம்கள்

வட இந்தியா கஜ்னி முஹம்மது படையெடுப்புகளினால் நிலைதளர்ந்தது. வட இந்தியாவில் இருந்த இராஜபுத்திரரும் தமக்குள் ஒற்றுமை இன்றிச் சச்சரவிட்டுக்கொண்டு இருந்தனர். எல்லா அரசரையும் அடக்கி ஆளத்தக்க பேரரசன் அப்பொழுது வட இந்தியாவில் இல்லை. அதனால் அயல் நாட்டு முஸ்லிம்கள் எளிதாக இந்தியா வரலாயினர்; ஒற்றுமையற்ற அரசருள் ஒருசாரார் துணையைக் கொண்டு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை நிலைநாட்டினர்; பின்னர்ச் சிறிது சிறிதாக வட இந்தியா முழுவதையும் தங்கள் ஆட்சிக்குக் கொணர்ந்தனர்.

### தக்ஷிணத்தில் முஸ்லிம் ஆட்சி

கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பாதியில் தக்ஷிணத்தில் பெரிய முஸ்லிம் படையெடுப்புகள் அடிக்கடி ஏற்பட்டன. அப்படையெடுப்புகளால் விந்தியமலைக்குத் தெற்கே இருந்த யாதவர், காகதீயர், ஹொய்சளர், பாண்டியர் நிலைதளர்ந்தனர். யாண்டும் கொள்ளையும் குழப்பமும் நிலவின. முஸ்லிம் ஆட்சி தக்ஷிணத்தில் ஏற்பட்டது. மதமாற்றம் முதலியன நடைபெற்றன. இம்மாறுபாடுகளைக் கண்ட இந்துப் பெருமக்கள் மனம் புண்ணுயினர். இந்து மதத்தைக் காக்கத்தக்க பேரரசு ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று அப்பெருமக்கள் சிந்திக்கலாயினர்.






### விஜயநகர அரசு

அப்பெருமக்களுள் **ஹரிஹர ராயர், புக்க ராயர்** என்ற இரு சகோதரரும் சிறந்தவர்.* அவர்கள் இருவரும் துங்கபத்திரை யாற்றின் கரையை அடைந்தனர். அவர்கள் குரு **வித்யாரண்யர்** என்பவர். அவரது ஆசிகொண்டு அவ்விருவரும் துங்கபத்திரைக் கரையில் ஒரு நகரத்தை அமைத்தனர்; அதற்கு **வித்யா நகரம்** என்று தம் குருவின் பெயரை இட்டனர். அதுவே நாளடைவில் **விஜயநகரம்** என வழங்கலாயிற்று.

நகரத்தை உண்டாக்கிய பெருமக்கள் இருவரும் அங்குப் புதிய அரசரை ஏற்படுத்தி நேர்மையாக அரசாளலாயினர். முஸ்லிம் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளிலிருந்து இந்து சமயப்பற்று மிகுந்த பெருமக்களும் வீரரும் படைத்தலைவரும் பிறரும் நாளடைவில் இப்புதிய நகரத்திற் குடிபுகலாயினர். சகோதரர் இருவரும் தங்கள் வாள்வலியாலும் அறிவு நுட்பத்தாலும் நாட்டை விரிவாக்கி ஆண்டனர். மக்கள் தங்கள் சமயப்பற்றுடன் மன அமைதிகொண்டு வாழலாயினர்.

### விஜயநகரம்

விஜய நகரம் இயற்கை அரண்களுக்கு இடையே அமைப்புண்ட நகரம். அதனைச் சூழ மலைகளும் காடுகளும் இருந்தன. துங்கத்திரை யாறு நகரத்தின் இடையில் பாய்கின்றது. விஜய நகர அரசருள் சிறந்தவரான கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் அந் நகரம் மிக உயரிய நிலையில் விளங்

* இவர்களுடன் பிறந்தவர் வேறு மூவர் இருந்தனர். அவர்கள் கம்பணர், முத்தப்பர், மாரப்பர் என்பவர்.

கலாயிற்று. அதனைக் கண்ணுற்ற இத்தாலிய அறிஞர் ஒருவர், "விஜயநகரம் போக பூமி; துங்கபத்திரையின் வடகரையில் 'ஆனைகுந்தி' நகரமும் கோட்டையும் அமைந்திருக்கின்றன. தென்கரையில் விஜயநகரம் விளங்குகிறது. நாற்புறமும் குன்றுகளும் பாறைகளும் மிகுதி. அவற்றை, நகரைக் காத்து நிற்கும் கல்மதில்கள் பிணைத்து நிற்கும். நகரத்தின் சுற்றளவு எழுபது கல்லுக்கு மேல் இருக்கலாம். இந்த எல்லைக்கு உட்பட்ட பெரிய நகரத்தில் பளிங்குக் கற்கள்மீது பாயும் கால்வாய்களை எங்கும் காணலாம்," என்று வியந்து கூறியுள்ளார்.

## கட்டடங்கள்

நகரம் முழுவதிலும் வானளாவிய மாடமாளிகைகள் விளங்கின. ஆவணத்தெருக்கள் பேரியாறு போன்ற காட்சி அளித்தன; மக்கள் மாலைப் பொழுதில் உலாவுவதற்கு உரிய பூங்காவனங்கள் பொலிந்திருந்தன. கண்ணைக் கவரும் சிற்பச் சாலைகள், ஓவியக் கூடங்கள், மனத்தை ஒருவழிப் படுத்தும் திருக்கோவில்கள், கல்வி அளக்கும் பட்டி மண்டபங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், நடனசாலைகள், நாடக அரங்குகள், பல்கலைக் கழகங்கள் முதலியன அந்நகரத்தைப் போகபூமி ஆக்கின.

## அரண்மனை

அரண்மனையைச் சுற்றி ஏழு மதில்கள் இருந்தன. அரண்மனைக்கு வலப்பக்கத்தில் மந்திர ஆலோசனைச் சபை இருந்தது. அச்சபை மண்டபம் தொண்ணூறடி நீளமும் முப்பதடி அகலமும்



கொண்டது. அம்மண்டபத்தின் கோடியில் இருந்த உயர்ந்த ஆசனத்தில் இருந்து நீதிபதி வழக்குகளை விசாரித்தல் வழக்கமாம். அரசர் மாளிகைக்கு இடப்பக்கத்தில் தங்கசாலை இருந்தது. அதனில் பொன், வெள்ளி, செம்பு நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன. அரண்மனை கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க அழகுடையது. அரசரது ஆலோசனை மண்டபம், கொலு மண்டபம், நர்த்தன மண்டபம், நாடகமேடை, அரசமாதேவியர் வாழ்ந்த அந்தப்புர மாளிகைகள், பூஞ்சோலைகள், செய்குன்றுகள், செய்குளங்கள், படைக்கலக் கொட்டில் முதலிய பலவகைக் கட்டடங்களையும் இடங்களையும் தன் அகத்தே பெற்ற அரண்மனை காணத்தக்க ஒரு காட்சிக் கூடமாகும்.

## கோவில்கள்

நகரத்தில் சமணர் கோவில்கள் இருந்தன. பம்பாதீசுவரர் கோவில் காணத்தக்கது. அக்கோவிலில் கருங்கற்களில் அமைந்துள்ள சிற்ப வேலையின் திறம் கண்டு களிக்கத்தக்கது. நகரத்தின் தென்கிழக்கு மூலையில் மால்யவந்தம் என்னும் மலை முகட்டில் இரகுநாத சுவாமி கோவில் இருக்கின்றது. அது மிக்க கம்பீரமாக நின்று பக்க இடங்களை அழகு பெறச் செய்கிறது. அக்கோவிலில் உள்ள சிற்ப வேலை மிகச் சிறந்தது. அக்கோவிலில் ஒரு மண்டபம் உண்டு. அதன் கருப்புத் தூண்களில் உள்ள சிற்பங்கள் பெரிதும் வியந்து பாராட்டத் தக்கவை. சமயம், வரலாறு, ஆடல்-பாடல், போர் இவைகளை உணர்த்தும் அச் சிற்பங்களும் பிற ஓவியங்களும் அக்காலச் சிற்ப-

ஓவியக் கலைகள் அடைந்த உயர்வினைக் காட்டத் தக்கவை ஆகும்.

துங்கபத்திரைக் கரையில் விஜய விட்டல சுவாமி கோவில் இருக்கிறது. அக்கோவிலில் ஓர் இரதம் இருக்கின்றது. அஃது ஒரே கல்லில் செய்யப்பட்டது. அதன் உருளைகளும் அடித் தட்டுகளும் மேல் விமானமும் சிற்பங்களும் அக்காலச் சிற்பிகள் ஆற்றலை விளக்கத்தக்கவை.

அரண்மனைக்குள் இராமசுவாமி கோவில் இருந்தது. அதன் அழகிய அகன்ற மண்டபங்கள் அக் கோவிலுக்குத் தனிச்சிறப்பை அளித்தன. கோவில் மதிற் சுவர்களில் வீரர் உருவங்களும் குதிரைகளின் வரிசைகளும் யானைகளின் வரிசைகளும் ஒன்றன் கீழ் ஒன்றாகத் தெளிவாகத் தெரியும்படி செதுக்கப்பட்டு இருந்தன.

நகரத்தில் அநுமார் கோவில்கள் பல. வாலி, சுக்கிரீவன் ஆண்ட கிஷ்கிந்தை என்ற இடத்திற்றான் நகரம் அமைந்திருந்தது. அதனால் அநுமார் கோவில்கள் பல காணப்பட்டன. பாறைகளில் எல்லாம் அநுமார் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. சுற்றுப்புற மலைகளில் ஆயிரக்கணக்கான குரங்குகள் வாழ்ந்து, தம் பழமையை மெய்ப்பித்தன; இன்றும் மெய்ப்பிக்கின்றன.

### கடைத் தெருக்கள்

அரண்மனைக்குப் பக்கத்தில் எதிர் எதிராக நான்கு கடைத்தெருக்கள் இருந்தன. ஒவ்வொரு தெருவும் மிக்க நீளமாகவும் அகலமாகவும் இருந்தது. கடைத்தெருக்களின் கோடியில் குளம் ஒன்று இருந்தது. அதற்குப் போகும் பாதைகள்



அழகானவை. ஒவ்வொரு தொழிலை மேற்கொண்ட மக்களுடைய கடைகளும் வரிசை வரிசையாக இருந்தன. உயர்தர நகைவகைகளும் நவரத்தின வகைகளும் நகரத்தில் சாதாரணமாக விற்கப்பட்டன. நகரத்தில் ரோஜா மலர்கள் நாளும் விற்பனையாயின. மலர்க் கடைகளே மிகுதியாக இருந்தன.

### அரசர் கொலு மண்டபம்

கொலு மண்டபத்தைக் கண்டு வியந்த அயல் நாட்டு யாத்திரிகர் பலர் பாராட்டி எழுதியுள்ளனர். அங்கு ஒரு பக்கம் ஆடல் பாடல்கள் நடந்துகொண்டிருக்கும்; மற்றொரு பக்கம் வேதசாஸ்திர விற்பன்னர்தம் வாதங்கள் நடைபெறும்; பிறிதொரு பக்கம் அரசரைக் கண்டு அன்புகொள்ள வந்த அந்நிய நாட்டுத் தூதுவர் கூட்டம் காத்திருக்கும். மாகாணத் தலைவர்கள் அனுப்பிய தூதரும் அரசாங்க உயர் அலுவலாளரும் அரசியல் செய்திகளைச் சொல்ல ஒரு பக்கம் காத்திருப்பர். துங்கபத்திரை முதல் குமரி முனைவரை இருந்த சிற்றரசர் விடுத்த தூதுவர் ஒரு பக்கம் காத்திருப்பர்.

### விஜயநகரப் பேரரசர்

இங்ஙனம் பலவகையாலும் சிறப்புற்று விளங்கிய விஜயநகரத்தைத் தலைநகராகக் கொண்ட அரசர்கள் தங்கள் வாள் வன்மையாலும் படை வன்மையாலும் தென் இந்தியா முழுவதையும் வென்று ஆண்டுவந்தனர். அவர்கட்கு 'மஹாராயர், மஹாராயலு' என்ற பட்டப் பெயர்கள் வழங்கின. அவர்கள் கருநாடகத் தெலுங்கு

மன்னர்கள். பேரரசர்க்கு அடுத்தபடி மாகாணங்களை ஆண்டவர் 'மண்டலேசுவரர்' எனப்பட்டனர். மாகாண அரசாங்கங்களை நடு அரசாங்கம் இணைத்து நின்றது.

பேரரசரிடம் ஏறக்குறைய பதினைந்து லக்ஷம் போர்வீரர் இருந்தனர்; யானைகள் ஆயிரக்கணக்கில் இருந்தன; குதிரைகளும் ஆயிரக்கணக்கில் வாழ்ந்தன. எனவே, பேரரசரிடம் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் மூவகைப் படைகளும் இருந்துவந்தன. முதலாம் புக்கராயர் புத்திரரான **கம்பண உடையார்** என்பவர் அப்படை வன்மை கொண்டு சேர-சோழ-பாண்டிய நாடுகளை வென்றார்; தென்னாட்டு மஹா மண்டலேசுவரராக இருந்தார். கிருஷ்ணதேவராயர் காலத்தில் தென்னாட்டு மஹா மண்டலேசுவரர் **நாகம நாயக்கர்** என்பவர்.

## கிருஷ்ணதேவராயர்

இவர் ஏறக்குறைய கி. பி. 1509-இல் பேரரசர் ஆனார். அப்பொழுது இவருக்கு வயது இருபது. சிங்கக்குட்டிக்கு வீரம் இயல்பாகவே பிறப்புடன் பிறந்து வளர்ந்து வருதல் இயல்பு அல்லவா? அதுபோலவே அரசமரபில் வந்த கிருஷ்ணதேவ ராயர் அஞ்சாமை, வீரம், அரசியல் அறிவு முதலிய பண்புகள் வாய்க்கப் பெற்றிருந்தார். அவர், பேரரசுக்கு அடங்காமல் இருந்த சிற்றரசர்களை அடக்கி ஆண்மை காட்டியவர்; வடக்கே பிறவிப் பகைவராக இருந்த முஸ்லிம் அரசர் ஐவரையும்* நடுங்க

* ஐவர்—அஹ்மத்நகர், பிஜப்பூர், கோல்கொண்டா, பிதார், பீரார் என்ற பெயர்களைக் கொண்ட நாடுகளை ஆண்டவர்.



வைத்தவர். இவருடைய பெருவெற்றிகட்கும் செங்கோல் அரசுக்கும் காரணமாக இருந்தவர் **அப்பாஜி** என்ற **திம்மரசு** என்னும் அமைச்சர் ஆவர். இராயர் போர்ச்சுகீசியருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களைக் கோவாவில் நிலைக்க வைத்தார். போர்ச்சுகீசியர் எழுதிவைத்த செய்திகளிலிருந்து இவரது வரலாறு, ஆட்சிமுறை, பேராண்மை முதலியவற்றைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

இப்பேரரசர் பெரும் புலவர். இவரது அவையில் பெரும்புலவர் எண்மர் இருந்தனர். அவர்கள் (1) அல்லசானி பெத்தன்னா, (2) நந்தி திம்மன்னா, (3) அய்யலராஜு ராமபத்திர கவி, (4) தூர்ஜடி, (5) மாதய்யகாரி மல்லன்னா, (6) பிங்கலி சூரன்னா, (7) இராமராஜ பூஷணர், (8) தெனாலி இராம கிருஷ்ணர் என்பவர். அவர்கள் 'அஷ்ட கஜங்கள்' எனப்பட்டனர். அப்பெருமக்கள் கூட்டுறவினால் பேரரசர் புலவராகி, ஆண்டாள் வரலாற்றைத் தெலுங்கில் பாடியுள்ளார்.* இவரது மகளான இலக்ஷ்மிதேவி என்பவளும் தெலுங்கில் சிறந்த புலமை பெற்றவள்.

இங்ஙனம் பலவகையிலும் புகழ்பெற்று விளங்கிய கிருஷ்ணதேவராயர் கி. பி. 1509 முதல் 1530 வரை பேரரசராக இருந்தார். இப்பேரரசர் காலத்திற்றான் நமது அரியநாயகர் விஜயநகரம் செல்ல வேண்டும் என்று சோதிடர் கூறினார்.

* அதன் பெயர் ஆமுக்தமால்யதா என்பது.

# 3. விஜயநகரத்தில் அரியநாயகர்

## தெலுங்கு கற்றல்

அரியநாயகர் சோதிடரைவிட்டுப் பிரிந்து வீடு வந்து சேர்ந்தார்; சோதிடர் கூறிய செய்தியைப் பெற்றோரிடம் உரைத்தார். இராயரிடம் சென்று சேவை செய்வதெனில், தெலுங்கு மொழியில் பயிற்சி பெறவேண்டும். அக்காலத் தமிழகத்தில் இராயர் ஆட்சி பரவி இருந்தது; மண்டலேசுவரர் முதல் அரசியல் உத்தியோகஸ்தர் அனைவரும் தெலுங்கில் வல்லவராக இருந்தனர்; கல்விகற்ற தமிழ் அறிஞரும் அரசியல் மொழியாகிய தெலுங்கைக் கற்றிருந்தனர். ஆதலின், அரியநாயகர் தெலுங்கு கற்றுக்கொள்ள வசதி இருந்தது. நுட்ப அறிவு வாய்ந்த அவர் எளிதில் தெலுங்கு மொழியைக் கற்றுக்கொண்டார்; அதில் திறம்படப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்றார்.

## பெற்றோர் கலக்கம்

தம் முதுமையில் தம் தவமகனை எப்படிப் பிரிந்து இருப்பது என்பதே பெற்றோர்க்குப் பெருங் கவலையைத் தந்தது. காஞ்சிபுரத்திற்கும் விஜய நகரத்திற்கும் நெடுந்தொலைவு; பல நூறு மைல்களைக் கடந்து செல்லவேண்டும். மிகவும் எளிய தம் மகனை அவ்வளவு தூரம் நடந்து செல்ல விடுவதற்கு அப்பெற்றோர் மனம் துணியவில்லை.



## இளைஞர் முறையீடு

அரியநாயகர் பெற்றோர்க்கு ஆறுதல் கூறினார். ஆயினும் அவர்கள் மனத்துணிவு கொள்ளவில்லை. ஒருநாள் இளைஞர் தம் பெற்றோரை நோக்கி, "என் அருமைத் தாய் தந்தையரே, நான் உங்களுடன் இங்கு இருந்து வறுமையைத்தானே நுகர வேண்டும். சோதிடர் கூறியபடி விஜயநகரம் செல்லின், நல்ல நிலையை அடையலாம் அல்லவா? அப்பொழுது நமது குடும்பம் சுகமாக வாழ வழி உண்டாகும் அல்லவா? சோதிடர் கூற்றுப் பொய்த்துப் போயினும் சாதாரண உத்தியோகஸ்தனாகவாவது நான் இருக்க முடியும்; உங்களுக்கு வேண்டும் உதவி செய்யத் தவறேன். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,' என்று சொல்லிப் பொருள் ஈட்ட ஊக்கிய இத்தமிழ் நாட்டிற் பிறந்த நீங்கள், என்னைப் போகவிடாது தடைசெய்தல் அறமன்று; மனம் துணிந்து என்னை ஆசிகூறி அனுப்புங்கள்" என்று உருக்கமாக உரைத்தார்.

## பிரியா விடை

தம் பிள்ளையின் உருக்கமான பேச்சைக் கேட்ட பெற்றோர் அவரது பிடிவாதத்தைக் கண்டு அவர் விருப்பத்துக்கு உடன்பட்டனர். அரியநாயகரின் ஆசிரியர் ஒரு நல்ல நாளைக் குறித்தார். அந்த நாளில் அரியநாயகர் அன்னையார், தந்தையார், குரு ஆகிய மூவர் பாதங்களிலும் தம் முடிபடப் பணிந்து நின்றார். மூவரும் ஒருபால் மனமகிழ்ச்சியுடனும் மற்றொருபால் அவரைப்

பிரியவேண்டுமே என்ற வருத்தத்துடனும் போரா டினர்; ஆனால் இளைஞர் அகமும் முகமும் மலர்ந் திருந்ததைக் கண்டு மன ஆறுதல் பெற்று அவருக்கு ஆசி கூறி அனுப்பினர்.

## வழிப் பிரயாணம்

அரியநாயகர் பதினறு வயது இளைஞர்; நல்ல உடற்கட்டு உடையவர்; பரந்த மார்பும் முறுக்கு அமைந்த நரம்புக்கட்டும் பெற்றவர். அவர் விழிகள் பரந்த பார்வை உடையவை; உள்ளம் அஞ்சாமையை அணியாகக் கொண்டது.' ஆதலின் அவர் தனிப் பிரயாணம் செய்ய அஞ்சவில்லை; அவ்விளைஞர் தம் சிலம்புக் கழியையும் உடை வாளையும் எடுத்துக் கொண்டார்; பெற்றோர் - குரு- சோதிடர் இவர்தம் ஆசீர்வாதத்தின் துணையைக் கொண்டு புறப்பட்டார்.

அக்காலத்தில் விஜயநகரம் செல்வது எளி தன்று; நேரான பாதை எதுவும் ஒழுங்காக அமைந்திருக்கவில்லை. அவ்வளவு தூரத்தையும் கடக்கத் தக்க வண்டிகள் வசதியாக அக்காலத்தில் இல்லை. வண்டி அமர்த்திக்கொண்டு செல்ல அரிய நாயகரிடம் பொருளும் இல்லை. எனவே, அவர் ஏகம்பன் திருவருளை எண்ணிக் கால் நடையாகவே புறப்பட்டார்.

பெற்றோர் அவரிடம் கொடுத்த உணவு ஒரு நாளில் கரைந்துவிட்டது. அவர்கள் கொடுத்த சிறு பொருள் சில நாட்களில் செலவழிந்துவிட்டது. பின்னர் இளைஞர் பட்டபாடு கூறும் தரத்ததன்று. சில சமயங்களில் அவரது நிலையைக் கண்டு அவருடன் அவ்வழிச் சென்றவர் உபசரித்து



அன்னம் படைத்தனர். அவர் தங்கி இருந்த ஊர் களில் நல்லவர் சிலர் உணவு படைத்தனர். தமக்கு எதிர்பாராத வகையில் உணவு கிடைத்தபோதெல் லாம் இளைஞர் கச்சி - ஏகம்பனை எண்ணித் துதித் தார். அரியநாயகர் இங்ஙனம் பலவாறு துன்பப் பட்டு இறுதியில் தாம் அடைய விரும்பிய போக பூமி ஆகிய விஜயநகரத்தை அடைந்தார். அப் போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

## நகரத்தைப் பார்வையிடல்

அரியநாயகர் விஜயநகரத்தின் சிறப்பை வணிகர் மூலமாக முன்னர்க் கேட்டறிந்தவர்; ஆதலால், அந் நகரத்தை நன்ருகச் சுற்றிப்பார்க்க விரும்பினர். அவர் நகரத்தின் நடுநாயகமாக விளங்கிய அரண்மனை, அதன் எதிரில் அமைந் திருந்த கடைத்தெருக்கள், அரசியல் உத்தியோகஸ் தர்கள் வாழ்ந்த பெருந் தெருக்கள், நடன - நாடக- இசை மண்டபங்கள், உடற்பயிற்சி - போர்ப் பயிற்சிக் கூடங்கள், கல்விச் சாலைகள், மருத்துவச் சாலைகள் முதலியவற்றைப் பார்வையிட்டார்; பின்னர்க் கோவில்களைக் கண்டார்; அங்கு விளங்கிய சிற்ப - ஓவியங்களில் கருத்தைச் செலுத்தினர்.

## அறிவு நுட்பம்

இளைஞர் இவ்வாறு பேரழகு மிக்க கோநகரத் தைப் பார்வையிட்டுக்கொண்டே துங்கபத்திரை ஆற்றங்கரைக்கு வந்தார்; கரைமீது உட்கார்ந் தார். தமது எதிர்கால வாழ்வைப்பற்றி எண்ண

மிடலானுர். அப்பொழுது அவருக்குத் திடீரென ஓர் எண்ணம் உதித்தது. ‘இந்த விஜயநகரப் பேரரசு துங்கபத்திரை முதல் குமரி முனைவரை பரவி இருக்கின்றது. அதனில் நமது தமிழகம் தனிப்பட்ட மண்டலம். அதனை அரசப் பிரதிநிதியாக இருந்து கவனிப்பவர் மஹா மண்டலேசுவரர் அல்லவா? நாம், அவர் யாவர் என்பதை விசாரித்து அவரைக் காண்போம்; அவரிடம் நமது வறுமையைக் கூறி வேலை பெறுவோம்,’ என்பதே அந்த எண்ணம்.

உடனே அவர் உணர்ச்சி கொண்டவரைப் போல் எழுந்தார்; நேரே அரண்மனைப் பக்கமாகச் சென்ருர்; தக்காரைக் கண்டு தக்ஷிண மஹா மண்டலேசுவரர் பெயர், இருக்கும் மாளிகை இவற்றைக் கேட்டறிந்தார்; நேரே அம்மாளிகையை நோக்கி நடந்தார்.

### நாகம நாயக்கர்

தக்ஷிண மஹா மண்டலேசுவரர் நாகம நாயக்கர். அவர் பேரரசர்க்கு அடுத்த படியில் இருந்த பிரபுக்களில் சிறந்தவர். அப்பெரியவர் மிகச் சிறந்த போர் வீரர்; சேனைத் தலைவர்; அனுபவம் மிகுந்த அரசியல் நிபுணர். பேரரசர் அவரை மிக்க சிறப்புடன் நடத்தி வந்தார். அப்பெரியவரிடம் அரசியல் உத்தியோகஸ்தர் அனைவரும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். அத்தகைய சிறப்புடைப் பெரியவரைக் காணவே நமது அரியநாயகர் விரைந்து நடந்தார்.



### கணக்கர் வேலை

அரியநாயகர் நாகம நாயக்கர் மாளிகையை அடைந்தார். வாயிற்காவலர் அவரை நாயக்கர் முன் கொண்டு நிறுத்தினர். இளைஞர் அம் மண்டலேசுவரரைக் கண்டதும் இரு கைகளையும் கூப்பி வணங்கி, மிக்க அடக்கத்துடன் நின்ருர். நாகமர் இளைஞரை ஏற - இறங்கப் பார்த்தார். அரியநாயகரின் அலர்ந்த முகம் அவரை வசீகரப்படுத்தியது. அரியநாயகர் தமது வரலாற்றை மிகவும் உருக்கமாக உரைத்தார். அவர் வழியிற்பட்ட கஷ்டங்களைக் கேட்ட நாகமர் உள்ளம் கரைந்தது. ‘பதினறு வயதுடைய சிறுவன் இவ்வளவு தூரம் நடந்து தனது வறுமையைப் போக்க வந்திருக்கிருனே!’ என்பதை எண்ணி, அவர் இளைஞன் மீது இரக்கம் கொண்டார். அரியநாயகர் தெளிவான நடையில் தெலுங்கு பேசியதைக் கண்டதும் நாகமர் கொண்ட வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. அவர் இளைஞர்க்கு என்ன வேலை தரலாம் என்று யோசித்தார்; முடிவில் அவரைத் தம்மிடமே **கணக்கராக** அமர்த்திக்கொண்டார்.

### விசுவநாதர்

நாகம நாயக்கர் நெடுங்காலம் பிள்ளை இல்லாமல் வருந்திஞர்; தன் மனைவியாருடன் தீர்த்த யாத்திரை செய்தார்; இறுதியில் காசியை அடைந்து விசுவநாதப் பெருமானை வணங்கி வரம் கிடந்தார். விசுவநாதர் அருளால் அவருக்கு ஆண்மகவு பிறந்தது. நாகமர் அப்பிள்ளைக்கு **விசுவநாதன்** என்று பெயரிட்டு அருமையாக

வளர்த்துவந்தார்; அவருக்குத் தம் தகுதிக்கு ஏற்பப் போர்ப் பயிற்சியும் அரசியல் கல்வியும் புகட்டச் செய்தார்; விசுவநாதரைப் பதினைந்தாம் வயதில் கிருஷ்ணதேவ ராயரிடம் அடைப்பம் முதலிய சிறு வேலைகள் செய்ய விட்டார்.

விசுவநாதர் அழகு மிக்கவர்; அறிவிற் சிறந்தவர்; ஆண்மை உடையவர்; குதிரை ஏற்றம், யானை ஏற்றம், மற்போர், சிலம்பம், விலங்கு வேட்டை முதலியவற்றில் சிறந்து விளங்கினர்; அன்பு, அடக்கம், உண்மை முதலிய நற்குணங்கட்கு இருப்பிடமாக இலங்கினர். இத்தகைய வீர இளைஞரை யாரே விரும்பாதவர்? பேரரசர் அவரைத் தம் புதல்வராகக் கருதி அன்புடன் நடத்தி வந்தார்.

## வேலையில் மதிப்புப் பெறுதல்

அரியநாயகர் நாகம நாயக்கரிடம் கணக்கராக அமர்ந்தார் அல்லவா? அவர் அன்று முதல் தம் வேலையைச் சரிவரச் செய்துவந்தார். நாகமரிடம் இருந்த கணக்கர் கணக்கில் பல தவறுகள் செய்வது இயல்பு; ஆனல் அரியநாயகர் பார்த்துவந்த கணக்கில் பிழை என்பது மருந்துக்கும் ஏற்பட்டதில்லை. அதனல் நாகமர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; மற்றவரைக் கடிந்துகொண்டார். ஆனல் சில நாட்களுக்குப் பின் அனைவர் கணக்குகளும் பிழையற்றுக் காணப்பட்டன. நாகமர் உண்மையை உணர்ந்தார். அஃதாவது, 'அரியநாயகர் நாகமர் தம்மைப் புகழ்ந்து, ஏனையோரை இகழ்ந்ததை விரும்பவில்லை. அவர்களும் பாராட்டுக்கு உரியவர் ஆதல் வேண்டும் என்ற எண்ணத்துடன் நாள்தோறும் கணக்கை முடிக்கும் சமயத்தில் அவர் எல்லோர் கணக்கையும் பார்த்து ஒழுங்கு செய்துவந்தார்,' என்பதே ஆகும். இதனை உணர்ந்த நாகமர் அரியநாயகர்மீது அளவற்ற அன்பும் நம்பிக்கையும் கொண்டார்; அவரைத் தம் பிள்ளையாகவே மதித்து நன்மை செய்துவந்தார்.



## இளைஞர் இருவர்

அரியநாயகர் ஓய்வு நேரங்களில் தம் பழைய விளையாட்டுக்களைப் பயிலலானர். அவற்றைக் கண்ட நாகமர் விசுவநாதரை அவருடன் இணைத்தார். அந்த இணைப்பு அந்த இளைஞர் இருவரையும் ஆயுட்காலம் முழுவதும் பிணைத்துவிட்டது. இளைஞர் இருவரும் போர்ப் பயிற்சிகளில் பண்பட்ட புலமை எய்தினர். இருவரும் கண்கவர் வனப்பினர்; நல்ல உடற்கட்டு உடையவர்; சிறந்த போர்ப் பயிற்சிகளில் வல்லவர்; நல்ல ஒழுக்கத்தினர்; தெய்வ பக்தியிற் சிறந்தவர். இளைஞர் இருவரும் நாளடைவில் ஓர் உயிரும் ஈருடலும் என்னும்படி இணைந்து இருந்தனர். அந்த இளைஞர் இணக்கத்தைக் கண்ட நாகம நாயக்கரும் அவர் மனைவியாரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

## பேரரசர் அறிமுகம்

விசுவநாதர் நாள்தோறும் பேரரசருடன் இருப்பவர். அவர் தம் உயிர் நண்பரான அரியநாயகரைப் பற்றிச் சமயம் பார்த்துப் பேரரசரிடம் சொல்லியிருந்தார். அதன் பிறகே விசுவநாதர்

ஒருநாள் அரியநாயகரைப் பேரரசரிடம் அழைத்துச் சென்ருர். பேரரசர் தமிழ் இளைஞருடைய முகப் பொலிவையும் தோற்றத்தையும் கண்டு மகிழ்ந்தார் ; அரியநாயகரின் வரலாற்றைக் கேட்டு அவர்மீது அன்பு கொண்டார். அன்று முதல் அரியநாயகர் பேரரசர் அன்புக்கு உரியவர் ஆனர்.

# 4. அரண்மனைச் சேவகம்

### பேரரசர் சபை

ஒருநாள் அரசர் அவையில் பெருமக்கள் கூடியிருந்தனர். விண்மீன்களுக்கு நடுவில் முழுமதி விளங்குதல் போல அமைச்சர், பிரபுக்கள், சேனைத் தலைவர் முதலிய அலுவலாளர்கட்கு நடுவில் பேரரசர் விளக்கமாக அமர்ந்திருந்தார். பக்கத்தில் விசுவநாதர் நின்றிருந்தார். நாகம நாயக்கருடன் சென்றிருந்த அரியநாயகர் ஒரு தூணைப் பற்றிக்கொண்டு நின்றிருந்தார்.

### பேரரசர் கேள்வி

முதலில் அரச காரியங்கள் கவனிக்கப்பட்டன. பின்னர்ப் பேரரசர் எல்லோரையும் பார்த்து அளவளாவிக்கொண்டு இருந்தார். அப்பொழுது அவர், " சபையோர்களே, இன்றுகாலை நாம் அரண்மனைக் குளத்தில் நீராடச் சென்ருேம். அப்பொழுது அங்கு அழகிய தாமரை மொட்டு ஒன்று காணப்பட்டது. அது முக்கால் சாண் நீளம் இருக்கும். அதன் தாள் முழுவதும் தண்ணீருக்குள் இருந்தது. மொட்டு மட்டுமே நீர் மட்டத்துக்கு மேலாக நின்றது. நாம் குளத்தில் குதித்த அதிர்ச்சியால் அந்த மொட்டு மூன்றே முக்கால் சாண் தூரம் பின் சென்றது. அப்பொழுது அதன் தலையும் நீர் மட்டத்துக்குச் சமமாக நீர்க்குள் மறைந்துவிட்டது ; ஆயின், அம் மொட்டு நின்றிருந்த இடத்தில் குளத்தின் ஆழம் என்ன ?" என்று கேட்டார்.

## அரியநாயகர் பதில்

"இதற்கு யார் விடை கூற முடியும்?" என்றனர் சிலர். வேறு சிலர் முணுமுணுத்துக் கணக்குப் பார்க்கத்தொடங்கினர்; சிலர் ஒன்றும் புரியாது விழித்தனர். ஒருவர், "எவராலும் சொல்ல முடியாது" என்றனர். மற்றொருவர், "நான் போய் அளந்து பார்த்து வருகிறேன்" என்று புறப்பட்டனர். பேரரசர் அவர்களைப் பார்த்துக் கலகல என்று நகைத்தார். யாவரும் திகைத்து நின்றனர்.

அப்பொழுது அரியநாயகர், "பேரரசர் கட்டளையிடின், அடியேன் அதற்கு விடை தெரிவிப்பேன்," என்று வணக்கத்துடன் தெரிவித்தார். உடனே எல்லோரும் அரியநாயகரை வியப்புடன் நோக்கினர். பேரரசர், "யார் அது, அரியநாயகமா? முன்னே வா; சொல் கேட்போம்," என்றனர். அரியநாயகர் பேரரசர் முன்சென்று வணங்கி, "அவ்விடத்தில் குளத்தின் ஆழம்—அஃதாவது தாமரைத் தண்டின் நீளம், பேரரசர் பக்கத்தில் நிற்கும் விசுவநாத நாயக்கர் உயரமேதான்," என்று பணிவுடன் பகர்ந்தார்.

பேரரசர் உடனே விசுவநாதர் பக்கம் திரும்பி, "உன் உயரம் என்ன, விசுவா?" என்று கேட்டார். அவர் பணிந்து, "ஒன்பது சாண்" என்று பதில் கூறினர்.

உடனே சபையில் இருந்த கணித சாஸ்திரி ஒருவர் கணக்குப் பார்த்து, "விடை சரிதான்" என்றார். பேரரசர் ஒருவனைக் குளத்திற்கு அனுப்பினர். அவன் தாமரைத் தண்டினை அளந்துவந்து, "குளத்தின் ஆழம் ஒன்பது சாண்" என்றான்.



பேரரசர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். அவர் அரியநாயகரைப்பார்த்து, "நீ சொன்னது சரி; விசுவநாதன் உயரத்தை எப்படி அளந்தாய்?" என்று கேட்டார்.

அரியநாயகர் வணங்கி, "பெருமானே அடியேன் உயரம் எட்டரைச் சாண்; விசுவநாதர் என்னைவிட அரைச் சாண் அதிக உயரம் உடையவர். கண் அளவாததா கை அளக்கும்?" என்று பதில் அளித்தார்.

## அரண்மனைக் கணக்கர்

பேரரசர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. அவர் நாகமரைப் பார்த்து, "இன்று முதல் அரியநாயகம் நமது அரண்மனைக் கணக்கனாக இருக்கட்டும்," என்றார். அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். பேரரசர் அன்றுமுதல் அரியநாயகரிடம் அன்பும் மதிப்பும் கொண்டு நடந்துவந்தார். அரியநாயகர் கணக்கில் வல்லவர் என்பதை நாளடைவில் எல்லா அலுவலாளரும் உணர்ந்து கொண்டனர்; உணர்ந்து அவரிடம் மரியாதையாக நடந்து வந்தனர்.

## நவராத்திரி விழா

விஜயநகரத்தில் நவராத்திரி விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. விழாவின் கடை நாளில் காட்டு எருமைக்கடா ஒன்றைப் பலியிடுதல் வழக்கம். அரியநாயகர் அரண்மனைச் சேவகம் பெற்ற அந்த ஆண்டில் பலிக்காகப் பிடித்து வந்திருந்த எருமைக்கடா மிகப் பெரியது;

கொழுத்தது ; மூர்க்கமுள்ளது. அதன் கொம்புகள் முதுகின் இருபுறமும் வால்வரை நீண்டு இருந்தன.

## பேரரசர் கவலை

பேரரசர் தம் பரிவாரங்களுடன் காளி கோவிலுக்குச் சென்றார் ; பலிக்காக நிறுத்தப்பட்டிருந்த எருமைக் கடாவைக் கண்டார் ; அதன் நீண்ட கொம்புகளைக் கண்டு திகைத்தார். "பலி கொடுப்பதாயின் ஒரே வீச்சில் தலை வேறு, உடல் வேறாக வெட்டித் தள்ளுதல் விதி. இல்லையேல் அஃது அபசகுனமாகக் கருதப்படுமே! இந்த எருமையின் கொம்புகள் வால் வரை நீண்டு இருப்பதைக் காணின் இதன் கழுத்தை ஒரே வீச்சில் வெட்ட முடியாதே! கொம்புகளையும் சேர்த்து ஒரே வீச்சில் வெட்டுதலும் முடியாத செயல். வேறு கடாவைப் பிடித்துக் கொண்டுவரவும் போதிய நேரம் இல்லை ; என்ன செய்வது!" என்று பேரரசர் தமக்குள் எண்ணிக் கலங்கினார். அமைச்சரும் பிரபுக்களும் பிற அரசியல் அலுவலாளரும் செய்வது தோன்றாது விழித்தனர்.

## அரியநாயகரின் அரிய யோசனை

அச்சங்கடமான சந்தர்ப்பத்தில் அரியநாயகர் அங்கு வந்தார் ; எல்லோர் உள்ளத்திலும் இருந்த கலக்கத்தை உணர்ந்தார் ; எருமைக் கடாவை நன்கு கவனித்தார். அவர் முகம் தெளிவுற்றது. அவர் பேரரசரைப் பணிந்து, "பெருமானே, கவலைப்பட வேண்டா. அடியேன் யோசனைப்படி செய்யின், இதே எருமையை எளிதில் பலியிட்டு



விடலாம்," என்றனர். பேரரசர்க்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. ஆயினும் அவர் அரிய நாயகரிடம் நம்பிக்கை வைத்தவர் ஆதலால், "என்ன யோசனை?" என்று ஆவலுடன் கேட்டார்.

அரியநாயகர், "பலி பீடத்தண்டை ஒரு குழி தோண்ட வேண்டும். அதனில் பசும்புல்லைப் போட வேண்டும். கால்களின் இடையே குழி இருக்குமாறு எருமையை நிறுத்த வேண்டும். புல்லைத் தின்னும் ஆசையால், எருமை தன் கழுத்தை நன்றாக வளைத்துக் குனிந்து குழிக்குள் தலையிட்டுப் புல்லைத் தின்னும். அப்போது அதன் கொம்புகள் வேறாக விலகி நிமிர்ந்து நிற்கும். அச்சமயம் ஒரே வீச்சில் தலைவேறு உடல்வேறாக வெட்டிவிடலாம்", என்று விளக்கமாகக் கூறி வணங்கினார்.

பேரரசர், "உன் யோசனைப்படி செய், பார்ப்போம்" என்றனர். அவர் மனம் குழப்பமாகவே இருந்தது.

## யோசனை பலித்தது

அரியநாயகர் யோசனைப்படி குழிதோண்டிப் புல் பரப்பப்பட்டது. பலி பீடத்தின் அருகில் எருமைக் கடா கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. எருமை பசும்புல்லைக் கண்டு பரவசம் அடைந்து, நன்றாகக் குனிந்து புல்லைத் தின்னத் தொடங்கியது. அப்போது அதன் கொம்புகள் உயர்ந்து நின்றன. அவ்வமயம் சிறந்த வாள் வீரரான விசுவநாதர் அதனை ஒரே வீச்சில் தலைவேறு உடல் வேறாக வெட்டிச் சாய்த்தார்.

### பதவி உயர்வு

பேரரசர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்; அங்குக் கூடியிருந்த அனைவரும் கலக்கம் ஒழிந்து இன்பம் அடைந்தனர். எல்லோரும் அரியநாயகரது அரிய மூளையைப் பாராட்டினர். பேரரசர் அரியநாயகரை அரண்மனைத் தலைமைக் கணக்கராக அமர்த்திக் கொண்டார்; அவருக்கு அந்த நல்ல நாளில் பரிசுகள் அளித்து மகிழ்ந்தார்.

### அரசாங்கத் தலைமைக் கணக்கர்

அரியநாயகரது கணிதப் புலமை அளவிடற்கு அரியது. ஒரு முறை பேரரசின் கணக்கர் அனைவரும் ஒன்று கூடி வரவு செலவுகளைக் கணக்குப் பார்த்து, இருப்புக்கட்ட முனைந்தனர். நாட்கள் பல சென்றன; கணக்குச் சரியாக வரவில்லை. கணக்கர் ஏடுகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தனர்; புள்ளி போட்டுப் பார்த்தனர். யாவும் பயனற்றவை ஆயின.

மறுநாள் பேரரசரிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். கணக்கோ சரியாக முடியவில்லை. அரசாங்கக் கணக்கர் வழி அறியாது திகைக்கலாயினர். அவ்வமயம் அங்குச் சென்ற அரியநாயகர் அவர்களது முகவாட்டத்தைக் கண்டனர்; விசாரித்து உண்மை அறிந்தனர்; உடனே அங்கு உட்கார்ந்தனர்; புள்ளிகளைச் சோதித்தனர்; பிழைகள் அகப்பட்டன; அவற்றை ஒழுங்கு செய்து, இருப்புக்கு ஏற்றவாறு கணக்கைச் சரிக்கட்டிக் காட்டினர். கணக்கர் அனைவரும் அவ்வறிஞரைப் பாராட்டித் தம் நன்றியைத் தெரிவித்தனர்.



இச்செய்தியை எவ்வாறோ பேரரசர் கேள்வியுற்றார்; அரியநாயகரிடம் அவர் முன்னரே கொண்டிருந்த பற்றும் மதிப்பும் மேம்பட்டன; அரசாங்க விஷயத்தில் அவருக்கு இருந்த பற்றை நன்கு உணர்ந்தார்; அவரைத் தம் அரசாங்கத்தின் பெரிய கணக்கராக அமர்த்தினர்.

# 5. தகுதிக்கு ஏற்ற பதவிகள்

## மற்போர் வீரன்

ஒரு நாள் அரசர் அவையில் மல்லன் ஒருவன் வந்தான். அவன் வடநாட்டு மல்லன். அவன் வட இந்தியாவில் இருந்த அரசர் சபைகட்கு எல்லாம் சென்றவன்; அங்கங்குப் புகழ் பெற்று இருந்த மல்லரைப் புறம் கண்டவன். அவன் விந்த மலைக்குத் தென்பாலும் தன் வெற்றிக் கொடியை நாட்ட எண்ணினான்; அதனால் தக்ஷிணத்திற் புகுந்தான். ஒரிஸ்ஸா, பிஜப்பூர் முதலிய நாடுகளிலும் வெற்றி பெற்றான். அவன் இறுதியில் விஜயநகரப் பேரரசிலும் பெயர் பெற்று மீளலாம் என்ற எண்ணத்துடன் வந்தான். அவன் பேரரசரை வணங்கித் தன் வரலாற்றைக் கூறினான். இராயர் அவனது வெற்றிப் பிரதாபத்தைக் கேட்டார். அவையில் இருந்த அனைவரும் கேட்டனர்.

## அடியேன் இருக்கிறேன்

பேரரசர் தம் அவையில் இருந்த பெரிய தளபதிகளைப் பார்த்தனர்; மற்போர் வீரர்களைக் கவனித்தனர்; நாகமர் போன்ற பிரபுக்களைப் பார்த்தனர்; ஒருவரும் புதிய மல்லனுடன் மற்போர் புரிய முன்வரவில்லை. இராயர் மனம் வருந்தினார்; 'ஓர் அந்நியன் நமது சபையில் விருது கூறுகின்றான். இவனை எதிர்க்கத் தக்கவர் நம்மிடம் இல்லை எனின், நமது பேரரசு என்ன வலிமையை உடையது!' என்று எண்ணிக் கலங்கினார்; இறுதியில், 'இவனுக்கு ஏற்ற ஜோடி விஜயநகரத்தில் இல்லையோ?' என்று கேட்க வாய் திறந்தார். அப்பொழுது, "அடியேன் இருக்கிறேன்; ஆணை தர வேண்டும்" என்று ஒருவர் கூறி அரசனை வணங்கினார். அவர் யார்? அவரே நமது அரியநாயகர்.



இராயர் முதலில் திகைத்தார். அரியநாயகரது போர்வன்மையை இராயர் கண்டதில்லை. ஆயினும் விசுவநாதர் 'அவரே ஏற்றவர்' எனக் கூற, இராயர் 'சரி; மற்போர் நடைபெறட்டும்' என்றார்.

## மற்போர்

அரியநாயகர் அரையில் கச்சை கட்டினார்; தோள் தட்டினார்; "வடநாட்டு வீரனே, வருக; நம் இருவர் தோள் வரிசையை இச்சபையார் காணட்டும்" என்றார். உடனே போர் மூண்டது. வடநாட்டான் அரியநாயகரின் கையைக் குலுக்குபவன் போலப் பாசாங்கு செய்தான். அரியநாயகரும் 'வந்தனம்' என்றார். அவ்வளவில் புதியவன் அவரை வாரி எடுத்து மேலே வீச எண்ணினான். அரியநாயகர் மற்போரில் சிறந்த பயிற்சி உடையவர் அல்லரா? அவர் அவனது எண்ணத்தை உணர்ந்துகொண்டார்; அவனிடம் அறப்போர் செல்லாது என்பதை உணர்ந்தார். அதனால் அவர் காலம் தாழ்த்தாது, அவன் கையைப் பற்றிக் கரகர என்று இழுத்து அவனைக் காற்றாடி போலச் சுற்றினார்; முகத்திலும் மார்பிலும் தாளிலும் தோளிலும் மாறி மாறிக் குத்தினார்; தன்

தலைகொண்டு அவன் தலையைப் படீரென மோதினர்.

அவ்வளவில் அவனுடைய கழுத்து எலும்பு நற நற என்றது; தலை சிவந்தது; தாளும் தோளும் நசுங்கின. ஆயினும் அவன் வைரங் கொண்டு அரியநாயகரது கழுத்தை நெரித்தான்; தொடைகளைப் பிசைந்தான்; அவருடைய தாள்களைத் தனித்தனியே இழுத்து எறிய முயன்றான். அவையோர், 'இஃது என்ன? மற்போரா? மரணப் போரா?' என்று கவலையோடு கண் இமை கொட்டாது கவனித்தனர். அரியநாயகர் போரை விரைவில் முடிக்க விரும்பித் தம் மதிவன்மையும் தோள் வன்மையும் கொண்டு, அம் மல்லனைத் தந்திரமாகத் தூக்கித் தரையில் போட்டார்; புதிய மல்லன் முதுகில் மண்படியச் செய்தார். அவ்வளவில் அவையோர் 'அரியநாயகர் வாழ்க!' என்று ஆரவாரம் செய்தனர்.

## 'தளவாய்' பதவி

பேரரசர் புதிய மல்லனுக்குப் பரிசுகள் தந்து அனுப்பினர்; தமது பேரரசின் மானத்தைக் காத்த அரியநாயகரை அனைவர் முன்னும் பாராட்டிப் பேசினர்; அவருக்கு வீரக்கழலும் வெற்றி வாளும் பரிசு அளித்தனர்; அவரைத் தமது பெருநாட்டுத் தளபதிகளுள் ஒருவராக நியமித்தனர். அன்று முதல் அரியநாயகர், '**தளவாய்-அரிய நாயகர்**' என வழங்கப்பட்டனர். அவர் அடைந்த பெருஞ் சிறப்பைக் கண்டு நாகம நாயக்கரும் விசுவநாதரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.



## பேரரசர் நோய்வாய்ப்படுதல்

சில மாதங்கள் கழிந்தன. பேரரசர் திடீரென நோய்வாய்ப்பட்டார். அரண்மனை மருத்துவர் அரிய மருந்துகளைக் கொடுத்தனர். நோயின் வேகம் குறையவில்லை. அந்தப்புர மாதரசியர் கவலை கொண்டனர். அவர்கள் சோதிடரை வரவழைத்தனர்; ஆயுள்பாவம் ஆராய்ந்தனர். சோதிடர் திட்டமாக ஒன்றும் சொல்லாமல் தயங்கினர். சாதாரண மக்களிடம் சோதிடர் தம் கைவரிசையைக் காட்டுவர். அரசரைப்பற்றி வாய்க்கு வந்தவாறு கூற முடியாதன்றோ? அதனால் அவர்கள் ஆயுள்பாவத்தைப்பற்றி ஒன்றும் கூறாது துன்புற்றனர். சோதிடர் மயங்குதலைக் கண்ட மன்னரும் மாதரசியரும் கவலைகொண்டனர்.

## அரியநாயகர் சொன்ன சோதிடம்

அரியநாயகர் அந்தப்புர மாதர் குழப்பத்தை அறிந்தார்; சோதிடரது மனத் தயக்கத்தையும் உணர்ந்தார். அவர் சிறந்த சோதிடப் பயிற்சி பெற்றவர். ஆதலால், தாமே பேரரசரது ஜாதகத்தைக் கவனித்தார்; இறுதியில், "பேரரசர் ஒரு வாரத்தில் குணம் அடைவார். மயக்கமும் கலக்கமும் தேவை இல்லை. அவர் நோய் நீங்கியதும் பெரும் போர்களில் வெற்றிமேல் வெற்றி பெறுவார். என் உரை தவறாது," என்று அழுத்தமாக உரைத்தார்.

## சோதிடம் பலித்தது

அரியநாயகர் கூறிய சோதிடம் பேரரசருக்கும் அரச மாதேவியர்க்கும் அரிய மருந்தாக இருந்தது. இறைவன் இன்னருளால் பேரரசர் அன்று முதலே படிப்படியாகக் குணம் அடையலானார். எட்டு நாளைக்குள் அவர் நன்னிலையை அடைந்தார். பேரரசரும் அவர் மனம் மகிழப் பரிசுகள் பல ஈந்தனர். பின்னர், பேரரசர் உடல் வன்மைக்கு உரிய மருந்து வகைகளை உண்டு உடல் உரத்தை வளர்க்கலானார்.

## தந்தைக்குத் தந்த வாக்குறுதி

பேரரசரான கிருஷ்ணதேவராயருக்குத் தந்தையார் நரசிம்மராயர் என்பவர். அவர் பல நாடுகளைக் கைப்பற்றிய பெருவீரர். எனினும் அவரது முதுமைப் பருவத்தில் பிஜப்பூர்ச் சுல்தான், இராயச்சூர், முத்கல் முதலிய இடங்களை விஜய நகர ஆதிக்கத்திலிருந்து கவர்ந்துகொண்டார். அவற்றை மீட்கவேண்டும் என்பது அம்முதிய வீரர் அவா. அதனால் அவர் தாம் இறக்குந் தறுவாயில் * கிருஷ்ணதேவரை அழைத்து, "கிருஷ்ணா, இராயச்சூர், முத்கல் முதலிய ஊர்களைப் பிஜப்பூர்ச் சுல்தான் கவர்ந்துகொண்டனர். நீ அவற்றை மீளவும் பெறவேண்டும். அப்பொழுதுதான் என் ஆன்மா அமைதிபெறும்," என்றார். இளைஞரான கிருஷ்ணதேவராயர் தந்தையைப் பணிந்து, "ஐயனே, உமது ஆணையை நிறைவேற்றுவேன்" என்று வாக்களித்தார்.

* இவர் கி. பி. 1498-இல் காலமானார்.



## இராயச்சூர்மீது படையெடுப்பு

நோய் நீங்கி நலம் பெற்ற பேரரசர், ஒருநாள் தனித்து இருந்தபொழுது தம் தந்தையார் நினைவு கொண்டார். உடனே தாம் அவருக்கு இராயச்சூரைக் கைப்பற்றுவதாக அளித்த வாக்குறுதியும் நினைவிற்கு வந்தது. அதே சமயத்தில் அவர், 'போர்களில் வெற்றிமேல் வெற்றி கிடைக்கும்' என்று அரியநாயகர் சோதிடம் சொன்னதையும் எண்ணினார்; மறுநாள் அரச சபையில், "நாளை இராயச்சூர்மீது படை யெடுப்போம்" என்று கூறினார்.

## படைக் காட்சி

மறுநாள் படைகள் திரண்டுவிட்டன. யானைப் படை, குதிரைப்படை, வேற்படை, ஈட்டிப்படை, வாட்படை வீரர்கள் ஆயிரக் கணக்கில் கூடிவிட்டனர்; அந்தந்தப் படைவீரர் தத்தம் போர்க் கருவிகளுடன் அணி அணியாக நகருக்கு வெளியே நின்றனர். அரியநாயகர் முதலிய படைத்தலைவர்கள் அவரவர் படைகட்குத் தலைமை வகித்தனர். யானைகளும் குதிரைகளும் போர் உடையில் திகழ்ந்தன. வீரர்கள், "பிஜப்பூர்ச் சுல்தானைப் புறம் காண்போம்; இராயச்சூரை மீட்போம்" என்று முழங்கினர். பேரரசர் எல்லாப் படைகளையும் பார்வையிட்டார். குறித்த நேரத்தில் படைகள் இராயச்சூரை நோக்கிப் புறப்பட்டன. பேரரசர் படைகட்கு நடுவில் நடுநாயகமாகச் சென்றார்.

## போர்

இராயச்சூருக்கு அருகில் இருதிறத்துப் படைகளும் கைகலந்தன.* இருபக்கத்து வீரரும் தம்மை மறந்து போரிட்டனர். பிஜப்பூர்ப் படையில் இருந்த குதிரைவீரர் ஆவேசத்துடன் விஜயநகரப் படைகளின் முன்வரிசையிற் பாய்ந்தனர். அப்பொழுது எண்ணிறந்த வீரர் இருபக்கத்திலும் மாண்டு ஒழிந்தனர். பகைவரது மூர்க்கத்தைக் கண்டு விஜயநகரப் படைகள் சிறிது பின்வாங்கின. அதே சமயத்தில் சுல்தானுடைய காலாட்படை கடுகி வந்தது. இராயர் படைகளின் நிலைமை வலியற்றதாக இருந்தது. ஆனால், நல்ல காலம்! துணைப் படைவீரர் பல்லாயிரவராக விஜயநகரத்திலிருந்து விரைந்து வந்தனர்.

## பேரரசர்க்கு ஆபத்து

பேரரசர் வெற்றி காணவேண்டும் என்னும் வேட்கையால், போர் முனையில் யாவரும் காண நின்றார்; தம் வீரர்க்கு வீராவேசத்தை ஊட்டினார்; துணைப்படை வந்தவுடன் மேலும் கிளர்ச்சிகொண்டனர். அதனால் அவர்கள் தங்கள் முழு ஆற்றலையும் காட்டிப் போரிட்டனர். பீஜப்பூர்ச் சேனை பின்வாங்கி ஓடியது. அப்பொழுது பகைவர் தளபதிகளுள் ஒருவர் முதுகுகாட்டி ஓடுவதாகப் போக்குக் காட்டிப் பின்புறமாக வந்து திடீரெனத் தாக்கினார். அத்தாக்குதலுக்குக் கூப்பிடு தூரத்திற்றான் பேரரசர் நின்றிருந்தார். தனித்தனிப் பகைவர் படைகளுடன் போராடிக் கொண்டிருந்த

* இப்போர் கி. பி. 1520 மே மாதத்தில் நடந்தது.



இராயருடைய தளபதிகள் இப்பேராபத்தைக் கவனிக்கவில்லை.

## அரிய சமயத்தில் அரியநாயகர்

பகைவருடன் போரிட்டுக்கொண்டு ஒரு புறத்தில் இருந்த அரியநாயகர் தெய்வாதீனமாகத் திரும்பிப் பார்த்தார். பகைவர் தளபதி பின்வந்து தாக்குதலையும் அவருக்கு அருகில் பேரரசர் தனித்து நின்றுகொண்டு இருந்ததையும் கண்டார்; பேரரசர்க்கு நேர இருந்த பேராபத்தை உணர்ந்தார்; உடனே தம் படையுடன் விரைந்து சென்று, அத்தளபதிக்கும் பேரரசர்க்கும் இடைப்பட்ட தூரத்தில் நின்று போர் புரியத் தொடங்கினார்.

அப்பொழுதுதான் தமக்கு நேர இருந்த பேராபத்தையும் அதனை அகற்ற அரியநாயகர் திடீரென்று அங்குத் தோன்றியதையும் பேரரசர் உணர்ந்தார். பிற தளபதிகளும் இதனை உணர்ந்து அவ்விடத்திற்கு விரைந்தனர். அவர்கள் வருவதற்குள் அரியநாயகர் பிஜப்பூர்த் தளபதியைச் சிறை செய்து, பேரரசர்முன் கொணர்ந்து நிறுத்தினார்.

## அமைச்சர் பதவி

பேரரசர் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் துளித்தது. அவர் அரியநாயகரை மார்போடு அணைத்து, "என் உயிரைக் காத்த உத்தம! நீ எனக்குக் கிடைத்த அரியநாயகமே, இதில் ஐயம் இல்லை. நீ ஈசனைப் போலத் திடீரெனத் தோன்றி என்னைக் காத்தலால் எனக்கு **அரிய நாதனும்**

ஆயினை. நீ இன்று முதல் நம் அமைச்சரில் ஒருவனாக இருக்கக்கடவை; 'முதலி' என்னும் பட்டம் பெறுவை; இன்றுமுதல் பல்லக்கில் செல்லும் உரிமையும் எய்துவை; உன்னை எல்லோரும் அரியநாத முதலியார் என்று அழைப்பர்," என்று கூறி மகிழ்ந்தார்.

## வெற்றிக் கொடி

பின்னர்ப் பேரரசர் வெற்றி முழக்கத்துடன் இராயச்சூர்க்குள் நுழைந்தார். அந்நகர அரண்மனைமீது இராயர் கொடி பறக்கவிடப்பட்டது. தம் தந்தையார்க்கு அளித்த வாக்குறுதி நிறைவேறிற்று என்று இராயர் பெருமகிழ்ச்சி அடைந்தார்; இராயச்சூரில் தம் தளபதி ஒருவரைப் படையுடன் இருக்கவிட்டு, எஞ்சிய வீரருடன் விஜயநகரத்தை அடைந்தார். பேரரசர் பெற்ற வெற்றியைக் கேள்வியுற்ற மாநகரத்தார், அவரையும் அவர் ஆருயிரைக் காத்த அரியநாதரையும் சிறப்புடன் வரவேற்று விழாக் கொண்டாடினர்.

## அரியநாதருக்குத் திருமணம்

மேற்சொன்ன நிகழ்ச்சிக்குப் பிறகு அரியநாதர் இராயர் அவையில் மிருந்த செல்வாக்கு உடையவர் ஆனார். அவர் விரைவில் பேரரசின் வருமானம்-செலவினம்-மாகாணங்களின் நிலைமை-பெருநாட்டைக் கட்டியாள்வதில் உள்ள சிக்கல்கள் முதலிய அரசியல் விவரங்களை நன்கு அறிந்து கொண்டார்; இராயருக்கு ஐயம் உண்டாகும் பொழுதெல்லாம் அதனைத் தக்க ஆதாரங்களுடன் தெளியவைத்தார். இத்தகைய சிறப்புக்களால் அரியநாதர் இராயரது பெருமதிப்புக்கு ஆளானார்.



பதினாறு வயதில் மெய்ப்பேட்டைவிட்டு விஜயநகரத்தில் பிழைக்கவந்த அரியநாதர் தமது நல்ல ஒழுக்கத்தாலும் பிற பண்புகளாலும் படிப்படியாக உயர்ந்து, இராயரது பெருமதிப்பைப் பெற்றுவிட்டதனால், அவரது வாழ்வு அரசவாழ்வாக மாறியது. அவர் தாம் இருந்த கோநகரத்திலேயே இராயர் வாழ்த்துக் கூறத் தம் திருமணத்தை முடித்துக் கொண்டனர்.

# 6. தமிழ் நாட்டில் இராயர் ஆட்சி

## தமிழகமும் முஸ்லிம்களும்

பத்மினி வரலாற்றை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அவள் இருந்த சித்தூர்க் கோட்டையைக் கைப்பற்றியவர் யார்? டெல்ஹியை ஆண்ட அலாவுத்தீன் கில்ஜி அல்லவா? அவருடைய சேனைத் தலைவர் **மாலிக் காபூர்** என்பவர். அவரே முதன்முதல் தமிழ் நாட்டின்மீது படையெடுத்து வந்த முஸ்லிம் ஆவர். அவர் திக்கு விஜயமாகப் புறப்பட்டுத் தெற்கே சேதுவரை வந்தனர். அப்பொழுது சைவ-வைணவக் கோவில் விக்கிரகங்களும் நகைகளும் பொதுமக்களுடைய செல்வங்களும் பலவாறு ஒளித்து வைக்கப்பட்டன; பல கொள்ளை போயின.

## மதுரையில் முஸ்லிம் அரசு

அக்காலத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு இராஜசிம்ம பாண்டியன் என்பவன் அரசாண்டு வந்தான். அவன் மாலிக் காபூர் வருவதை அறிந்து மதுரையைவிட்டுச் சின்ன மனூர்க்குச் சென்று ஒளிந்து கொண்டான். மதுரை முஸ்லிம்கள் கைப்பட்டது. அது முதல்



ஏறத்தாழ ஐம்பது வருடகாலம் மதுரையை முஸ்லிம்கள் அரசாண்டனர்.*

அப்பொழுதுதான் புகழ்பெற்ற - பாடல்பெற்ற திரு ஆலவாய் சீரழிந்தது. மீனாக்ஷி - சுந்தரேசர் கோவில் மதில்களும் பதினான்கு கோபுரங்களும் மதில்கட்கு உட்பட்டிருந்த தெருக்களும் அழிக்கப்பட்டன. கருவறை, நடு மண்டபம், முன் மண்டபம் என்பவையே விடப்பட்டன. பாண்டி நாட்டுக் கோவில்கள் சீரழிந்தன; கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டன; நகரங்கள் சூறையாடப்பட்டன. பாண்டி நாட்டு வாணிகம் நின்றுவிட்டது.

## இராயர் கவலை

விஜயநகரப் பேரரசு வலுவடையத் தொடங்கியதும், அதனை ஆண்ட வேந்தர் தென்னாடு முழுவதையும் கைப்பற்ற விரும்பினர்; தென்னாடு முழுவதும் தம் ஆட்சியில் இருக்கவேண்டும் என்பது அவரது கவலை; அதனால் தமது சிறந்த தளகர்த்தர் ஒருவரைப் பெருஞ்சேனையுடன் தமிழ் நாட்டிற்கு அனுப்பினர்.

* அவர்கள் ஆட்சி ஏறத்தாழக் கி. பி. 1324 முதல் 1371 வரை இருந்தது. அப்பொழுது மதுரையை ஆண்ட சுல்தான்கள் :—

1. ஷரீப் ஜலாலுத்தீன் அஸன் ஷா.
2. அலாவுத்தீன் உதௌஜி.
3. குத்புத்தீன் பிரோஜ் ஷா.
4. கியாதுத்தீன் முஹமத் தமகன் ஷா.
5. நசருத்தீன் முஹமத் காஸி தமகன் ஷா.
6. அடில் ஷா.
7. பக்ருத்தீன் முபாரக் ஷா.
8. அலாவுத்தீன் சிக்கந்தர் ஷா.

—J. R. A. S. 1909, pp. 667–683

108269

### கம்பண உடையார்

அச்சேனைத் தலைவர் பெயர் கம்பண உடையார் என்பது. அவர் முதலாம் புக்க ராயர் புதல்வர். அவர் சிறந்த போர் வீரர்; அஞ்சா நெஞ்சம் பெற்றவர்; பல போர்களில் முன் அணியில் நின்று தம் வீரத்தை விளங்க வைத்தவர்; இராயரது நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமானவர். அப்பெரு வீரர் பெரும்படையுடன் தென்னாடு வருவதை அறிந்த சோழனும் பாண்டியனும் அவருடன் சேர்ந்து கொண்டனர். போர் மதுரையில் நடைபெற்றது. முஸ்லிம் ஆட்சி ஒழிக்கப்பட்டது. பாண்டிய நாடு பாண்டியன் வசம் ஒப்புவிக்கப்பட்டது.* சோழ நாட்டைச் சோழ வேந்தன் ஆண்டுவந்தான். இவர்கள் விஜயநகரப் பேரரசர்க்கு அடங்கிய சிற்றரசராக இருந்துவர இசைந்தனர். கம்பண உடையார் தக்ஷிண மஹா மண்டலேசுவரர் ஆனார்.

கம்பண உடையார் நாட்டில் அமைதியை நிலைநாட்டினார்; அவருடைய படைவீரர்களை நாடு முழுவதும் பரவி வாழச்செய்தார்; முஸ்லிம்களால் அழிக்கப்பட்ட கோயில்களைப் புதுப்பித்தார்; பூசையும் விழாக்களும் நடைபெறச் செய்தார்; நாடு முழுவதிலும் உழவு—கைத்தொழில்—வாணிகம் முதலியன செவ்வனே நடைபெற வசதிகள் செய்தார்.

### பேரரசர்-சிற்றரசர் உறவு

பாண்டியரும் சோழரும் வலியற்றவர் ஆதலின் விஜயநகரப் பேரரசின் கீழ் இருக்க ஒப்புக்கொண்

* கம்பணர் உதவியால் அரியணை ஏறியவன் சோமசேகர பாண்டியன் என்பவன்.



டனர். பேரரசர் தம் செல்வாக்கு மட்டும் தெற்கே குமரிவரை பரவியிருத்தலே போதியது என்று எண்ணி, இவர்களிடமே தாம் வென்ற நாடுகளை ஒப்புவித்தனர். மஹா மண்டலேசுவரர் இவர்களுடைய உள்நாட்டு அரசியலில் தலையிடவில்லை; தமக்குச் சேரவேண்டிய பகுதிப் பணத்தை வசூலித்துக் கொண்டனர்; பேரரசுக்குரிய படையை நிர்வகித்தனர்; எஞ்சிய பணத்தைப் பேரரசர்க்கு ஆண்டுதோறும் அனுப்பினர்; சோழ—பாண்டியருடைய வெளிநாட்டு விவகாரங்களை மேற்பார்த்தனர்; அவர்கள் பேரரசுக்குத் தீங்கு இயற்றாவாறு அவர்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வந்தனர்; சோழ - பாண்டியர் தத்தம் நாட்டிற் கல்வி - சமயம் - கலைகள் சம்பந்தமாகச் செய்த நல்ல காரியங்களுக்கு முழு ஆதரவும் காட்டினர்.

### சோழ-பாண்டியர் போர்

கிருஷ்ணதேவர் காலத்தில் நாகம நாயக்கர் தக்ஷிண மஹா மண்டலேசுவரர் அல்லவா? அக்காலத்தில் சோழநாட்டை வீரசேகரன் என்பவன் அரசாண்டான்; பாண்டி நாட்டைச் சந்திரசேகரன் என்பவன் ஆண்டுவந்தான். பேராசை பிடர் பிடித்து உந்தியதால் சோழன் பாண்டிய நாட்டைக் கவர எண்ணினான்; பெரும்படையுடன் சென்று பாண்டியனைப் போரில் முறியடித்துப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான்.

### பாண்டியன் முறையீடு

பாண்டியன் தன் மைந்தனுடன் விஜயநகரம் சென்றான்; நடந்ததைப் பேரரசரிடம் நவில

முயன்றான். அவனுக்கு எளிதில் இராயரது பேட்டி கிடைக்கவில்லை. காரணம் என்ன? சோழன் தன் பணத்தை வாரி இறைத்து அமைச்சர் சிலரைக் கைவசப்படுத்தினான். பாண்டியன் மீது இரக்கம் கொண்டவர் அரியநாதர் ஒருவரே. அவர் சோழனது செல்வத்துக்கு அடிமை ஆகாதவர்.

## அரியநாதர் உதவி

பேரரசர் அரியநாதரிடம் மிக்க அன்பு பாராட்டி வந்ததை மற்ற அமைச்சர் உள்ளூர வெறுத்தனர். அறிவு ஆற்றல்களில் குறைந்தவர் தம்மினும் மிக்காரைக்கண்டு பொருமைப்படுதல் இயல்புதானே! அரியநாதர் சமயம் பார்த்து, இராயரிடம் பாண்டியனது பரிதாப நிலையை விளக்கி, அவனுக்கு நியாயம் வழங்குமாறு மன்றாடினார்.

## இராயர் ஆணை

மறுநாள் அரச சபையில் அனைவரும் கூடியிருந்தபொழுது இராயர் பாண்டியனை வரவழைத்தார்; நேரே அவனது முறையீட்டைக் கேட்டார்; உடனே நாகம நாயக்கரை நோக்கி, "நீர் பெரும் படையுடன் சென்று சோழனை முறியடித்து, இப் பாண்டியனை அரியணை ஏற்றுக" என்று ஆணையிட்டார்.

## நாகம நாயக்கர் படையெடுப்பு

பேரரசர் ஆணை பிறந்தவுடன் படைகள் தென்னாடு செல்லத் தயாராயின. நாகம நாயக்கர் வயது முதிர்ந்தவர்; ஆயினும் ஊக்கமும் உடல்



உரமும் குன்றாதவர். மேலும் தக்ஷிண மஹா மண்டலேசுவரர் ஆனதால் அவரே செல்லவேண்டியவர் ஆனார். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் புறப்பட்டார். பல போர்களில் வெற்றி ஒன்றையே தரிசித்துப் பெருமிதம் கொண்ட இராயர் படை, போர்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு சோழ நாட்டை நோக்கிச் சென்றது.

## ஆணை நிறைவேற்றல்

நாமக நாயக்கர் வருவதை அறிந்த சோழன் கடுங்கோபம் கொண்டான்; தன் படைகளைத் திரட்டினான். அவன் போர்க்கோலம் கொண்டு நாகமர் சேனையைத் தாக்கினான். பல போர்களில் வெற்றி பெற்ற நாகமருக்கு அச்சோழன் எம்மாத்திரம்! அப்பெருவீரர் சோழனை ஒரு பகற்பொழுதில் வென்றார்; பாண்டியனை மதுரையில் வைத்து முடி சூட்டினார்; 'இராயர் ஆணை நிறைவேற்றப்பட்டது' என்ற செய்தியை இராயர்க்கு ஆள்வசம் அனுப்பினார்; பிறகு பாண்டிய நாட்டில் அமைதி நிலவும் வரை மதுரையில் தம் படையுடன் தங்கியிருக்கலானார்.

## வேலியே பயிரை மேய்தல்

'செல்வம் மயக்க மருந்து போன்றது. அது நல்லவரையும் கெட்டவர் ஆக்கும் ஆற்றல் வாய்ந்தது; யோக்கியரை அயோக்கியர் ஆக்கி விடும்; அறமே நிரம்பி, அருளே பூத்த அருந்தவ முனிவரையும் மனம் மாறச் செய்து விடும்,' என்று ஆன்றோர் கூறியிருப்பது நாகம நாயக்கர் விஷயத்

தில் உண்மை ஆயிற்று. அவர் பாண்டிய நாட்டை வென்ற பிறகு, அந்நாடு முழுவதும் சுற்றிப் பார்த்தார். குறிஞ்சி-முல்லை-மருதம்-நெய்தல் என்னும் அதன் நானில வளம் அவரது உள்ளத்தைக் கவர்ந்தது; பல நூற்றாண்டுகளாக அயல் நாடுகளுடன் முத்து வாணிகம் செய்துவந்த கொற்கைத் துறைமுகம் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. "நாம் இந்த நாட்டை வென்றோம். நாமே இதனை ஆளாமல் பாண்டியனுக்குக் கொடுக்க வேண்டுமா? நாம் மஹா மண்டலேசுவரராக இருப்பதைவிட மன்னராக இருத்தல் சிறந்தது அன்றோ?" என்று எண்ணினர். இந்த எண்ணம் வலுப்பட்டது. அதனால் அதுவரை இராயர் ஆணை கடவாது நடந்து வந்த உண்மை ஊழியரான அவர், அறநெறி தவறினர்; சேனையைத் தம் வசமாக்கிக் கொண்டார்; பாண்டியனைச் சிறை செய்தார்; தாமே பாண்டி மன்னராகி நாட்டை ஆளத் தொடங்கினர். வேலியே பயிரை மேய்ந்துவிட்டது.*

## இராயர் ஆணை

சிறை செய்யப்பட்ட பாண்டியன் மகன் நாகமர் கைக்கு அகப்படாமல் தப்பித்துக்கொண்டான். அவன் நேரே விஜயநகரம் சென்று இராயரைக் கண்டான்; அவர் அடிகளில் முடிபட வணங்கி

* இதற்கு மாறாக, 'சந்திரசேகர பாண்டியனிடம் குடிகட்கு நம்பிக்கை இல்லை. அவன் திறமை அற்ற அரசன். ஆதலின் பெருமக்களின் வேண்டுகோளின்படி நாகமர் அரசர் ஆனர்,' என்று மற்றொரு வரலாறு கூறுகின்றது. நாகமரை அரசாளுமாறு பாண்டியன் வேண்டினன் என்று மற்றொரு நூல் கூறுகிறது.

நடந்ததை நவின்றான். உடனே இராயர் அடக்க முடியாத கோபம் கொண்டார்; "எமது கட்டளையை மீறக் காரணம் யாது? மோசமும் துரோகமும் புரியலாமோ? காரணம் கூறக் கூடுமாயின் நேரே வருக," என்று அரச முத்திரையிட்ட கடிதம் ஒன்றை மதுரைக்கு அனுப்பினார்.

## ஆணை அலக்ஷியம்

நாகமர் இராயர் கடிதத்தைப் பார்த்தார். அவர் அரச இறுமாப்பினால் தம் கடமையை மறந்தார். தாம் விஜயநகரத்திற்கு நேரிலும் செல்லவில்லை; தாம் அரசரானதற்குக் காரணம் ஆள்வசம் தெரிவிக்கவும் இல்லை; 'பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பேரரசர் என்ன செய்யப்போகிறார்? நமது செல்வ மகன் இராயரது சீற்றத்தைத் தணிப்பான்,' என்று எண்ணிக்கொண்டு பேசாதிருந்தார்.

## அரியநாதர் கவலை

நாகமரால் சிறை செய்யப்பட்ட பாண்டியன் சிறைக்கூடத்திலே இறந்தான். அவன் மகன் விஜயநகரத்தில் இருந்து துன்பப்பட்டான். விஜயநகர அமைச்சருள் அரியநாதர் ஒருவரே தமிழர். அதனால் பாண்டிய குமரன் அவரை அடைக்கலமாகக் கொண்டான். நாகமர் நெறி தவறி விட்டார் என்பது அரியநாதர்க்குக் கவலையை உண்டாக்கியது. அவர், "நாகமர் நமது பழைய தலைவர்; நம் நண்பர் விசுவநாதர்க்குத் தந்தையார். ஆயினும் அவர் செய்தது தவறு. ஆதலின்

பாண்டியனுக்கு நீதி வழங்குதலே முறை,'' எனத் துணிந்தார்.

### இராயர் மனக்கவலை

கிருஷ்ணதேவ ராயர் நாகமரிடமிருந்து பதில் வராததால் மனம் புண்பட்டார்; 'நீதி தவறாத நமது அரசியலுக்கு நாகமரால் கெட்டபெயர் வந்ததே!' என்று கலங்கினார். தமது ஆணையைப் பொருட்படுத்தாத அவரது ஆணவத்தை எண்ணிக் கொதித்தார்; நாகமரைப் போரில் வென்று பாண்டிய குமரனை அரசனாக்கத் துணிந்தார். நாகமரைச் சிறைசெய்து கொண்டுவர வேண்டும் என்பது இராயர் விருப்பம்.

### இராயர் சீற்றவுரை

இராயர் ஒருநாள் தம் சேனைத் தலைவர்களையும் அமைச்சர்களையும் பிரபுக்களையும் அவைக்கு வரவழைத்தார்; "நாம் மதுரையைச் சோழனிடமிருந்து மீட்டுப் பாண்டியனுக்குத் தருமாறு நாகமரை அனுப்பினோம் அல்லவா? அவர் அதனை மீறிப் பாண்டியனைச் சிறையில் இட்டுத் தாமே மதுரை அரசராக இருக்கின்றார்; அத்துடன் நாம் விடுத்த கடிதத்திற்குப் பதில் அளியாமல் இருப்பது நமது பெருமைக்குச் சிறுமையாகும். பாவம்! அவரால் சிறை செய்யப்பட்ட பாண்டியன் சிறையிலே மடிந்தான். அவன் மைந்தன் தப்பிப் பிழைத்து இங்கு வந்து முறையிடுகின்றான். நமது ஆணையை மீறிய நாகமரைச் சிறை செய்துவரும் வீரர் நமது நன்மதிப்பைப் பெறுவார்,'' என்று சீற்றத்துடன் பேசினார்.



### அவையோர் மௌனம்

"நாகம நாயக்கர் சிறந்த வீரர்; பல போர்களில் வெற்றிமாலை புனைந்தவர்; மஹா வீரராகிய விசுவநாதர்க்குத் தந்தையார்; பிரபுக்களில் முதல் வரிசையில் இருப்பவர். அச் சிறப்புடைய பெரியவரை நாம் எவ்வாறு போரில் வென்று சிறைப் பிடித்து வருவது! இஃது இயலாத காரியம்...... பேரரசரோ சீற்றத்துடன் காண்கிறார்,'' என்று அவையோர் தமக்குள் எண்ணி, வாளா இருந்தனர்.

### இருவர் துடிப்பு

அவ்வமயம் அவையில் இருந்த இளைஞர் இருவர் மாத்திரம் துடித்துக்கொண்டு இருந்தனர். பேரரசர் சீற்றவுரை அவர்கட்கு இராஜபக்தியையும் வீர வுணர்ச்சியையும் ஊட்டியது. அவர்கள் கண்கள் சிவந்தன; மீசை துடித்தது. அவர்கள் ஏதோ கூற எழுந்தனர்; பின் உட்கார்ந்தனர். சுருங்கக் கூறின், அவர்கள் தம்மை மறந்த சீற்றத்தில் ஆழ்ந்திருந்தனர்; ஆனால் என்ன பேசுவது என்பது அறியாமல் விழித்தனர். அவர்கள் யார்? ஒருவர் விசுவநாதர்; மற்றவர் அரியநாதர்.

### இராயர் எழுச்சி

இராயர் சீற்றத்துடன் பேசிய பிறகு அவையினரைக் கூர்ந்து நோக்கினர்; 'யான் இப் பணியை முடித்து வருவேன்' என்று ஒருவரும் முன் வராதது அவருக்குக் கோபத்தையும் ஏமாற்றத்தையும் உண்டாக்கியது. அதனால் வெகுண்ட

இராயர், "எம் கட்டளையை நிறைவேற்றத் தக்க வீரர் ஒருவரும் இங்கு இல்லையா? நல்லது. நாமே புறப்பட்டுப் பாண்டி நாடு செல்வோம்," என்று கூறித் தம்மை மறந்த ஆத்திரத்துடன் ஆசனத்தை விட்டு எழுந்தார்.

## 'நான் போவேன்'

'அரசே, நான் போவேன்' என்று எழுந்தார் ஒருவர். அவர் யாவர்? அவரே விசுவநாதர். பேரரசரது இறுதி வாக்கியத்தைக் கேட்டதும் விசுவநாதர் தம்மை மறந்தார்; உடனே எழுந்தார்; மேற்சொன்னவாறு மொழிந்தார். அவர் மேலும் பேரரசரைப் பணிந்து, "பெருமானே, நாகமர் என் தந்தையார். எனினும் அவர் செய்தது தவறு. நான் அவர் மைந்தன் ஆதலால், நானே அவரை எதிர்த்துச் சிறை செய்துவருதல் முறையோ என்று அஞ்சினேன். இப்பொழுது தாங்களே போருக்குப் புறப்படுவது எனின், நான் இங்கு இருந்து பயன் என்ன? 'இராஜபக்தியிற் பிழைத்த பாவி' என்று அல்லவா உலகம் என்னைப் பழிக்கும்! ஆதலால் இப்பொழுதே மதுரை செல்வேன்; நாகமரைப் போரில் வென்று தங்கள் முன் கொணர்ந்து நிறுத்துவேன்," என்று பேசினர்.

## இராயர் எண்ணம்

இராயர் விசுவநாதர் பேச்சைக் கேட்டார். அவருக்குச் சிறிது சீற்றம் தணிந்தது. ஆயினும் 'விசுவநாதன் நாகமர் மகன். இரத்த பாசம் கொடியது. அவனும் தகப்பனுடன் சேர்ந்து கொண்டால் என்ன செய்வது! ஆதலால் முன் எச்சரிக்கையாக விசுவநாதனுடன் நமது அரியநாதனை அனுப்புவோம். அவன் விசுவநாதனுக்கு எவ்வகையிலும் சமமானவனே. மேலும் அவன் தமிழ் நாட்டான்; அங்குள்ள தமிழரைத் தன் வயப்படுத்த வல்லவன்; நமக்காக உயிரையும் விடும் உத்தமன்,' என்று தமக்குள் முடிவு செய்து கொண்டார்.



## இராயர் ஆசி கூறல்

இராயர் விசுவநாதரை அன்புடன் நோக்கி, "அப்பனே, உன் இராஜ பக்தியைப் பாராட்டினேம். நீ உன் உயிர் நண்பனை அரியநாதனுடன் உடனே புறப்படு. உனக்கு வெற்றி உண்டாகுக!" என்று ஆசீர்வதித்தார். பேரரசர் தம்மை உடன் அனுப்பும் நோக்கத்தைக் குறிப்பால் உணர்ந்த அரியநாதர், அரசரைப் பணிந்து விடை பெற்றுக்கொண்டார். விசுவநாதரும் அரியநாதரும் பண்பட்ட படைகளுடன் தென்னடு நோக்கிப் புறப்பட்டனர்.

## மதுரை நிகழ்ச்சிகள்

இராயர் ஆணைப்படி தம் மைந்தரே போருக்கு வருகின்றார் என்பதை நாகமர் அறிந்தார்; அவருடன் தம்மிடம் கணக்கராக இருந்த அரியநாதரும் வருவதைக் கேள்வியுற்றார். அவர் அடைந்த கோபத்திற்கு அளவில்லை; உடனே தம் படைகளைத் திரட்டிப் போருக்குத் தயாராக இருந்தார். அந்த வேளையில் விசுவநாதரும் அரியநாதரும் தம்

பெரும் படையுடன் மதுரையை அடைந்தனர். தந்தைக்கும் தனயர்க்கும் போர் மூள இடந் தரலாகாது என்பது அரியநாதர் விருப்பம். அதனால் அவர் சமாதான வழியில் நாகமரைச் சரிப்படுத்த முயன்றார். அவரது முயற்சி பலன் அளிக்கவில்லை. ஆதலின் இருதிறத்துப் படைகளும் போர் புரியத் தொடங்கின.

## கடும் போர்

நாகமர் பக்கம் இருந்த படை வீரருள் பாதி எண்ணிக்கை உடையவர், முன்னர் அவருடன் விஜயநகரத்திலிருந்து வந்தவர்; மற்றப் பாதியினர் தமிழர். விசுவநாதருடன் வந்தவர் அனைவரும் பாண்டிய நாட்டிற்கே புதியவர்; சிறந்த பிஜப்பூர்ச் சுல்தான் படைகளை முறியடித்த வீரர்கள். அதனால் அவர்கள், மிக்க திறமையுடன் போர் செய்தனர். விசுவநாதர் தாம் தம் தந்தையாருடன் போரிடுவதை மறந்தார்; எதிரி அரசன் ஒருவனுடன் போரிடுவதாகவே எண்ணிக் கடும் போர் புரிந்தார். விசுவநாதர் உண்மையான வீரம் காட்டிப் போர் புரிதலைக் கண்ட அவருடைய வீரர்கள் உற்சாகம் கொண்டு கடும்போர் புரிந்தனர். போரை விரைவில் முடிக்க விரும்பிய அரியநாதர் வீரரை உற்சாகப்படுத்தினார். அவர் நாகமர் சேனையைச் சின்னபின்னப்படுத்தினார். நாகமர் படை கதிகலங்கி ஓட்டம் எடுத்தது. மஹா மண்டலேசுவரர் ஆகிய நாகமரை அவர் தவப்புதல்வரான விசுவநாதர் சிறைப்படுத்தினார்.



## வருந்தத்தக்க காட்சி

விசுவநாதர் தம் தந்தையாரைச் சிறைப்படுத்தும்பொழுது, "எந்தையீர், என்னை மன்னித்து ஆசீர்வதிக்கவேண்டும். நான் அரசர் ஆணைப்படி இங்கு வந்தவன். நான் அரசர் ஆணையை நிறைவேற்றுகிறேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டார். நாகமர் தம் தவற்றை எண்ணிக் கண்ணீர் உகுத்தார். இவர்கள் வருத்த நிலையைக் கண்டு அரியநாதர் வருந்தினார்.

## பாண்டிநாட்டில் அரியநாதர்

விசுவநாதர் அரியநாதரை நோக்கி, "நண்பரே, நான் தந்தையாரை விஜயநகரம் அழைத்துச் செல்வேன். பேரரசர் பாண்டிய நாட்டைப் பற்றி ஒரு முடிவுக்கு வரும்வரை நீர் இங்குப் பாண்டியனுக்கு உதவியாக இருந்து வருக; நம் பேராசின் பிரதிநிதியாக இருந்து கவனிக்க வேண்டும் வேலைகளையும் கவனித்து வருக," என்று கூறினார். அரியநாதர் அதற்கு உடன்பட்டார். விசுவநாதரும் நாகம நாயக்கரும் விஜயநகரம் நோக்கிச் சென்றனர்.

## இராயர் திருமுன்

சில நாட்களில் இருவரும் தம் படையுடன் விஜயநகரம் மீண்டனர். அவர்கள் மீண்ட நேரத்தில் பேரரசர் அவையில் இருந்தார். விசுவநாதர் நாகம நாயக்கருடன் அவைக்குள் நுழைந்தனர். இருவரும் பேரரசரை வணங்கி நின்றனர். இராயர் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. சபை

யோர், "விசுவநாதர் உண்மையான இராஜபக்தி உடையவர். பிள்ளை என்பவன் இப்படி அல்லவா இருத்தல் வேண்டும்!" என்று பேசிக் கொண்ட னர். நாகமர் சொல்ல முடியாத நாணத்தால் தலைகுனிந்து நின்றார்.

### விசுவநாதர் வேண்டுகோள்

இராயர் விசுவநாதரை அன்புடன் நோக்கி னார்; உனது உண்மையான ஊழியத்தைப் பாராட்டுகின்றோம். உனக்கு யாது பரிசு வேண் டும்?" என்று கேட்டார். உடனே விசுவநாதர் இராயரை வணங்கி, "பெருமானே எனக்குப் பொன்னும் பொருளும் போகமும் வேண்டுவதில்லை. என் தகப்பனார் ஆகிய நாகமரைத் தாங்கள் மன் னித்து, அவரை மஹா மண்டலேசுவரர் பதவியில் மீட்டும் வைப்பதாகிய பரிசு ஒன்றையே வேண்டு கின்றேன்," என்று உருக்கமாக உரைத்து நின்றார்.

### இராயர் கருணை

இராயர் விசுவநாதர் முகத்தைப் பார்த்தார். அப்பொழுது விசுவநாதர் கண்கள் இராயரை ஆவ லோடு நோக்கின. நாகமர் சிறிதே முகத்தைத் தூக்கி, இராயர் முகத்தைக் கவனித்தார். இராயர், அவையினர் கருத்தை அறிய அவர்கள் முகத்தைப் பார்த்தார்; முடிவில், விசுவநாதரை நோக்கி, "வீரனே, உன் விருப்பம்போல் ஆகுக. நாகமரே, நீர் உமது பழைய ஆசனத்தில் அமரும்," என்று அருளிச் செய்தார். அக்கருணை உரையைக்



கேட்டு, நாகமர் ஆனந்தக் கண்ணீர் விட்டார்; இராயரை வணங்கித் தம் இருப்பிடத்தில் அமர்ந் தார். இந்த மங்கல முடிவைக் கண்ட விசுவநாதர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை உண்டோ?

இராயர் அருளால் பாண்டியகுமரன் மது ரைக்கு அரசன் ஆக்கப்பட்டான்.

# 7. மதுரையில் நாயக்கர் ஆட்சி

## மதுரையார் வேண்டுகோள்

கிருஷ்ணதேவராயர் ஆணைப்படி அரியணை ஏறிய பாண்டியகுமரன் இரண்டு ஆண்டுகளே அரசாண்டான்; பிறகு அவன் நோய்வாய்ப்பட்டு மடிந்தான். அவனுக்குப் பின்னர்ப் பட்டம் பெறத் தக்கவர் அவன் மரபில் யாரும் இல்லை. பட்டத்திற்கு உரியவர் எவரும் கிடைக்கவில்லை. மதுரையை முஸ்லிம்கள் அரசாண்டகாலத்தில் பாண்டிய மரபில் ஒரு கிளையினர் தென்காசிக்குச் சென்றனர்; அதனைத் தலைநகராகக் கொண்டு தென் பாண்டி நாட்டை ஆண்டு வந்தனர் என்று முன் சொன்னோம் அல்லவா? அந்தக் கிளை மரபினரும் மதுரைப் பட்டத்திற்கு முயலவில்லை; அவர்களில் தக்கவரை அரசராக்க வேண்டும் என்று பேரரசரும் கவலை கொள்ளவில்லை.

இந்தக் குழப்ப நிலையில் கிருஷ்ணதேவ ராயர் காலமானார். உடனே அவருடைய உடன்பிறந்தவரான அச்சுத ராயர் பேரரசரானார்*. அப்பொழுது மதுரை நகரப் பெருமக்கள் பேரரசர்க்கு வேண்டுகோள் ஒன்று விடுத்தனர். அஃதாவது, "பாண்டிய நாட்டில் விசுவநாத நாயக்கரும் தளவாய் அரியநாத முதலியாரும் இருந்து நாட்டைப் பாதுகாத்தல் வேண்டும்," என்பது.

* இவர் ஆட்சிக் காலம் 1535—1542.



## மதுரையில் நாயக்கர் அரசு

மதுரையார் மனம் களிக்க விசுவநாதர் பாண்டி நாட்டை அடைந்தனர். அரியநாதரும் மதுரைமா நகரத்தாரும் அவரை மிக்க சிறப்புடன் வரவேற்றனர். குறித்த நல்ல நாளில் விசுவநாதர் விஜயநகரப் பிரதிநிதியாகவும் மதுரை அரசராகவும் முடிசூடினார்*. அரியநாதர் அமைச்சர் பதவியையும் சேனைத் தலைவர் (தளவாய்) பதவியையும் பெற்றார். நியாயமாக நோக்கின், அமைச்சர் வேலையை ஒருவரும், தானைத் தலைவர் வேலையை மற்றொருவரும் பார்க்கவேண்டும். ஆனால் பாண்டிய நாட்டின் நிலைமை ஒரே குழப்பமாக இருந்ததால், இரண்டு பதவிகளையும் அரியநாதரே தாங்கவேண்டும் என்பது பேரரசர் கட்டளை ஆகும். இராயர் அரியநாதர்மீது வைத்திருந்த நம்பிக்கையையும் மதிப்பையும் இக்கட்டளையிலிருந்து நன்கு அறியலாம் அல்லவா?

## பாண்டிய நாட்டு நிலைமை

விசுவநாதர் அரசரான பொழுது பாண்டிய நாட்டு நிலைமை எப்படி இருந்தது? மாலிக் காபூர் படையெடுப்பிலிருந்தே பாண்டிய நர்ட்டின் அமைதி குலைந்தது. ஐம்பது ஆண்டுகள் மதுரையில் முஸ்லிம்கள் ஆட்சி புரிந்தனர். பின்னர்ப் பாண்டி நாடு விஜயநகரப் பேரரசர்க்கு அடிமைப் பட்டது. பாண்டிய மரபினர் கொற்கை, தென்காசி முதலிய இடங்களில் இருந்து தனித்தனியாக அரசாண்டு வந்தனர். சோழ - பாண்டியர் போர்

* விசுவநாதர் ஆட்சிக் காலம் 1529—1564.

களினால் நாடு அல்லல் உற்றது. பிறகு நாகமர் ஆட்சி சிறிது காலம் நடந்தது. அதன் பின்னர் நாடெங்கும் ஒரே குழப்பம் பரவியது. 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற முதுமொழிப் படி, பாண்டிய நாடு சிறு சிறு அரசர்கள் கையில் சிக்குண்டு தவித்தது. பழைய பாண்டிய அரசன் காதற் கிழத்தியின் மைந்தர் ஐவர் தங்களைப் 'பஞ்ச பாண்டியர்' என்று கூறிக்கொண்டு, பாண்டிய அரசு தங்கட்கே உரியதென்று வாதாடினர்; அங்கங்கே கலகங்களும் குழப்பமும் செய்து வந்தனர். அந்தக் குழப்ப நிலையிற்றான் விசுவநாதர் மதுரை மன்னராக முடி சூடினர்.

## அரியநாதர் அரும்பணி

அரியநாதர் நாட்டில் அமைதியை உண்டாக்கப் பல பணிகள் புரிந்தார். அவற்றுள் முதன்மையானது சோழ - பாண்டிய நாடுகட்குத் திட்டமான எல்லை வகுத்ததேயாம். அவர் தஞ்சையை அடுத்த வல்லத்துக் கோட்டையைச் சோழனுக்குக் கொடுத்தார்; அதற்கு ஈடாகத் திருச்சிராப்பள்ளியைப் பாண்டிய நாட்டுடன் சேர்த்தார்; அடுத்தபடியாகக் காவிரியாற்றின் இரு பக்கங்களிலும் இருந்த காடுகளை அழித்தார். அக்காடுகளில் வழிப்பறிக் கொள்ளைக்காரர் இருந்து, சோழ - பாண்டிய நாட்டு மக்கட்கு ஓயாத துன்பம் விளைத்துவந்தனர். அரியநாதர் அக்கள்வர்களைப் பிடித்து, அவர்கட்கு நன்மதி கூறி, அவர்களை எல்லைக் காவலராக நியமித்தார்; காடுகளை அழித்த இடங்களில் கிராமங்களை உண்டாக்கினர்; காவிரியிலிருந்து பல



கால்வாய்களை வெட்டி நீர்ப்பாசன வசதிகளைச் செய்தார்.

## திருச்சிராப்பள்ளி

முதலியார் திருச்சிராப்பள்ளியைச் செப்பம் செய்ய முயன்றார்; அது பாண்டிய நாட்டிற்கு எல்லை நகரம் ஆதலின், அங்குக் கோட்டை—கொத்தளங்களை அமைத்தார்; நகரத்தைச் சுற்றிலும் இரண்டு பெரிய மதிற் சுவர்களை எழுப்பினர்; ஆழ்ந்த அகழி ஒன்றை வெட்டுவித்தார்; இப்பொழுது அங்குள்ள தெப்பக்குளத்தை உண்டாக்கியவர் அரியநாதரே ஆவர்; அவர் அரசர்க்கு வேண்டிய அரண்மனை ஒன்றையும் அமைத்தார்.

## மதுரை மாநகரம்

முதலியார் மதுரையையும் காவல் மிகுத்த நகரமாக்க முனைந்தார்; அங்கங்கு இடிந்தும் பழுதுபட்டும் கிடந்த பாண்டியர் காலத்து மதிற் சுவரை நீக்கிப் புதிய வன்மையான மதிற் சுவர் ஒன்றை நகரைச் சுற்றி எழுப்பினர்; கோட்டையைப் புதுப்பித்தார்; எழுபத்திரண்டு கொத்தளங்களைப் புதியனவாக அமைத்தார்; அவற்றில் காவலாளிகளையும் வீரர்களையும் நியமித்தார்; அங்கங்குப் பீரங்கி முதலிய போர்க் கருவிகளை வைத்தார்.

## வையை நீர்

வையையாற்று நீர் வயல்களுக்குப் பெரிதும் பயன்படுமாறு செய்த பெருமை முதலியாருக்கே உரியதாகும். அவர் அந்தப் பழைய ஆற்றில் அங்கங்கே அணைகளைக் கட்டினர்; பல கால்வாய்களை

வெட்டினர்; அவற்றின் வழியே வையை நீர் பாண்டி நாட்டு வயல்களுக்குப் பாயுமாறு செய்தார். இப் புண்ணியமான வேலையில் ஆயிரக் கணக்கான தமிழர்க்கு வேலை கிடைத்தது. கரம்பாகக் கிடந்த நிலங்கள் பயிர் செய்யத்தக்க பண்பு பெற்றன. குடிமக்கள் முதலியாரைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றலாயினர்.

## திருநெல்வேலியில் குழப்பம்

முதலியார் வட பாண்டி நாட்டில் இத்தகைய அரும்பணிகள் செய்துவந்ததால், மதுரையில் நாயக்கர் அரசு வேரூன்றலாயிற்று. வட பாண்டி நாட்டார் 'நாயக்கர் அரசே வேண்டும்' என்று சொல்லி முதலியார் அரும்பணிகளைப் பாராட்டி வந்தனர். இவற்றைக் கண்டு கயத்தாறு என்னும் ஊரில் இருந்த பஞ்சபாண்டியர் அச்சங்கொண்டு கிளர்ச்சி செய்தனர்; "பாண்டி நாட்டில் பாண்டியர் ஆட்சி வேண்டும்; தெலுங்கர் ஆட்சி வேண்டா. நாடு எங்கட்குச் சொந்தம். அந்நியர் இங்குப் புக இடம் இல்லை," என்று பிரசாரம் செய்தனர்; திருநெல்வேலி ஜில்லாவில் இருந்த கள்ளர்-மறவர் முதலிய வீரர்களைத் தட்டிக் கிளப்பினர். அதனால் தமிழ் வீரர்கள் கொதித்து எழுந்தனர்; தென்பாண்டி நாட்டில் பெரும்படை திரண்டது. பஞ்ச பாண்டியர் அப்படையை நடத்திக்கொண்டு, நாயக்க அரசை ஒழிக்கும் நோக்கத்துடன் போருக்குப் புறப்பட்டனர்.

## போர் நிகழ்ச்சிகள்

பஞ்சபாண்டியர் நாட்டுப்பற்றை அரியநாதர் பாராட்டினர்; எனினும் அரச சேவையை நிறை



வேற்ற வேண்டும் பொறுப்பினால் அவர்களுடன் போர் புரியத் துணிந்தார்; வடபாண்டி நாட்டுப் படையுடன் சென்று போரிற் குதித்தார். இரு திறத்துப் படைகளும் கடுமையாகப் போர் புரிந்தன. எனினும் பாண்டியர் படை நாட்டுப்பற்று மிகுந்த நிலையில் உயிரைத் துரும்பாக மதித்துப் போரிட்டது. முதலியாரும் போரைக் கடுமையாகவே நடத்தினர். வாரங்கள் மறைந்தன; மாதங்கள் தோன்றின. ஆறு திங்கள் அரும்போர் நிகழ்ந்தது. எவருக்கும் வெற்றியும் இல்லை; தோல்வியும் இல்லை. அரியநாதரும் விசுவநாதரும் அச்சமும் கவலையும் கொண்டனர். நாட்டுப்பற்று மிகுந்த வீரரை எதிர்த்து வெல்லுதல் இயலாதென்பதை அவ்விருவரும் உணர்ந்தனர்.

## முதலியார் யோசனை

"நாம் தென்பாண்டி நாட்டாரைப் போரில் வெல்ல இயலாது; ஆதலின் சூழ்ச்சியினால்தான் வெல்ல வேண்டும். வீணாகப் பலரைப் போரில் பலியிடுவதில் பயனில்லை. அவர்கள் தங்களுட் சிறந்த வீரன் ஒருவனை அனுப்பட்டும். நாமும் நம்மவருட் சிறந்த வீரன் ஒருவனை அனுப்புவோம். இருவரும் தனிப் போர் புரியட்டும். அவருள் வெல்பவர் கட்சிக்கே பாண்டிய நாடு உரியதாகும். இந்த யோசனையைப் பகைவரிடம் தெரிவிப்போம்," என்று அரியநாதர் எண்ணினர். அவர் முடிபை விசுவநாதர் ஆதரித்தார்; பஞ்சபாண்டியரும் ஆதரித்தனர்.

## வீரர் இருவர்

'ஒவ்வொரு கட்சியின் சார்பாகப் போர்புரியும் வீரர் யாவர்?' என்ற கேள்வி அடுத்து எழுந்தது. மதுரை அரசர் பக்கம் முதலியார் 'நான்' என்றார். விசுவநாதர் 'நான்' என்றார். பின்னர் விசுவநாதரே போர் செய்வது என்பது முடிவாயிற்று. பஞ்ச பாண்டியருள் தென் பாண்டி வீமன் என்ற பாண்டியன் போர்வீரனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டான்.

## வீரர் தனிப்போர்

வீரர் இருவரும் தத்தம் வழிபடு கடவுளை வேண்டிப் போர் தொடங்கினர். தென் பாண்டி வீமன் திருநெல்வேலி ஜில்லாவிற் புகழ்பெற்றவன்; வாட்போரில் வலியவன்; ஈட்டிப்போரில் இணை யற்றவன்; மற்போரில் முதலிடம் பெற்றவன். அவன் மீசையை முறுக்கிவிட்டு வந்து தயாராக நின்றான். விசுவநாதர் எளியவரா? அவர் அரச மரபினர்; விஜயநகரப் பேரரசின் வலிய தூண் என்று சொல்லப்பட்ட நாகம நாயக்கர் புதல்வர் அல்லரா? அவர் தோள்வலி கொண்டவர்; அஞ்சாத ஆண்மையாளர். அவர் மனமகிழ்ச்சியுடன் வந்து, பாண்டி வீமனைப் புன்முறுவலுடன் கை குலுக் கினார்.

வீரர் இருவரும் மற்போர் புரிந்தனர்; இட சாரி-வலசாரி வந்தனர்; முன் பாய்ந்தனர்; பின் சாய்ந்தனர்; மேல் எழும்பிக் குதித்தனர்; ஒருவரை ஒருவர் முட்டிக்கொண்டனர்; மோதிக்கொண்ட னர்; குத்திக்கொண்டனர்; ஒருவர்க்கு ஒருவர் பாய்ச்சல் காட்டினர். இருதிறத்துப் படைவீரரும் இமை கொட்டாமல் அவர்களைக் கவனித்து வந்தனர்.



இருவரும் வாட்போரில் இறங்கினர். விசுவ நாதர்க்கு உடம்பெங்கும் காயங்கள் உண்டாயின. உதிரம் பெருக்கெடுத்தது. அது கண்டு அவர் அஞ்சினார். உடனே தம் சுயமதிப்பு அவர் நினை விற்கு வந்தது; மான வுணர்ச்சி மேல் எழுந்தது. அவர் வீராவேசம் கொண்டார்; வாளை வேடிக்கை யாகச் சுற்றுவதுபோலப் பாசாங்கு செய்து திடீ ரெனப் பாண்டி வீமன் வயிற்றிற் பாய்ச்சினர்; அதே சமயம் அவரும் நிலத்திற் சாய்ந்தார். ஆயின் விசுவநாதர் உயிர் பிழைத்தார். பாண்டி வீமன் பரகதி அடைந்தான்.*

## போரின் முடிவு

பஞ்ச பாண்டியர் ஒப்பந்தப்படி தோற்றவர் ஆயினர்; அதனால் அவர்கள் மனம் வருந்திப் பொதியமலைப் பிரதேசத்திற்குச் சென்றுவிட்டனர். விசுவநாதரே பாண்டி நாட்டு அரசர் என முடிவு செய்யப்பட்டது. விசுவநாதர் காயங்கள் ஆறி உடல் நலம்பெறப் பல மாதங்கள் ஆயின. ஆயினும், நாட்டில் அமைதி ஏற்பட்டதன்றோ?

## அரியநாதரே அரசர்

பெயரளவில் விசுவநாதர் அரசர்; செயல் அளவில் அரியநாதரே அரசர். அவர் திருச்சிராப் பள்ளி முதல் கன்னியாகுமரிவரை யுள்ள நாட்டை அமைதிப்படுத்தினார்; திருநெல்வேலியில் உள்ள

* Indian Antiquary, 1915, pp. 37-38

சிவபிரான் திருக்கோவிலைப் புதுப்பித்தார்; தாமிரபரணியிலிருந்து பல கால்வாய்களை வெட்டுவித்து நாட்டை வளப்படுத்தினர்; அவ்வாற்றின் கரைகளில் இருந்த காடுகளை அழித்துக் கள்வர் பயத்தைப் போக்கினர்; திருநெல்வேலி நகரத்தைப் புதுப்பித்தார்; பாளையங்கோட்டை என்னும் இடத்தில் பெரிய கோட்டை ஒன்றை எழுப்பினர்; மேற்கு மலைச் சாரலில் இருந்த குறுநில மன்னரை அடக்கி அப்பகுதியில் அமைதியை நிறுவினர்.

### முதலியாரும் சேதுபதியும்

இராமநாதபுரம் ஜில்லாவை ஆண்ட **சேதுபதி** உரிமை வீரர். அவர் விஜயநகரப் பேரரசுக்கு ஒரு சமயம் அடங்கி நடப்பார்; மற்றொரு சமயம் அடங்காது நடப்பார். அவர் நாட்டில் மறவர் மிகுதி. மறவர் சிறந்த தமிழ் வீரர். அவர்கள் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டில் போர்த் தொழிலில் ஈடுபட்டுவந்த மரபினர். சேதுபதியும் அம்மறவர் துணையைப் பெற்று எந்த அரசரையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றவர். அரியநாத முதலியார் அத்தகைய சேதுபதியைச் சாம-பேத-தான-தண்டத்தால் அடக்கி, அவருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்.

### முதலியாரும் கொங்கு நாடும்

இவ்வாறு பாண்டிய நாட்டைப் பண்படுத்திய முதலியார் கொங்குநாட்டை அடைந்தார். அந்நாடு சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஜில்லாக்களைக் கொண்டது. இராயர் ஆட்சிக்கு அடங்காமல் குறுநில மன்னர் சிலர் அங்குக் கூத்தாடினர். அரியநாதர் ஒரு படையுடன் அங்குச் சென்றதும், அவர்கள் பெட்டிப் பாம்புபோல அடங்கினர். இங்ஙனம் அரியநாத முதலியார் நாயக்க அரசைத் தென்னாட்டில் பரப்பி நிலைபெறச் செய்தார்.



### நாடெங்கும் கோட்டைகள்

இந்தப் பரந்த பெருநாட்டைக் காப்பது எப்படி? முதலியார் இப்பெருநாட்டின் முக்கிய இடங்களில் கோட்டைகளை எழுப்பினர்; மைசூர்க்கும் கோயமுத்தூர்க்கும் இடைப்பட்ட **சத்திய மங்கலம்** என்னும் ஊரில் ஒரு சிறந்த கோட்டை எழுப்பப்பட்டது. பவானித் தாலூகாவில் காவேரிபுரத்தில் ஒரு கோட்டை அமைக்கப்பட்டது. பவானி நகரில் ஒரு கோட்டை அமைப்புண்டது. ஆண்டியூர்க் கோட்டையும் ஒன்று. கோயமுத்தூருக்கு அப்பால் பாகேசுவரன் கோட்டை, மலைக் கோட்டை முதலியன எழுப்பப்பட்டன. சேலத்திலும் ஒரு கோட்டை எழுந்தது. ஓமலூர், சேந்தமங்கலம், அனந்தகிரி, மோகனூர், பரமட்டி, சங்கரி துர்க்கம், நாமக்கல், திருச்செங்கோடு முதலிய இடங்களில் கோட்டைகள் கட்டப்பட்டன. தெற்கே மதுரை, திண்டுக்கல், அழகர்மலை முதலிய இடங்களில் கோட்டைகள் அமைப்புண்டன. இவ்வாறு சிறந்த அரசியல் நிபுணரான முதலியாரால் பல கோட்டைகள் கட்டப்பட்டன. ஒவ்வொரு கோட்டையிலும் காவலாளரும் படைவீரரும் வைக்கப்பட்டனர்.

# 8. பாளைய வகுப்பு

## தமிழ்நாட்டுப் பெருமக்கள்

அரியநாதர், 'நாம் அமைதிபெறச் செய்த பெரிய நிலப்பகுதி, என்றென்றும் நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கவேண்டுமே! அதற்கு என்ன செய்வது!' என்று யோசித்தார். பல நாடுகளைக் கொண்ட பேரரசை நிலைபெற ஆள்வது எளிதன்று. அந்நாடுகளில் பலவகைப் பெருமக்கள் இருந்தனர். அவர்களுள் சிலர் இக்கால 'ஜமீந்தார்' போன்றவர்; தங்கள் மனம்போலச் சுதந்திர அரசர்களாக இருந்தவர் ஒருவகையினர்; ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ்நாட்டு மூவேந்தர்தம் அரசியலில் அமைச்சர், தானைத் தலைவர் முதலிய பெரிய பதவிகள் தாங்கிவந்த மரபினர் ஒரு சாரார்; வீராதி வீரர்களாகப் பல போர்களில் விளங்கித் தம் ஆண்மையைக் காட்டி ஊர்களையும் கோட்டைகளையும் கைக்கொண்டு சிற்றரசு செய்தவர் ஒரு வகையினர். விஜயநகர அரசு தெற்கே பரவியபொழுது தென்னாடு வந்த படையில் தொடர்புகொண்டு, தென்னாட்டில் சிற்றரசராக நிலைத்துவிட்ட வடுகப் பெருமக்கள் ஒரு வகையினர்.

## பாளையங்கள்

கம்பண உடையார் காலத்திலும் அவர்க்குப் பிறகும் வந்த தெலுங்கப் படையினர்கள் தமிழ்நாட்டு முக்கிய இடங்களில் நிலையாகத் தங்கிவிட்டனர். அந்த இடங்கள் **பாளையங்கள்** எனப்பட்டன. அப்பாளையங்களில் பெரும்பாலான மக்கள் முதலில் தெலுங்கரே யாவர். படை வீரருடன் அவர்கட்கு உதவியாகப் பலவகைத் தொழிலாளரும் தெலுங்க நாட்டிலிருந்து வந்து குடியேறினர். இங்ஙனம் மதுரை திருச்சி ஜில்லாக்களில் உண்டான பாளையங்கள் பல. கொங்குநாட்டுப் பாளையங்கள் பல. திருநெல்வேலி ஒன்றிற்றான் பெரும்பாலான பாளையக்காரர் தமிழர்.

## விருப்பும் வெறுப்பும்

புதியவராகத் தமிழகத்திற் குடியேறிய தெலுங்கப் பெருமக்கள் விசுவநாதர் ஆட்சி மதுரையில் ஏற்படப் பேருதவி புரிந்தவர்கள்; தங்கள் உயர்வை அவ்வரசினால் நிலைநாட்டிக்கொள்ள விரும்பியவர்கள். அவர்கள் தங்கட்கு அரசாளும் சிறப்பு வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தார்கள். தமிழ்நாட்டுப் பெருமக்கள் நாயக்க அரசு தம் நாட்டில் ஏற்பட்டதை வெறுத்தனர்; தங்கள் உரிமை கெட்டதென்று சீறிக் கொண்டு இருந்தனர். புதுக்கோட்டைத் தொண்டைமான் போன்ற சிற்றரசர் முணுமுணுத்தனர்.

## முதலியார் யோசனை

இப்பலதிறப்பட்ட பெருமக்களையும் நாயக்க அரசர்க்கு உண்மை உடையவராகச் செய்யவேண்டுமாயின், அவர்கள் மனம் குளிர ஏதாகிலும் செய்தாக வேண்டும். மேலும், அவர்கள் ஒழுங்காக இராவிடில் நாயக்க அரசு தமிழ் நாட்டில் நிலையாது.

முதலியார் இவ்விரண்டையும் நன்கு அறிந்தார். அதனால், அப்பேரறிஞர் இவ்விரண்டும் வெற்றி பெறத்தக்க திட்டம் ஒன்றைத் தயாரித்தார். அதனை விசுவநாதர் முழுமனத்துடன் ஆதரித்தார். மேற் சொன்ன பெருமக்களும் அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். முதலியார் அத்திட்டத்தை நடத்திக் காட்டிப் பெரும்புகழ் பெற்றார். அதுதான் **'பாளைய வகுப்புத் திட்டம்'** என்பது.

## பாளைய வகுப்பு

நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதியில் தொன்றுதொட்டு இருந்துவந்த சிற்றரசர்கள், பெருமக்கள், வீரர் தலைவர் முதலியோர் பெயர்களும் புதியவராகக் குடியேறிய தெலுங்கப் பெருமக்கள் பெயர்களும் தொகுக்கப்பட்டன. அவர்கள் கைவசம் இருந்துவந்த ஊர்களும் கணக்கிடப் பட்டன. முதலியார் அவரவர் ஆண்டுவந்த பகுதியை அவரவர் வசமே விட்டார்; புதியவர்க்கும், அதுவரை ஒன்றுமே பெறாதிருந்த பெருமக்கட்கும் பல சிற்றூர்களை அளித்தார்; அவர்கட்கும் **பாளையக்காரர்** என்ற பெயர் சூட்டினார். பாளையக்காரர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதி **பாளையம்** எனப் பெயரிடப்பட்டது.

## பாளையக்காரர் உரிமைகள்

பாளையத்தில் வரிதண்டுதல், நீதி வழங்குதல், படை வைத்துக்கொள்ளுதல், பாதுகாவல் புரிதல் முதலிய அனைத்தும் பாளையக்காரர் கடமை. பாளையத்தின் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு



பங்கு பாளையக்காரர் எடுத்துக்கொள்ளலாம்; ஒரு பங்கைப் பாளையத்துக்காகச் செலவிடவேண்டும்; ஒரு பகுதியை நாயக்க மன்னருக்கு ஆண்டு தோறும் சேர்ப்பிக்கவேண்டும்.

பாளையக்காரர் தம் பாளையத்திற்கு அரசர் ஆவர். பாளைய மக்கள் அவரை 'அரசர்' என்று அழைப்பர். பாளையக்காரர் விடுதி 'மாளிகை' அல்லது 'அரண்மனை' என்றே அழைக்கப்படும். பாளையக்காரர் பெருமக்களும் பிறரும் புடைசூழக் கொலு இருப்பர். சிறப்பு நாட்களில் குடிகள் அரசரைப் பணிந்து காணிக்கை செலுத்துவர். அவர் முடிமன்னரைப் போலப் பாரிவாரங்கள் புடைசூழப் பவனி வருவார். இராஜ சின்னங்களான குடை-சாமரம்-முரசம் முதலியன அவர்க்கு உண்டு.

## பாளையக்காரர் கடமைகள்

பாளையக்காரர் தம் ஆட்சிக்கு உட்பட்ட இடத்தில் காடழித்தல், கிராமங்கள் அமைத்தல், பயிர்த்தொழிலைப் பெருக்குதல், கைத்தொழில்களை வளர்த்தல், கோவில்களை அமைத்தல், அவற்றைப் பாதுகாத்தல், சாலைகளை அமைத்தல், நீர்ப்பாசன வசதிகளை உண்டாக்குதல், நாட்டைக் காவல் புரிதல், வழக்குகளை விசாரித்து நீதி வழங்குதல், கல்விச் சாலைகளை வைத்தல், படை ஒன்றைத் தயாரித்துப் பாதுகாத்து வருதல் முதலியன செய்யக் கடமைப் பட்டவர்; தேவை உண்டாயின், பேரரசருக்கு அப் படையைப் போருக்கு உதவவும் கடமைப்பட்டவர் ஆவர். பாளையக்காரர் தமது பாளையத்தை அடுத்து இருக்கும் (அரசர்க்குச் சொந்தமான) சிற்றூர்களையும் கண்காணிக்கவேண்டும்.






## கோட்டைக் காவல்

அரியநாதர் அமைத்த பாளையங்கள் எழுபத்திரண்டு. ஆகவே பாளையக்காரரர் எழுபத்திரண்டு பேர் உண்டாயினர். மதுரைக் கோட்டையின் கொத்தளங்கள் எழுபத்திரண்டு அல்லவா? ஒவ்வொரு கொத்தளமும் ஒரு பாளையக்காரரர் காவலில் விடப்பட்டது; அக் கொத்தளத்தைப் பாதுகாப்பதற்கு உரிய செலவு முழுவதும் அப்பாளையக்காரரைச் சேர்ந்தது. போர்க் காலத்தில் தாம் பேரரசர்க்கு அனுப்பும் படைக்கு உண்டாகும் செலவை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்; தம் பிரதிநிதியாகத் தம் பாளையச் செய்திகளை அரசர்க்கு எடுத்துக்கூற, அறிஞர் ஒருவர் அரச சபையில் எப்பொழுதும் இருந்துவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

## பாளையத்தில் தலையாரி

பாளையக்காரரர் உத்தியோகஸ்தர் பலரை நியமித்துப் பாளைய விஷயங்களைக் கவனிப்பர். அவரது பாளையத்தைக் காவல் புரியத் தலையாரி ஒருவன் இருப்பான். ஊரையும் ஊர்ப்பாதைகளையும் காவல் புரிதல் அவன் தொழில். களவைக் கண்டு பிடிக்கும் தொழிலும் அவனுடையதே. திருட்டைக் கண்டு பிடியாவிடில் களவுபோன பொருள்களின் மதிப்பை அவன் கட்டித்தரவேண்டும். இந்தக் கடுமையான விதியினால், தலையாரி இராப்பகலாகப் பாளையத்தைக் காத்துவருவான் அல்லவா?

## அனைவருக்கும் ஆறுதல்

முதலியார் அமைத்த இப்பாளைய வகுப்புத் திட்டத்தால் பெருமக்களும் சிற்றரசரும் ஆறுதல் அடைந்தனர்; நாயக்க அரசின்மீது இருந்த சீற்றத்தை விட்டனர்; மன மகிழ்ச்சியோடு தத்தம் பாளைய முன்னேற்றத்தில் கருத்தைச் செலுத்தினர்; காடுகளைக் கெடுத்து நாடாக்கினர்; அதனால் கொடிய விலங்குகளின் தொல்லையையும் வழிப்பறி செய்பவர் தொல்லையையும் ஒழித்தனர்; நீர்ப்பாசன வசதியைப் பெருக்க ஆறுகளிலிருந்து கால்வாய்களை வெட்டினர்; ஏரிகளைத் தோண்டினர்; வரண்ட நிலப்பகுதிகளை வேளாண்மைக்கு உரிய நன்னிலம் ஆக்கினர்; கைத்தொழில்களை வளர்த்தனர்; மலையடிவாரங்களை பண்படுத்திப் பயிர் செய்ய வழி உண்டாக்கினர். இத்தகைய முயற்சிகளால் ஒவ்வொரு பாளையப்பட்டுக் குடிகளும் உழைப்பும் ஊக்கமும் கொண்டனர்; பயிர் வேலையில் ஈடுபட்டனர்; கைத்தொழில்களைக் கண்ணியமாகச் செய்தனர்; வாணிகத்தை வளம்பெற வளர்த்தனர்; பாளையக்காரரை அன்புடன் பாராட்டி அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்தனர். பாளையக்காரர் தம் பாளையத்தைப் பாதுகாத்து வந்ததுடன் பக்கத்தில் இருந்த அரசர் நிலங்களையும் கிராமங்களையும் காவல் புரிந்தனர்.

## சீமைகள்

அடுத்தபடியாக முதலியார், நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட பெருநாட்டைப் பல மண்டலங்கள் அல்லது **சீமைகளாக** வகுத்தார்; ஒவ்வொரு சீமைக்கும் ஆணையாளர் (கவர்னர்) ஒருவரை நியமித்தார். அவர் அந்தச் சீமையில் உள்ள பாளையக்காரரை மேற்பார்வையிடுவர்; மாகாண ஆட்சியை ஒழுங்காகக் கவனித்துக்கொள்வர். ஆணையாளர் பதவி சிறந்த சேனைத் தலைவர்கட்கே அளிக்கப்பட்டது. முதலியார் பிரித்த சீமைகளுள் சத்தியமங்கலம், கோயமுத்தூர், திண்டுக்கல், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி என்பன குறிப்பிடத் தக்கன. 'மதுரைச் சீமை,' 'திருநெல்வேலிச் சீமை' என்னும் வழக்கு இன்றளவும் இருந்து வருகின்றது அன்றோ? இந்த வழக்கு நமது முதலியார் காலத்திலிருந்தே ஏற்பட்டதாகும்.



## தலை நகரங்கள்

முதலியார் நாயக்க அரசுக்கு இரண்டு தலைநகரங்களையும் அமைத்தார்; ஒன்று மதுரை; மற்றொன்று திருச்சிராப்பள்ளி; இரண்டு இடங்களிலும் அரண்மனைகள் அழகாகத் தக்க பாதுகாப்புடன் அமைக்கப்பட்டன. நாயக்கரும் அரியநாத முதலியாரும் மதுரையில் மீனாக்ஷி-சுந்தரேசரையும் திரிசிரபுரத்தில் தாயுமானவரையும் மனமுருக வழிபட்டுவந்தனர்.

## நாடெங்கும் அமைதி

அரியநாத முதலியாரது அரிய அரசியல் திட்டம், குழப்பத்திலும் வறுமையிலும் சிறப்புற்றிருந்த தமிழகத்தை நல்வழிப்படுத்தியது; மக்கள் பழைய தமிழ் அரசர் காலத்தில் பெற்றிருந்த மன

அமைதியைப் பெற்றுத் தம் வாழ்க்கையை நேரிய முறையில் நடத்தி வரலாயினர். அரியநாதர் அவ்வப்போது பெருநாடு முழுவதும் சுற்றிப் பாளையக்காரர் மகிழ்ச்சி அடையுமாறு செய்து வந்தார். அப் பாளையக்காரர் பரம்பரையினர் இக்காலத்திலும் இருந்துவருகின்றனர். அவர்களைக் காண்கையில் நமக்கு அரியநாதர் நினைப்பு எழுதல் இயற்கை அன்றோ?

# 9. அன்று கொடுத்த ஓலை

## வேதியர் வருகை

இங்ஙனம் நாடு முறைப்படுத்தப்பட்ட பிறகு நாயக்கர் ஆட்சி தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றியது. ஒருநாள் விசுவநாதர் அரச சபையில் கொலுவீற்றிருந்தனர். அவருக்கு அருகில் தளவாய் அரியநாத முதலியார் அமர்ந்து அரசகாரியங்களைக் கவனித்திருந்தனர்; பாளையப்பட்டுகளின் பிரதிநிதிகள் எழுபத்திரண்டு பேரும் தத்தம் இருக்கையில் இருந்தனர்.

அப்பொழுது வேதியர் ஒருவர் அரண்மனை வாயிலை அடைந்தார். அவர் நெற்றியிலும் கை, கழுத்து, மார்பு முதலிய இடங்களிலும் திருநீற்று ஒளி விளங்கியது. வண்ணான் வெளுக்காத ஆடை ஒன்றும் அவர் அரையை அழகு செய்தது. மேலாடை ஒன்று அங்ஙனமே இருந்தது. அவருடைய சிறந்த முகமும் பெருத்த விழிகளும் கூரிய பார்வையும் அவரை அறிஞர் என்று புலப்படுத்தின. அவர் சிறந்த வைதிகராகக் காணப்பட்டார்.

## வாயிலில் வேதியர்

அரண்மனை வாயிற்காவலர் அவரை உள்ளே விட மறுத்தனர்; "ஐயா, இஃது அரண்மனை.

அரசர் கொலுமண்டபத்தில் அரச காரியங்களை ஆராய்கிறார். அநுமதி இன்றி நீங்கள் உட் செல்லுதல் முடியாது'' என்றனர். வேதியர், "காவலாளிகளே, நீங்கள் உங்கள் பணியை நன்கு நிறைவேற்றுகிறீர்கள். அது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் தளவாய் அரியநாத முதலியார் அவர்களைக் காணவேண்டும். அவர்கள் சபையில் இருக்கிறார்களா?'' என்றார். வாயிற் காவலர், "ஐயரே, தளவாய் அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். இப்பொது அவர்களைப் பார்ப்பது முறையன்று. வேலை முடிந்தபின் அவர்கள் மாளிகைக்குச் செல்வார்கள். நீங்கள் அவர்களை மாளிகையில் பார்ப்பது நலம்,'' என்றனர்.

மறையவர் அதற்கு உடன்படவில்லை. அவர் காவலரை நோக்கி, நீங்கள் அரியநாதரிடம் சென்று, "பிராமணர் ஒருவர் உங்களைப் பார்க்க விரும்புகிறார்; வாயிலில் காத்திருக்கிறார் என்று சொல்லுங்கள். நீங்கள் எனக்கு இந்த உதவி செய் தாற் போதும்,'' என்றனர். வாயிற் காவலருள் ஒருவன் வேறு வழியின்றி உள்ளே சென்றான்; சமயம் பார்த்து முதலியாரைப் பணிந்தான்; மறையவர் வருகையைத் தெரிவித்தான். முதலியார், "அவரை உடனே அழைத்து வருக'' என்றார். அடுத்த நிமிடம் மறையவர் முதலியார்முன் தோன்றினர்.



**உரையாடல்**

**முதலியார்:** ஐயர் அவர்களே, வாருங்கள். தாங்கள் என்னைத் தேடி வந்தீர்களா?

**ஐயர்:** ஆம்; தாங்கள்தானே அரியநாத முதலியார் அவர்கள்?

**முதலியார்:** ஆம், அடியேன் பெயர் அது தான். தாங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?

**ஐயர்:** நான் மெய்ப்பேட்டிலிருந்து இங்கு வந்தேன்.

**முதலியார்:** (வியப்புடன்) மெய்ப்பேட்டி லிருந்தா வந்தீர்கள்! மிக்க மகிழ்ச்சி. அதுதான் இந்த ஏழை பிறந்த ஊர். அங்கு எல்லோரும் சுகத்துடன் இருக்கின்றனரா? ஊர் நல்ல நிலையில் இருக்கிறதா?

**ஐயர்:** எல்லோரும் சுகமே. ஊர் நல்ல நிலை யில் இருக்கிறது. தாங்கள் பிறந்த இடம் வேறு எப்படி இருக்கும்? ஊரார் தங்களைப்பற்றியே எப் பொழுதும் பாராட்டிப்பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**முதலியார்:** எல்லாம் ஏகம்பன் திருவருள். அவன் அருள் இல்லாவிடில் இந்த ஏழைக்குப் பெருமை ஏது? மறையவரே, தாங்கள் யார்? என் னிடம் வந்த காரணம் யாது?

**ஐயர்:** முதலியார் அவர்களே, நான் மெய்ப் பேட்டைச் சேர்ந்தவன். என் இளமையில் தந்தை யார் காலமானார். நான் காப்பவர் இன்றிக் காசி யாத்திரை சென்றேன்; அங்குப் பெரியவரைச்

சரண் அடைந்து வேத-ஆகம-புராணங்களைப் பல ஆண்டுகள் படித்தேன்; இராமேசுவர யாத்திரையாக வந்தேன்.

முதலியார்: அப்படியா! மிக்க மகிழ்ச்சி. எனக்குத் தங்களைப்போன்ற படிப்பாளிகளிடம் மிக்க மதிப்புண்டு. தாங்கள் என்னை நாடி வந்த காரணம் கூறவில்லையே?

ஐயர்: தங்களைப் பார்த்துப் போகவே வந்தேன்; எல்லோரும் இன்பமாக வாழவேண்டும் என்னும் ஒன்றைத் தவிர, உத்தம பிராமணனுக்கு வேறு என்னவேண்டும்?

முதலியார்: மிக்க மகிழ்ச்சி. உத்தம வேதியர் இலக்கணம் அதுதான். சான்றோர் அதனைத்தான் விரும்புவர். தாங்கள் என்னைப் பார்க்க விரும்பியதற்கு மூலம் என்ன?

ஐயர்: மூலமா? மொழிகின்றேன்: நான் காசியிலிருந்து சில மாதங்கட்கு முன்பே மெய்ப்பேடு மீண்டேன்; இந்தக் கன்னி மாதத்தில், சரசுவதி பூசைக்காகப் பழைய ஏடுகளைப் புரட்டினேன்; அப்பொழுது என் தந்தையார் கைப்பட எழுதிய ஓர் ஓலை நறுக்கும் வேறோர் ஓலை நறுக்கும் அகப்பட்டது. அந்த ஓலை நறுக்கு இதுதான். இது தாங்கள் எழுதியதுதானா?

## 'அன்று கொடுத்த ஓலை'

அரியநாத முதலியார் அந்த ஓலையை வாங்கிப் பார்த்தார்; அதில் இருந்த செய்தியைப் படித்தார்; கீழே 'அரியநாயகன்' என்று இருந்த தம் கை



யெழுத்தைப் பார்த்தார்; "ஆ! இஃது **அன்று கொடுத்த ஓலை**" என்று தம்மை மறந்து கூவினார். விசுவநாத நாயக்கர், மறையவர் வந்தது முதல் அதுவரை அரியநாதரையே கவனித்துக்கொண்டு இருந்தார். ஆதலால் அவர் அரியநாதரைப் பார்த்து, "முதலியாரே, என்ன விஷயம்? எங்களுக்குச் சொல்லலாகாதா? அன்று கொடுத்த ஓலை என்று உம்மையும் மறந்து கூவினீரே, என்ன செய்தி?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

முதலியார் தமது இளம்பருவத்தில் (நாற்பது ஆண்டுகட்கு முன்) தமக்கு வாழ்வு வரும் என்று சாஸ்திரி ஒருவர் சொன்னதையும் தாம் அவருக்கு எழுதிக்கொடுத்த ஓலை பற்றிய விவரத்தையும் அவையோர் அனைவரும் கேட்க விளக்கமாக விளம்பினார்; பின்னர் மறையவரைக் காட்டி, "இவர் அப்பெரிய சோதிடர் புத்திரர்" என்று கூறினார்.

## சொல் தவறாத செம்மல்

பிறகு முதலியார் மறையவரைப் பார்த்து, "ஐயரே, இது நான் எழுதிக்கொடுத்த ஓலைதான்; சிறிதும் ஐயம் இல்லை. அதனிற் கண்டபடி நான் எனது சம்பத்தில் காற்பகுதியை இப்பொழுதே உங்கட்குத் தருகிறேன், பெற்றுக்கொள்க," என்றனர். உடனே சபையோர், "அடடா! என்ன! என்ன! சம்பத்தில் காற்பகுதியா! சொன்ன சொல் தவறாத செம்மல் இவர் அல்லவா? என்ன பெருந்தன்மை!" என்று வியப்புடன் பாராட்டிக் கூறினர்.

முதலியார் பேச்சைக் கேட்டு மறையவரும் திகைத்தார். அவர் கண்களில் ஆனந்த நீர் வெளிப்

பட்டது. அவர் முகம் மலர்ந்தது. அம்மறையவர் பேரன்புடன் முதலியாரைப் பார்த்து, "முதலியார் அவர்களே, தங்கள் சத்தியமே சத்தியம்! தாங்களே சொல் தவருத உத்தமர். நீங்கள் மேலும் பல போக பாக்கியங்களைப் பெற்று நீடு வாழவேண்டும். தங்கள் புகழ் எங்கும் பரவவேண்டும். தமிழ்நாடு உள்ள அளவும் தங்கள் பெயர் இந்நாட்டில் நிலவ வேண்டும். நான் வேதம் ஓதும் பிராமணன். எனக்குத் தங்கள் சம்பத்தில் கால் பாகம் எதற்கு? பிறவிப் பெரும்பயன் அடைவதே என்நோக்கம். மக்கள் சமரச சன்மார்க்க நெறியில் வாழப் பார்ப் பதே எனது விருப்பம்," என்று மகிழ்ச்சி பொங் கப் பேசினர்.

## வேதியர் விருப்பம்

அரியநாதர் அகம் குழைய அந்தணரை நோக்கி, "ஐயரே, நீங்கள் உங்கள் பரந்த கல் விக்கும் நிறைந்த ஒழுக்கத்திற்கும் ஏற்பப் பேசியது சரியே. ஆயினும், தங்கட்கு ஏதேனும் கொடுத் தால்தான் என்மனம் அமைதியுறும். ஆதலின் 'வேண்டா' எனக் கூருது, தாங்கள் ஏற்றருளல் வேண்டும்; தங்கள் விருப்பத்தை உரைத்தருள்க," என்று வேண்டினர்.

மறையவர் முதலியார் வற்புறுத்தலுக்கு இணங்கி, "முதலியார் அவர்களே, நீங்கள் வற் புறுத்துவதால் தெரிவிக்கிறேன். காஞ்சிபுரத்தில் வாழ ஒரு வீடு வேண்டும்; குடும்பம் நடத்து வதற்கு ஏற்ற நிலங்கள் வேண்டும்; ஒரு தோட்டம் வேண்டும்; பால் அருந்தப் பசு மாடு ஒன்று வேண்டும். பிராமணனுக்கு வேறு என்ன



வேண்டும்? இவற்றை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன்," என்ருர்.

## தளவாயின் தாராளம்

வேதியர் கூற்றைக் கேட்ட சபையோர் அவரது மன நிறைவைக் குறித்து மகிழ்ந்தனர். அரியநாத முதலியார் அவர் பேச்சைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்; அந்தணர் கேட்டவற்றை அவர் கேட்டதினும் பன் மடங்கு மிகுதியாகவே உதவி மகிழ்ந்தார். அவையோர் தளவாயின் தாராளத்தைக் கண்டு பாராட்டினர்.

## வேதியர் வாழ்த்துரை

அந்தணர் அகமகிழ்ந்து, "வள்ளலே, சொன்ன சொல் தவருத செம்மலே, தங்களால் மெய்ப்பேடு மெய்யாகவே பெருமை பெற்றது; வேளாளர் மரபு விழுப்பம் உற்றது; எனது வாழ்க்கை நலம் பெற்றது; என் பின்வரும் என் மரபினர் தங்களை எந்நாளும் வாழ்த்துவர். நான் காசியிலிருந்து இங்கு வரும்போது, விஜயநகரத்தில் தங்களைப் பற்றிக் கேள்வியுற்றேன்; பின்னர்த் தொண்டை நாட்டில் தங்கள் வீரச் செயல்களையும் ஈகைத் தன்மையையும் பற்றிக் கேள்விப்பட்டேன்; நான் கேள்விப்பட்ட அனைத்தும் உண்மை என்பதை இன்று நேரிற் கண்டேன். வேளாண்குடிச் செல் வரே, தங்கள் மரபு என்றும் நின்று, தங்கள் புகழை உலகிற்கு உணர்த்தி நிற்கவேண்டும். 'தளவாய் மரபு' தமிழகத்தில் வாழவேண்டும். தங்களைத் தமிழ்நாட்டுக் குடிகள் உள்ளம் குளிரப்

பாராட்டுகின்றனர். நான் அதுகேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். நீங்கள் பல ஆண்டுகள் இருந்து குடிகட்குச் சிறந்த தொண்டு செய்து அழியாப் புகழ் பெறுவீர்களாக! உத்தமரே, நான் விடை பெறுகிறேன்,'' என்று சொல்லி, அரச அவையை விட்டு அகன்றுர்.

# 10. பேரரசின் தளவாய்

## முதலியார் 'முடி மன்னர்'

விஜயநகரப் பேரரசில் கணக்கராக நுழைந்த அரியநாதர் உழைப்பு, ஊக்கம், நல்ல ஒழுக்கம் முதலிய நற்பண்புகளால் படிப்படியாக உயர்ந்து, இறுதியில் தென்னுட்டுத் திலகமாக விளங்கினர்! பேரரசின் அமைச்சராக இருந்தார்; தளவாயாக இருந்தார்; பின்னர்த் தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சியில் அமைச்சராகவும் தளவாயாகவும் இருந்தார். இனி முடிமன்னர் ஆதல் ஒன்றே அவர் பெறத்தக்கது அன்றோ? "நீர் எங்கட்குப் பிறகு முடி மன்னராக மகுடம் சூடி நமது பேரரசைக் காப்பீராக!'' என்று இராம ராயர் அரியநாதரை வாழ்த்தினர். எனின், அவர் பெற்ற பெருமையையும் இராயர் அவர்மீது வைத்திருந்த அன்பையும் நம்பிக்கையையும் என்னென்பது! இராயர் இங்ஙனம் கூறிய சந்தர்ப்பம் யாது என்பதைக் காண்போம்:

## இராம ராயர்

பெரும் புகழ் படைத்த கிருஷ்ணதேவ ராயர் கி. பி. 1530-இல் காலமானுர். உடனே அவர் உடன் பிறந்தார் ஆகிய அச்சுத ராயர் பேரரசர் ஆனுர்* என்பவை முன்னர்க் கண்டோம். அச்சுதர்க்குப்

---

* அச்சுதராயர் ஆட்சிக்காலம் கி. பி. 1535-1542.
சதாசிவ ராயர் ,, கி. பி. 1542-1565.

பிறகு சதாசிவ ராயர் பட்டம் பெற்றார். சதாசிவ ராயர் பெயரளவில் பேரரசராக இருந்தார். ஆட்சி முழுவதையும் கவனித்து வந்தவர் இராம ராயர் என்பவர். அவர் கிருஷ்ணதேவ ராயர்க்கு மருகர். அவருக்குத் திருமலை ராயர், வேங்கடாத்திரி ராயர் என்று உடன்பிறந்தார் இருவர் இருந்தனர். இராம ராயர் அவ்வுடன்பிறந்தாரை நம்பாமல் தாமே அரசியலைக் கவனித்துவந்தார்.

இராம ராயர் மிக்க சமர்த்தர்; ஆனால் இறுமாப்புக் கொண்டவர்; அரசியல் தந்திரத்தில் தகுதி அற்றவர். ஆயினும் கிருஷ்ணதேவ ராயரைப் போலத் தம் பெயரை நான்கு திசைகளிலும் பரப்ப அவாக் கொண்டவர்; அதனால், தம் ஜன்மப் பகைவரான தக்ஷிணத்துச் சுல்தான்களுடைய உட்பகைப் போர்களில் தலையிட்டார்; பிஜப்பூர்ச் சுல்தானுக்குப் பரிந்து சென்று அஹமத் நகரச் சுல்தானை நிஜாம் ஷாவின் கடும்பகையைத் தேடிக்கொண்டார்.

## சுல்தான் ஒற்றுமை

பல ஆண்டுகள் தம்முட் பகைகொண்டு விளங்கிய சுல்தான்கள் நல்லறிவு பெற்றனர்; தம் உட்பகையை மறந்தனர்; ஐவரும் ஒன்று சேர்ந்து விஜயநகரப் பேரரசை ஒழிக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்; அம்முடிபுக்கு ஏற்ப ஒவ்வொரு சுல்தானும் பெரும் படை திரட்டலாயினர்.

## அரியநாதர்க்கு அழைப்பு

'தான்' என்னும் இறுமாப்பில் முழுகிக்கிடந்த இராம ராயர் சுல்தான்களின் பகைமையை வலிதிற்



பெற்ற தம் தவற்றை உணர்ந்தார்; உணர்ந்த பின்னரேனும் தக்கவாறு தலைநகரத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்தனரா? முன் எச்சரிக்கையாகப் புதிய படைவீரரைச் சேர்த்தனரா? இல்லை! இல்லை!! தம்மிடம் இருந்த படைகளையே திரட்டினார்; அப்படைகளைக் கொண்டே பகைவரை முறியடித்து விடலாம் என்று எளிதாக எண்ணி விட்டார். அவர் தம் உடன் பிறந்தாரை நம்புவதில்லை என்று முன் சொன்னோம் அல்லவா? போர் மூளும் என்பதை உணர்ந்ததும் அவர், "பேரரசு ஆபத்திற்குள்ளாகும் போல இருக்கிறது; உடனே படையுடன் வருக!" என்று அரியநாதர்க்கு ஆணை அனுப்பினார்.

## அரியநாதர் நிலைமை

இராம ராயரது ஆணை மதுரைக்கு வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்னரே விசுவநாத நாயக்கர் மண்ணுலக வாழ்வை விட்டார்.* அவர் மைந்தர் குமார கிருஷ்ணப்ப நாயக்கர் முடி மன்னரானார். தம் உயிர் நண்பரைப் பிரிந்த வருத்தத்தினால் முதலியார் பெரிதும் மனக்கவலை கொண்டார். அதே சமயம் இளைஞராகிய குமார கிருஷ்ணப்ப நாயக்கர்க்குத் துணைவராக இருந்து அரசியல் வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பு அவர்க்கு மிகுதியாயிற்று. இந்தச் சங்கடமான சந்தர்ப்பத்தில்தான் இராம ராயர் கடிதம் அரியநாதர்க்குக் கிடைத்தது. அவர் என்ன செய்வார், பாவம்! இளைஞரான மதுரை அரசர்க்கு நன்மதி

---

* விசுவநாதர் காலமான ஆண்டு கி. பி. 1564.
இவர் ஆட்சிக்காலம் 1564-1572.

கூறி விடைபெற்று, ஒரு தக்க படையுடன் விஜய நகரம் சென்ருர்.

## விஜயநகரத்தில் மந்திராலோசனை

தம் நம்பிக்கைக்கு உரிய அரியநாதரைக் கண்டதும் இராம இராயர் அவரை மார்புறத் தழுவி மகிழ்ந்தார்; தம் உடன் பிறந்தாரையும் பெரிய தானைத் தலைவரையும் வரவழைத்து யோசனை செய்தார்; "இந்தச் சுல்தான்கள் நமக்கு எம்மாத்திரம்! இவர்களைப் பஞ்சுபோலப் பறக்க அடிப்போம்," என்று உறுமினர். அரியநாதர், "பெருமானே, தாங்கள் கூறுதல் இயலும் காரியமே. ஆயினும், நாம் தக்கவாறு முன் எச்சரிக்கையாக இருந்து, படைகளை அணிவகுத்து ஒழுங்காகப் போராட வேண்டும். நம் பகைவரோ ஒருவர் - இருவர் அல்லர்; ஐவர் என்பதை மறத்தல் ஆகாது. ஆதலின் பகைவர் படைகளை மூன்ருகப் பிரிப்பின், தங்களுக்கு இடப்புறமும் வலப்புறமும், உடன்பிறந்தார் இருவரும் படைத் தலைவராக இருந்து போர்புரிதல் நல்லது. தாங்கள் நடுப் படையைத் தாக்கலாம். நான் தங்கட்கு உதவியாக இருப்பேன்," என்ருர். அவரது யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## தலைக்கோட்டைப் போர்*

இது விஜயநகரப் பேரரசை ஒழித்த போராகும்; முஸ்லிம்கட்கு வெற்றி அளித்த போராகும். முஸ்லிம்கள் முதலில் தங்கியிருந்த தலைக்கோட்டை

* இப்போர் கி. பி. 1565 ஜனவரி மீ 23-ஆந் தேதி நடைபெற்றது.



யின் பெயரே இப் போர்க்கு இடப்பட்டது. ஆனால் உண்மையாக இப்போர் கிருஷ்ணை யாற்றுக்குத் தெற்கே உள்ள போகபுரம் என்னும் ஊரின் அருகில் தான் நடைபெற்றது.

இராம ராயர் ஐராவதம் போன்ற பெரிய யானை மீது அமர்ந்து இருதிறத்துப் படைகளும் காணுமாறு இருந்தார். அவர் வயது முதிர்ந்த கிழவர்; ஆயினும், முப்பது வயதுடைய காளையைப் போலக் கம்பீரமாகக் காட்சி அளித்தார். அவருக்கு இருபுறங்களிலும் அவர் தம்பியர் படைத்தலைமை தாங்கினர். இராம ராயர் தம் படை வீரர்களைப் பரிசுகள் முதலியன அளித்து ஊக்குவித்தார்.

## பகைவர் அணிவகுப்பு

திருமலை ராயர்க்கு எதிராகப் பிஜப்பூர்ப் படைகள் அணிவகுக்கப்பட்டன. பிஜப்பூர்ச் சுல்தான் அலீ ஆடில் ஷா அவற்றுக்குத் தலைமை தாங்கினர். வேங்கடாத்திரி ராயர்க்கு முன்பாகப் பிதார், பீரார், கோல்கொண்டாச் சுல்தான்கள் தம் படைகளுடன் போருக்குத் தயாராக நின்றிருந்தனர். இராம ராயருக்குக் கொடிய பகைவரான அஹ்மத் நகரச் சுல்தான் நிஜாம் ஷா தம் படைகளுடன் இராம ராயர்க்கு எதிராக நின்ருர். சுல்தான்கள் தமது நீண்ட படை முகத்தின் நடுப்பகுதியைப் பீரங்கிப் படைகளால் காத்து நின்றனர். நிஜாம் ஷா தமது போர்முகத்தின் நடுவில் மூன்று வரிசையாக அறுநூறு பீரங்கிகளை அமைத்து, அவை எதிரிகட்குப் புலப்படா வண்ணம் அவற்றின் முன்புறம் இரண்டாயிரம் வீரர்களை நிறுத்தியிருந்தார்.

## போர் நிகழ்ச்சிகள்

விஜயநகர வீரர்கள் வெடிகுண்டு பாணங்களைச் சோனைமாரிபோலப் பொழிந்தனர்; பகைவரை நெருங்கிக் கைகலந்து தாக்கினர்; பகைவர் பின்னிடும்படி உற்சாகத்துடன் போர்புரிந்தனர்; போரின் நடுவில் பகைவரது முன்னணிப் படையைச் சிதற அடித்து முன்சென்றனர். அப்பொழுது மறைத்து வைக்கப் பட்டிருந்த பீரங்கிகள் குபீர் குபீர் என்று நெருப்பைக் கக்கின. இப்புதிய தாக்குதலை விஜயநகர வீரர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆதலின் அவர்கள் நெருப்பின் வேகத்தைத் தாங்கமாட்டாது பின்வாங்கினர்.

## போர்க்களத்தில் உரையாடல்

உடனே இராமராயர் யானையை விட்டுப் பல்லக்கில் ஏறினார்; போர்க்களம் முழுவதும் திரிந்தார்; தம் படை வீரர்கட்குப் பொன்னும் பொருளும் வழங்கி ஊக்குவித்தார். பேரரசரைக் கண்ட வீரர் ஊக்கம் கொண்டு முன்னேறினர். அப்பொழுது அரியநாதர் முதலியோர், “இராயர் அவர்கள் பல்லக்கில் இருப்பது தகாது. ஒரு சமயம் தோல்வி நேரின், விரைவில் தப்பி ஓடுவதற்குக் கரி அல்லது பரியே ஏற்றது” என்று தெரிவித்தனர்.

**இராம ராயர் :** இந்த அஹ்மத் நகரப் பூனைகளது போர் வலிமையை யான் அறிவேன். இந்த நிஜாம்ஷா எத்தனை முறை என்னிடம் தோற்றோடினவன்! இன்னும் ஒரு நாழிகையில் இவன் சூறைக் காற்றில் அகப்பட்ட பூளைப்பூப் போலப் பறக்கப் போகின்றான், பாருங்கள்.



**அரியநாதர் :** பெருமானே, தங்கள் கூற்றுப்படி நடக்கலாம். எதற்கும் நாம் முன்னெச்சரிக்கையாக இருத்தல் நல்லது. மேலும் எப்பொழுதும் நமக்கே வெற்றி கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டு நம் கடமைகளிலிருந்து சிறிதும் தவறலாகாது அன்றோ?

**இராம ராயர் :** அரியநாதரே, இது வீண் பேச்சு. விஜயநகரத்துக்கே வெற்றி; இதில் ஐயமே இல்லை. ஒரு வேளை தோல்வி நேரின், நான் இப்போர்க்களத்தை விட்டுப் போகேன்; இங்குத்தான் இறப்பேன். இன்று நான் அல்லது இந்த நிஜாம்ஷா மடிவது திண்ணம். நான் மாள்வதாயின் இப்பொழுதே எல்லோர் முன்னிலையில் கூறிவிடுகிறேன், கேளுங்கள்: சதாசிவ ராயர் பயனற்றவர். என் தம்பிமார் எனக்கே துரோகம் செய்பவர்கள்; நான் இறந்த பிறகு இப்பேரரசை நாசமாக்கிவிடுவர். ஆதலின் எனக்குப்பின் இப்பேரரசைக் காக்கத் தக்கவர் அரியநாதர் ஒருவரே. என் அம்மான் கிருஷ்ணதேவராயர் காலந்தொட்டு அரசியல் அறிவு நிரம்பப்பெற்ற உத்தமர் அவர் ஒருவரே. எனக்குப் பின் அவரே மஹா ராயராக மகுடாபிஷேகம் செய்துகொண்டு இப்பேரரசைக் காப்பாராக!

**அரியநாதர் :** தங்கட்கு ஒன்றும் நேரிடாது. மாப்பிள்ளைராயர் கவலைப்பட வேண்டுவதில்லை. எதிர் பாராவிதம் ஏதேனும் நேரின், தங்கள் ஆணைப்படி என் உயிரைத் தரக் காத்திருக்கிறேன்.

**இராம ராயர் :** அரியநாதரே, நீர் நீடு வாழ்க!

## கடும்போர்

விஜயநகரப் படைகள் பீரங்கிப் படைகளையும் துணிவுடன் தாக்கின; நெருப்பு மழையை எதிர்த்து முன்னேறின. அப்பொழுது நிஜாம் ஷா, செப்புக் காசுகளைப் பீரங்கிகளிற் போட்டுச் சுட ஏற்பாடு செய்தார். இந்த யோசனையினுல், உருகிய செம்பு வந்து மழைபோலப் பொழிந்தது. பாவம்! விஜய நகரப் படைகள் நாற்புறமும் சிதறி ஓடின. கெட்ட காலத்துக்கு ஏற்ற புத்தி இராம ராயரைப் பிடித்துக்கொண்டது. அவர் அரியநாதர் முதலியோர் யோசனையும் கேளாமல் பல்லக்கிலேயே இருந்தார். அவரை யானைமேற் காணுத படைவீரர் அவர் கொல்லப்பட்டார் என்று எண்ணி அச்சம் கொண்டனர். இந்த இரண்டு காரணங்களாலும் அவர்கள் சிதறிவிட்டார்கள்.

இவ்வாறு சிதறிய வீரர்களை அழிக்கும்படி நிஜாம் ஷா ஐயாயிரம் பரிவீரரை ஏவினர். அவர்கள் பாய்ந்து சென்று படுகொலை புரிந்தனர். இவற்றைக் கண்ணுற்ற இராம ராயர் அச்சம் கொண்டார். அப்பொழுதும் அவர் யானைமீது ஏறவில்லை; ஏனைய நான்கு சுல்தான்களையும் தம் தம்பிமார் தோற்கடித்ததையும் அவர் அறியார். அவர் மனம் குழப்பமுற்றது.

## இராம ராயர் தலை

தூரத்தில் இருந்தவாறே இராம ராயரையே கவனித்திருந்த நிஜாம் ஷா, தம் படை வீரருடன் அவரை நோக்கிச் சென்றூர். நிஜாம் ஷாவின் போர் யானையும் படைவீரரும் பல்லக்கை நெருங்கவே, பல்லக்கைச் சுமந்திருந்தவர் அதனை விட்டு ஓடி விட்டனர். உடனே இராம ராயர் பல்லக்கை விட்டு இறங்கினூர். அப்பொழுது பக்கத்தில் இருந்த வீரன், தான் ஏறி இருந்த குதிரையை அவருக்கு உதவினுன். இராம ராயர் அக்குதிரை மீது ஏறினூர். இதற்குள் நிஜாம் ஷா இராயரை நெருங்கித் தம் வாளை வீசினூர். அந்தோ! இராம ராயர் தலை நிலத்தில் வீழ்ந்தது.



## படுதோல்வி

உடனே பகைவர் இராம ராயர் தலையை ஒரு வேல் நுனியில் தூக்கி உயர்த்தி வெற்றி முழக்கம் செய்தனர். இராயர் தலையைக் கண்ட முஸ்லிம் வீரர்கள் மனக்களிப்புக் கொண்டனர்; விஜய நகர வீரர் மனக்கலக்கங் கொண்டு சிதறினர். போர்க்களத்தில் ஒரே குழப்பம் உண்டாகிவிட்டது. இக் குழப்பத்தினுல் இராம ராயர் தம்பிமார் பெற்ற வெற்றிகளும் பயனற்றுப் போயின. அவர்களுடைய படைகளும் அச்சங்கொண்டு ஓடத் தொடங்கின. அப்பொழுது உண்டான குழப்பத்தில் வேங்கடாத்திரி ராயர் கொல்லப்பட்டார். இவ்வளவு அழிவிற்கும் காரணம் இராம ராயரது பிடிவாதமே ஆகும். முடிவென்ன? விஜயநகரப் படைகள் படுதோல்வியுற்று ஓடிவிட்டன.

## திருமலை ராயர்

உயிர் பிழைத்த திருமலை ராயர் அரியநாதர் சொற்படி விஜயநகரத்தைக் காக்க முனையவில்லை. அவர் சதாசிவ ராயரையும் அரச குடும்பத்தாரையும் பெனுகொண்டாக் கோட்டைக்கு அனுப்பினூர். அரசர்க்குரிய செல்வம் அனைத்தையும் நூற்றைம்

பது யானைகள்மீது ஏற்றிக்கொண்டு தாமும் அக் கோட்டையை அடைந்தார். அவர் எடுத்துக் கொண்டு சென்ற செல்வத்தின் மதிப்புப் பத்துக் கோடி பவுன் இருக்கலாம்.

### அரியநாதர் வீண் முயற்சி

அரியநாதர்க்குத் திருமலை ராயர் செயல் பிடிக்கவில்லை. அவர் இராம ராயர் கட்டளைப்படி தாம் 'மஹா ராய'ராக முடி சூடி நகரத்தைக் காக்க விரும்பினார். அதற்குக் காரணம் பேராசை அன்று; இராம ராயர் ஆணைப்படி நடக்கவேண்டும் என்ற அரச பக்தி காரணமாகும். அவர் நகரப் பெருமக்களையும் தம் உற்றார் உறவினரையும் யோசனை கேட்டார். "இராயர் குடும்பமே அஞ்சி ஓடிவிட்ட பின், இங்கு நமக்கென்ன வேலை? நாம் ஏன் மக்களை வீணே பலியிடவேண்டும்? இந்த முயற்சி வேண்டா," என்று அனைவரும் அறிவித்தனர். அந்நிலையில் முதலியார் என்ன செய்யக் கூடும்! 'முடியும் அளவு பேரரசேனும் சிதைவுறாமல் இருக்க முயற்சி செய்வோம்' என்று எண்ணி, அவர் பெனுகொண்டாவுக்குச் சென்றார்.

### பேரரசு நிலைக்க யோசனை

'பேரரசை மூன்று பகுதிகளாகப் பிரிக்கவேண்டும்; ஒன்று பெனுகொண்டாவைத் தலை நகராகக் கொண்ட வட பகுதி; சீரங்கப்பட்டணத்தைத் தலை நகராகக் கொண்ட மேற்குமலைத் தொடர்க்கு அப்பாற்பட்ட நிலப்பகுதி ஒன்று; சந்திர கிரியைத் தலைநகராகக் கொண்ட தென்னாட்டுப் பகுதி ஒன்று. வட பகுதியை ஆள்பவரே மஹா ராயர். அவருக்கு அடங்கியவரே மற்ற இரு பகுதிகட்கும் அரசராக இருந்தவர். பேரரசர் முஸ்லிம் பகைவரைத் தடைசெய்து வட பகுதியைக் காத்துவர வேண்டும்'—என்று முதலியார் யோசனை கூறினார். அந்த யோசனைப்படி யாவும் செய்யப்பட்டன. இப் புதிய பேரரசு முழுவதற்கும் தளவாய் யாவர்? நமது அரியநாதரே ஆவர்.



### விஜயநகர அழிவு

எதிர்பாராத வெற்றியினால் வெறிகொண்ட தக்ஷிணப் படைவீரர் போகபூமியாகிய விஜய நகரத்திற்குள் புகுந்தனர்; அங்கு ஐந்துமாத காலம் தங்கி, அந்நகரத்தைக் கொள்ளை அடித்தனர்; அழகிய அரண்மனை முதலிய பெரிய மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் இடித்து நாசமாக்கினர்; பல ஆண்டுகளாகக் கொண்டிருந்த பகைமையை நகரத்தை நாசமாக்கும் திருப்பணியால் தீர்த்துக் கொண்டனர். அவர் செய்துள்ள அழிவு இத்தகையது என்பதை அறிய வேண்டுமாயின், நீங்கள் விஜயநகரம் சென்றுதான் பார்க்க வேண்டும்.

### பேரரசின் தளவாய்

புதிய பேரரசுக்குத் தளவாயாக நியமனம் பெற்ற முதலியார், விஜயநகர அழிவைக் கேட்டு வருந்தினார். அவர் ஒரு வருடம் பெனுகொண்டாவில் இருந்து, புதிய பெருநாடு அழியாதிருக்கச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்; திருமலை ராயர்க்குப் பண்பட்ட படைகளைத் தயாரித்தார்.

### தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்

முதலியார் தலைக்கோட்டைப் போருக்குச் சென்ற பிறகு மதுரைச் சீமையில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. **தும்பிச்சி நாயக்கன்** என்பவன் ஒரு பாளையப்பட்டுக்காரன். அவன் முதலியார் இல்லாததால் தைரியம் அடைந்தான்; மதுரை அரசர்மீது போர் தொடுத்தான். குமார கிருஷ்ணப்ப நாயக்கர் அவனைக் கொன்றார்; அவனது பாளையத்தைத் தமதாக்கிக்கொண்டார்.

இலங்கையில் கண்டியை ஆண்ட அரசன் தும்பிச்சி நாயக்கன் நண்பன். அவன் தன் நண்பன் கதியைக் கேட்டுச் சீறி எழுந்தான். உடனே கிருஷ்ணப்பர் படையெடுத்துச் சென்று அவ்வரசனைக் கொன்றார்; அவனது நாட்டைத் தம் பிரதிநிதி ஒருவரிடம் ஒப்புவித்து மீண்டார்.*

### தளவாயின் சுற்றுப் பிரயாணம்

மேற்சொன்ன நிகழ்ச்சிகட்குப் பிறகு, புதிய பெருநாட்டைச் சுற்றிப் பார்வையிட்டு வந்த பேரரசின் தளவாய் - அரியநாத முதலியார் மதுரையை அடைந்தார்; மேற்சொன்ன நிகழ்ச்சிகளைக் கேட்டு மதுரை மன்னரைப் பாராட்டி வாழ்த்துக் கூறினார்.

* இப்போர் நிகழ்ச்சிகள் நடந்த காலம், கி. பி. 1566-1569.

## 11. இறுதி நாட்கள்

### சோழவந்தான்

மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் இடைப்பட்ட இந்த இடம் 'சோழாந்தகன்'* என்ற பெயர் பெற்றது. அது மருவிச் 'சோழவந்தான்' என்று ஆயிற்று. அவ்விடம் பாண்டிய நாட்டுப் படை இருந்த இடங்களில் ஒன்றாகும். அந்த இடத்தை முதலியார் தம் வாழிடமாகக் கொண்டார். மதுரைச் சீமையில் சோழவந்தானே வளமிக்க இடம். அது வையையாற்றின் கரையில் அமைந்திருப்பது; நீர்வளம் குறைவில்லாதது. இயற்கையில் பூசாரம் அங்கு மிகுதி. ஆற்றோரங்களில் கண்ணுக்கு இனிய தென்னந் தோப்புகள் உண்டு. செந்நெல் விளை நிலங்கள் கண்ணுக்குப் பசுமையை நல்கும். இங்ஙனம் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க நல்லிடத்தை முதலியார் தேர்ந்தெடுத்தது அவரது அறிவு நுட்பத்தைக் காட்டுகிறது அல்லவா?

### முதலியார் கோட்டை

'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்' ஆதலால், முதலியார் தம் தொண்டை மண்டல வேளாளரைப் பாண்டி நாட்டில் பசுமை நிலவிய இடங்களில் எல்லாம் குடியேற்றினார்; சோழவந்தானுக்கு முந்நூறு வீட்டாரைக் கொணர்ந்தார்; அவர்

* சோழனுக்கு யமன்-இது பாண்டியன் விருதுப்பெயராகும்.

கட்கு விடுதிகள் கட்டித் தந்தார்; அவர்களுக்கு உதவியாகப் பலவகைத் தொழிலாளரைக் குடியேற்றினார்; ஊரைச் சுற்றிலும் கோட்டை ஒன்றை எழுப்பினார். அது 'முதலியார் - கோட்டை' எனப் பட்டது.

## வேளாளர் குடியேற்றம்

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் இருக்கின்ற தொண்டை மண்டல முதலிமார்கள் அங்கு எவ்வாறு சென்றார்கள்? அவர்களுடைய முன்னோர் - அரியநாத முதலியார் காலத்து முன்னோர் - அரியநாதர் தூண்டுதலால் பாண்டிய நாட்டிற் குடியேறியவர் ஆவர். அவர்கள் தமிழகம் முழுவதும் பரவிக் குடியேறினமைக்குத் தளவாய் அவர்களே காரணம். முதலியார் தாமிரபரணி ஆற்றங்கரையில் தம் பெயரால் **அரியநாயகபுரம்** என்ற கிராமத்தை அமைத்தார்.

## அக்கிரகாரங்கள்

வேதம் - உபநிடதம் - புராண இதிகாசங்கள் இவற்றில் முதலியாருக்கு மிகுந்த மதிப்புண்டு. அவற்றைப் படித்து ஒழுக்கத்தில் சிறந்து இருந்த நான்மறையாளரிடம் அவருக்குப் பற்று மிகுதி. அவர் அவர்களுக்குப் பல ஊர்களில் அக்கிரகாரங்களை அமைத்துக் கொடுத்தார்; அவர்கட்கு வேண்டிய நிலங்களைத் தானம் செய்தார்.

## கோவில் திருப்பணிகள்

முதலியார் கோவில் திருப்பணி செய்வதில் ஊக்கம் உடையவர். அவர் திருப்பணி பெருத



பெருங் கோவில்கள் தென்னாட்டில் சில வென்றே சொல்லவேண்டும். பாளையங்கோட்டையில் அவர் அமைத்த கோவில்கள் இன்றும் அவர் பெயரைச் சிறப்பிக்கின்றன. திருநெல்வேலி - நெல்லையப்பர் ஆலயம் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கோவில். அவர் அங்குக் கோபுரங்களையும் மண்டபங்களையும் எழுப்பினார். அங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் அவர் எழுப்பியதாகும்.

## மதுரையில் திருப்பணி

மீனாக்ஷி - சுந்தரேசர் கோவிலில் முதலியார் செய்த திருப்பணிகள் மிகப்பல. அங்குள்ள **ஆயிரக்கால் மண்டபம்** அவரால் எழுப்பப்பட்டது; அவர் அறுபத்து மூவர் மண்டபத்தை எழுப்பினார். மீனாக்ஷி அம்மைக்கு அளவற்ற அருங்கலன்கள் செய்தளித்தார்; பள்ளியறை, அறச்சாலை அமைத்தார்; சொக்கப் பெருமானுக்கு வெள்ளி அரியணை ஒன்று செய்துவைத்தார்; வன்னியடி நந்தவனமும் அமைத்தார்; சிவராத்திரி விழாவிற்குப் பன்னீராயிரம் பொன் அளித்தார்.

## சிற்பக்கலை வளர்ச்சி

நமது தமிழ் நாடு பண்டு தொட்டே சிற்ப - ஓவியக் கலைகட்குப் பெயர் பெற்ற இடமாகும். பல்லவர் காலத்தில்* இக்கலைகள் நன்றாக வளர்ச்சி பெற்றன. பிறகு இராஜராஜன் முதலிய சோழப் பேரரசர்களால் வளம்பெற்றன. அவர்கட்குப் பிறகு தமிழகம், முன் சொன்னவாறு பலவகை

* கி. பி. 600–900

அரசியல் குழப்பங்கட்கு நிலைக்களம் ஆகியது. அதனால் கலை வளர்ச்சிக்கு நாட்டில் இடம் இல்லாதிருந்தது. நாயக்கர் ஆட்சி ஏற்பட்ட பிறகே - அரியநாதர் சமயத்துறையில் ஊக்கம் காட்டத் தொடங்கிய பிறகே - தமிழகத்தில் சிற்ப, ஓவியக் கலைகள் உருப்பெறலாயின. கல்லுளித் தச்சர்கள், கொத்தர்கள், கூலியாட்கள், சித்திரம் வரைவோர் முதலியோர் பிழைப்புப் பெற்றனர். மக்களுக்கு ஆன்ம வளர்ச்சியை உண்டாக்கும் திருக்கோவில்கள் அழகு பெற்றன. முதலியார் மேற்கொண்ட இத்திருப்பணிகளினால் நாகரிகக் கலைகள் வளர்ச்சி பெற்றன. அரியநாதரைப் பின்பற்றி நாயக்க மன்னர்களும் கோவில் திருப்பணிகள் பல செய்து அழியாப்புகழ் பெற்றனர்.

### வீரப்ப நாயக்கர்

முதலியார் இத்திருப்பணிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் குமார கிருஷ்ணப்ப நாயக்கர் காலமானார். அவர் மைந்தர், **வீரப்ப நாயக்கர்*** அரியணை ஏறினார். அப்பொழுது அவருக்கு உறுதுணையாக இருந்து அவர் சார்பில் நாட்டைப் பார்த்து வந்தவர் நமது தளவாயே ஆவர். வீரப்ப நாயக்கர் முதலியாரைத் தம் பாட்டனாராகக் கருதி, மிக்க மதிப்புடன் நடந்துவந்தார். 'அவன் அன்றி ஓரணுவும் அசையாது' என்பதுபோல, முதலியாரைக் கேளாது எந்த அரசியல் காரியமும் நடைபெற்றதில்லை என்னலாம்.

* கி. பி. 1572-1595.



### பாண அரசன் பணிவு

பாளையக்காரரில் ஒருவன் **மாவலி பாண ராயன்** என்பவன். அவன் சிறந்த போர்வீரன். அவன் அரசனாக விரும்பி மானாமதுரை,* காளையார் கோவில் முதலிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டான். அவன் முயற்சியை முளையிலே கிள்ளி எறியவேண்டும் என்பது முதலியார் கருத்து. அதனால் அவர் வீரப்ப நாயக்கருடன் ஒரு படை கொண்டு சென்றார்; பாண ராயனைச் சமாதானம் செய்து கொள்ளும்படி அறிவுறுத்தினார். அவன் இணங்கவில்லை; தன்னால் இயன்ற வரை போர் புரிந்து தோற்றான். வீரப்ப நாயக்கர் அவனது பாளையத்தைக் கைப்பற்றி அவனை விரட்டிவிடத் துணிந்தார். ஆனால் முதலியார் அவர் துணிவை மாற்றிப் பாண அரசனைப் பழைய படியே பாளையக்காரன் ஆக்கினார். பாணஅரசன் மனம் மாறியது. அவன் முதலியாரைப் பாராட்டி, அன்று முதல் நாயக்க மன்னர்க்கு அடங்கி அமைதியாக இருந்துவந்தான்.

### வீர கிருஷ்ணப்ப நாயக்கர்

வீரப்ப நாயக்கருக்குப் பின் வீர கிருஷ்ணப்ப நாயக்கர்† பட்டம் பெற்றார். அப்பொழுது அவருடைய தம்பியாரான **விசுவப்பர்** என்பவர் சற்றுப் பிணங்கினார். உடனே அரியநாதர் அவரை இளவரசராக முடி சூட்டி அரசியலில் ஈடு

* மானவீரன் மதுரை என்ற பெயர் இவ்வாறு மருவியது போலும்!

† இவரது ஆட்சிக்காலம் 1595-1601.

படுத்தினர். உடன்பிறந்தார் இருவரும் ஒற்றுமையுடன் ஆட்சியைக் கவனித்து வந்தனர். அவர்கள் காலத்திலும் மிக்க முதியவரான அரியநாத முதலியாரே அமைச்சராகவும் தளவாயாகவும் இருந்து வந்தார். வயது முதிர்ந்த அவர், நாயக்க மன்னர்களின் வற்புறுத்தலால் அப்பதவிகளில் இருந்து வந்தார்.

## அதிவீரராமர் நட்பு

முதலியார் காலத்தில் தென்காசியை **அதிவீர ராம பாண்டியர்** ஆண்டுவந்தனர். அந்தப் பாண்டியரே தமிழில் **நைடதம்** பாடிய பெரும் புலவர். அவர் தமையனார் வரதுங்க ராம பாண்டியர் என்பவர்; காசிகாண்டம் முதலிய நூல்களைப் பாடியவர். அத்தமையனார் மனைவியாரும் சிறந்த புலமை உடையவர் என்று வரலாறு கூறுகின்றது. நமது தமிழகப் பெரியார் ஆகிய அரியநாத முதலியார் தமிழ்ப்பெரியார் ஆகிய அதிவீரராம பாண்டியருடன் நட்புக்கொண்டு தமிழ்க் காவியச் சுவையை நுகர்ந்து வந்தார் என்று செவி வழிச் செய்தி செப்புகின்றது.

## முதலியார் மறைவு

பீஷ்மர் தம் தம்பியார் காலத்தில் அரசியல் குருவாக உடன் இருந்து உதவி செய்தார்; பின்னர் அவர்கள் மக்களாகிய திருதராஷ்டிரன், பாண்டு இவர்களுடன் இருந்து உதவிசெய்தார்; அதன் பின்னர்த் துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் தாத்தாவாக இருந்து அறவுபதேசம்



செய்தார். இங்ஙனம் சந்திர மரபைச் சேர்ந்த அரசர்க்குப் பீஷ்மர் அமைந்தாற்போல - மதுரை நாயக்கர் மரபிற்குத் தளவாய் முதலியார் அரசியல் குருவாக அமைந்தார். இத்தகைய பெரியார் கி.பி. 1600-இல் நாயக்க மன்னர் மனம் கலங்க - பாளையப் பட்டார் உள்ளம் பதற - தமிழ் மக்கள் தாயிழந்த பிள்ளைகள் போல் அலற - மண்ணுலகில் தம் புகழை நிறுத்தி, விண்ணக வாழ்வை மருவினர்.

## உள்ளம் கவர்ந்த உத்தமர்

அமைச்சர் அரியநாதர் குடிகளின் நன்மையையே பெரிதாகக் கருதியவர். அவர் கல்விகற்ற நான்மறையாளர்க்கு மானியங்கள் அளித்தார்; அழகிய அக்கிரகாரங்களை அமைத்தார்; இவற்றால் மறையவர் மனத்தைக் கவர்ந்தார். அப்பெரியவர் நீர்வளத்தைப் பெருக்கக் கால்வாய்களும் குளங்களும் ஏரிகளும் வெட்டுவித்து வேளாளர்க்குப் பெருநன்மை செய்து அவர்கள் அகக்கோவிலைக் கொள்ளை கொண்டார்; மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், கோட்டை-கொத்தளங்கள், கோபுரங்கள், மண்டபங்கள் முதலியவற்றை அமைக்கப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்க்கு வேலை தந்து, அவ்வுழைப்பாளிகளின் உள்ளத்தில் கோவில் கொண்டார். நாயக்க அரசரைத் தமிழகத்தில் நிலைபெறச் செய்து, கலகங்களை அடக்கி, நன்முறையில் அரசாட்சியை அமைத்து நாயக்க மன்னர் உள்ளங்களைக் கவர்ந்தார்; பாளையப்பட்டுகளை வகுத்துப் பெருமக்களும் சிற்றரசரும் தம்மை வழிவழியாகப் போற்றுமாறு செய்தார். இங்ஙனம் முதலியார் அரசர் முதல்

ஆண்டிவரை அனைவர் உள்ளத்தையும் கவர்ந்த உத்தமராக விளங்கினுர்.


## பரந்த சமய நோக்கம்

முதலியார் ஏகம்பனைக் குலதெய்வமாகப் பெற்றவர் ; சிறந்த சிவபக்தர் ; ஆயினும் வைணவம் முதலிய பிற சமயங்கள்மீது மதிப்புக் குறைந்தவர் அல்லர். அவர் மதுரை அமைச்சராக இருந்தபொழுது கிறித்தவப் பாதிரிமார் தென் பாண்டிக் கரையோர நகரங்களில் தங்கள் சமய போதனை செய்து வந்தனர். அவர்கள் அதனை மதுரையிலும் செய்யவிரும்பி அரசரை அநுமதி கேட்டனர். அரசர் அமைச்சரைக் கேட்டார். அமைச்சரான முதலியார் பரந்த சமய நோக்கம் கொண்டவர் ஆதலின், உடனே அநுமதி தருமாறு அரசர்க்கு யோசனை கூறினுர். 'மக்களுக்குச் சமயத்தில் கட்டுப்பாடு இருத்தல் ஆகாது ; அவர் தத்தமக்கு விருப்பமான சமயத்தைப் பின்பற்றி வாழ உரிமை இருத்தல் வேண்டும்,' என்பதே அப்பெரியாரது பரந்த சமய நோக்கமாகும்.

## பொன்ருப் புகழ்

அரியநாதர் குடிசையிற் பிறந்தவர் ; ஆனுல் தம் வாள் வலியாலும் அறிவாற்றலாலும் ஒழுக்கத்தின் விழுப்பத்தாலும் கணக்கர் - அரண்மனைக் கணக்கர் - அரண்மனைப் பெரிய கணக்கர் - அரசாங்கப் பெரிய கணக்கர் - தளவாய் - அமைச்சர் என்ற பதவிகளைப் படிப்படியாக விஜயநகரத்திற் பெற்ருர்; பின்னர் அப்பேரரசு முழுவதற்குமே தளவாய் என்ற பதவியும் பெற்ருர் ; மதுரை நாயக்க





மீனுட்சி—சுந்தரேசர் கோவில், மதுரை

மன்னர் நால்வர்க்கு அமைச்சராகவும் தளவாயாக வும் இருந்து அரும்பணி செய்தார்; குடிகட்கு நலன்களைச் செய்தார்; சமயத் துறையில் தொண்டு செய்தார்; அங்ஙனம் பல துறைகளிலும் பங்கெடுத்துக் கொண்டதால் அப்பெருந் தமிழர் விஜய நகர வரலாற்றிலும், மதுரை நாயக்க மன்னர் வரலாற்றிலும் அழியாத இடத்தைப் பெற்று விட்டார்; நாயக்க மன்னர் காலக் கட்டடக் கலை வரலாற்றிலும் தக்க இடம் பெற்றார். இஃதன்றோ பொன்றாப் புகழ்!

# 12. மதுரை-ஆயிரக்கால் மண்டபம்

## கோவில் மண்டபம்

தமிழ்நாட்டை ஆட்சி செய்த அரசப் பெரு மக்களால் கட்டப்பட்ட பெருங் கோவில்கள் எல்லா வற்றிலும் பல மண்டபங்கள் அமைந்துள்ளன. அம்மண்டபங்களில் திருவிழாக் காலங்களில் மக்கட்கு அறிவுதரும் புராணக் கதைகள் படிக்கப் பட்டன; அங்கு இசையும் நடனமும் வளர்க்கப் பட்டன; அத்தகைய காலங்களில் ஆன்ம அமை தியைத் தரும் இனிய பாடல்கள் பாடப்பட்டன; விறல்பட நடனமும் ஆடப்பட்டது. இராஜராஜன் போன்ற சிறந்த பேரரசர்களின் வரலாறுகள் நாடகங்களாக எழுதி நடிக்கப்பட்டன. திருவிழாக் காலத்தில் மட்டுமின்றி, மற்ற எல்லா நாட்களிலும் அங்கு எளிய மாணவர்க்கு உணவும் அறிவும் கொடுக்கப்பட்டன. இவையேயன்றி, அரசர்கள் விசேட காலங்களில் அறிஞருடன் கூடிப் பேசுவ தற்கும் மண்டபங்கள் பயன்பட்டன. இங்ஙனம் அரசர்கள் பயன்படுத்திய பெரிய (ஆயிரக்கால்) மண்டபங்களே இன்று தில்லை முதலிய இடங்களில் 'ராஜ சபை' என்னும் பெயருடன் விளங்கு கின்றன.

## ஆயிரக்கால் மண்டபம்

மதுரையை ஆண்ட மன்னர்களுக்குப் பயன் பட்ட மண்டபம் ஒன்று மதுரை-மீனாக்ஷியம்மன் கோவிலில் இருக்கிறது. இதனைக் கட்டிய பெருமை

நம் தளவாய் அரியநாத முதலியார்க்கே உரியது. இம்மண்டபத்தில் ஆயிரம் கால்கள் (தூண்கள்) இருக்கின்ற காரணம்பற்றி இம்மண்டபம் 'ஆயிரக் கால் மண்டபம்' என்னும் பெயர் பெற்றது. இம் மண்டபம் கீழ்வாசலுக்கு அண்மையில் இருக்கிறது.

**மண்டப அமைப்பு**

இம்மண்டபம் இரண்டு யானைகளால் இழுக்கப் படும் ஒரு தேர் போன்ற அமைப்பில் வரிசை வரிசையாகவும், எங்கிருந்து பார்ப்பினும் ஒரே வரிசையாவும் உள்ள கால்களுடன் காட்சியளிக் கின்றது. ஒருவன் இம்மண்டபத்தில் எந்த இடத் தில் நின்றாலும், மண்டபத்தின் நடுவில் அமைந் திருக்கும் கூத்தப்பிரான் திருவுருவத்தினைக் கண்டு களிக்க முடியும்.

**தளவாய் உருவச்சிலை**

ஆயிரக்கால் மண்டபத்திற்குள் நுழையும் வாச லில் ஏறக்குறைய ஆறு சிலைகள் காட்சி தருகின்றன. அவை ஒவ்வொன்றும் உயிருடன் இருப்பவை போலவே காணப்படுகின்றன. அவற்றுள் தலை சிறந்தன அரியநாத முதலியார் சிலையும் அரிச்சந் திரன் சிலையுமாம். அரியநாதரின் சிலை அமைப் பைக் காணும்போது, 'இவ்வுருவத்தை அமைப்ப தற்கென்றே இதனைச் செய்த சிற்பி பிறந்தானோ!' என்னும் எண்ணம் உண்டாகிறது. குதிரையின் மேல் அமர்ந்திருக்கும் தளவாயின் தோற்றம் - அவருடைய அஞ்சா நெஞ்சம், உழைப்பு, எடுத்த காரியத்தைச் செவ்வனே செய்வதில் உள்ள ஆர்வம், முகப் பொலிவு இவற்றை நமக்கு



உணர்த்துகிறது. அரியநாத முதலியார் ஏறி நடத்தும் குதிரை, நாற்கால் பாய்ச்சலில் ஓடுவது போலக் காணப்படுகிறது. முதலியார் அதன் கடிவாளங்களை மிகவும் உறுதியாக இழுத்துப் பிடித்துள்ளார். எனினும் அக்குதிரை அதனைப் பொருட்படுத்தாது போவது போலக் காணப்படு கிறது.

**கண்ணப்பர்**

நாம் அரியநாதர் சிலைக்கு அண்மையில் கண்ணப்பர் வரலாற்றைச் சிற்பங்களின் மூல மாகக் காணலாம். அங்குள்ள சிற்பங்களைக் கொண்டே கண்ணப்பர் வரலாறு முழுவதும் உணரத்தக்க முறையில் சிற்பி அமைத்துள்ளான்.

**அரிச்சந்திரன்**

வாசலின் மறுபக்கத்தில் அரிச்சந்திரன் உருவச் சிலை காணப்படுகிறது. அதன் பக்கத்தில் இறந்த தன் மைந்தனைத் தன்னுடைய இரு கை களில் ஏந்திய வண்ணம் சந்திரமதியின் சிலை தோன்றுகிறது. அவ்விடத்தில் அரிச்சந்திரன், சந்திரமதி ஆகிய இவர் முகத்தில் மட்டும் உணர்ச் சியை வெளிப்படுத்தாது, அவர்கள் நிலைக்கேற்ப உடை, அணி முதலியவற்றைக் கற்பனை செய் துள்ளமை, சிற்பியின் உயர்ந்த கலைப்பண்பைக் காட்டுவதாகும். அவர்களின் உருவத்தில் அவர்கள் தம் கொள்கையை நிலைநாட்ட அடைந்த துன் பமும் அக்காலத்திலும் அவர்கள் கொண்டுள்ள அமைதியும் இலங்குகின்றன.

## குறவன் - குறத்தி

முன் சொல்லப்பட்ட சிலைகளுக்குப் பக்கத்தில் இரு தூண்களில் குறவன்–குறத்தி இவர்தம் சிலைகள் காணப்படுகின்றன. குறவனின் உடல் கட்டமைப்பு வாய்ந்தது. அவன் மார்பு அகன்று காணப்படுகிறது; உடல் தடித்து வளமுடையதாகத் தோற்றுகிறது; பார்வை சற்றுக் கடுமையாகத் தோற்றுகிறது; அவ்வுருவம் அங்குச் செல்வோர் அனைவர் உள்ளத்தையும் தன் வயப்படுத்தும் தன்மை வாய்ந்ததாகவே விளங்குகிறது. அவன் உடல் அமைப்பும் முகத் தோற்றமும் 'இவன் நன்ருக உழைத்து வாழ்பவன்' என்னும் கருத்தை எழச் செய்கின்றன. அவன் அணிந்துள்ள அணிகளோ அளவற்றவை.

இனி, குறத்தியின் சிற்பத்தைக் காண்போம்: சிற்பி அக்குறத்தியை நான்கு பிள்ளைகளுடன் தோற்றுவித்துள்ளான். ஒரு குழந்தை குறத்தியின் முதுகின்மீது இருக்கிறது. மற்ருென்று கூடைக்குள் காணப்படுகின்றது. மூன்ரும் குழந்தை அவள் மார்பில் துணியால் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கிறது. கடைசிக் குழந்தை அவள் கையைப் பற்றிக் கொண்டு நிற்கிறது. குழந்தை இருக்கும் கூடையைச் சிற்பி எவ்வளவு அழகுறச் செய்துள்ளான் என்பதை நேரிற் காண்பவரே அறிந்து கொள்ள வல்லவர் ஆவர்.

## பூதம்

இவ்வுருவம் குறவன்–குறத்தி உருவங்களுக்குப் பக்கத்தில் காணப்படுகிறது. பரமசிவன் பாதத்தில் விழுந்து கிடக்கும் பூதத்தின் முகத் தோற்றம், தனக்கு யாதொரு கதியும் இல்லை என்பதை உணர்த்துகிறது. அதனை மிதித்துள்ள சிவன் முகத்தில் அமைதியும் புன்னகையும் காணப்படுகின்றன.



நாம் மேலே கண்ட சிற்பங்கள் பலவும் மண்டபத்தின் வாயிலில் உள்ளவை. அங்கு மேலே கூறப்பட்ட சிற்பங்களேயன்றி மேலும் பலவகைப்பட்ட சிற்பங்கள் உள்ளன. அம் மண்டபத்தின் சிறப்பை - அம்மண்டபத்தைத் தோற்றுவித்த அரியநாதரின் சிறப்பை - அவர் காலத்துச் சிற்பக் கலைவளர்ச்சியின் மேன்மையை உணர்த்தச் சிலவற்றைக் கூறினேம். இனி, மண்டபத்தின் உட்புறத்தில் உள்ள சிறந்த சிற்பங்கள் சிலவற்றைக் காண்போம்:

## கலைமகள்

மண்டபத்தின் உள்ளே நுழைந்ததும், நம் கண்ணுக்குப் புலப்படும் சிற்பங்களுள் நம் கருத்தை ஈர்ப்பது கலைமகள் சிற்பமேயாகும். இவ்வுருவமும் சாதாரண மனித அளவுக்கு ஏற்பச் செய்யப்பட்டிருக்கிறது. கலைமகளின் மெல்லிய இடுப்பும் பிற அங்க அமைப்பும் வீணை வாசிப்பதில் திறமை வாய்ந்த மெல்லிய விரல்களை உடைய கைகளும் கண்கவர் வனப்புடையன. வீணையும் அவள் கைகளில் நன்ருக அமைந்துள்ளது. வீணையிலுள்ள நரம்புகளும் தெளிவுறக் காட்டப்பட்டுள்ளன. கலைமகள் முகத்தில் அமைதியுடன் கூடிய இன்பம் தாண்டவமாடுகிறது. அந்த ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள உருவங்களில் அஃது ஒன்றே மிகவும் உயர்வுடையதாகும்.

### பால முருகர்

இவ்வுருவம் மயில் வாகனத்தின்மீது அமைந்துள்ளது. முருகர் தேவர்களின் படைத் தலைவராதலின், அத்தகுதிக்குத் தகுந்த நிலைமை அங்கே தரப்பட்டுள்ளது. அவர் முகத்தில் இளமையின் அழகு விளங்குகின்றது. அவர் அமர்ந்துள்ள மயிலின் சுறுசுறுப்பு, அதன் மெல்லிய கால்களிலும் உடலிலும் காட்டப்பட்டிருக்கிறது.

நாம் மேலும் உட்செல்வோமாயின், இருபக்கமும் சிலைகளால் அழகு செய்யப்பட்ட தூண்களுக்கிடையே உள்ள சில சிறந்த சிற்பங்களைக் காணலாம்.

### ரதி தேவி

நாம் தென்னிந்தியக் கோவில்களில் இத்தகைய ரதி தேவியின் உருவத்தைக் காண இயலாது. இங்கே அமைந்துள்ள உருவம் புதுமை உடையதாகவும் வியக்கத்தக்கதாகவும் ஒப்பற்றதாகவும் காட்சி தருகிறது. ரதி தேவி அமர்ந்துள்ள அன்னப்பறவை நடப்பதுபோலவே அமைக்கப்பட்டுள்ளது. இந்த ரதி தேவியின் உறுப்புக்கள் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள அழகு நமக்கு வியப்பையும் இன்பத்தையும் தருவதாகும்.

### யாளியின் உருவம்

மண்டபத்தில் நுழையும் ஒருவர் தமக்கு இடப்பக்கமாக உள்ள தூண் வரிசையில் காணத்தக்கது ஒன்று உண்டு: அதுவே யாளியின் உருவம். யாளியின் வாயில் ஓர் உருண்டைக்கல் இருக்கிறது. நாம் அதை வெளியே எடுக்கமுடியாது. ஏனெனில், கல் உருண்டை யாளியின் வாய்த் துவாரத்திலும் பெரிது. இங்ஙனம் சிறிய வாயில் பெரிய கற்குண்டைச் செய்தமைத்த சிற்பியின் திறமையை என்னென்பது! இந்த யாளியைப் போலவே கிளிக்கூண்டு மண்டபத்தில் விநாயகருக்கு வலப்பக்கத்தில் மற்றொரு யாளியும் இருக்கிறது.



மண்டபத்தில் உள்ள சிற்பங்களின் சிறப்பை உணர்த்தவே, மேற்சொன்ன சிற்பங்கள் விளக்கப்பட்டன. மண்டபத்தில் இன்னும் எண்ணிறந்த சிற்பங்கள் உள்ளன. அவற்றை எல்லாம் இவண் விரித்துரைக்க இயலாது. எனினும் நாம் மேலே கண்டவற்றைக் கொண்டு, ‘இங்குள்ள சிற்பங்கள் சிற்பக் கலையறிவு படைத்த சிற்பிகளால் செய்யப்பட்டன; இக்கோவிலில் பிற பகுதிகளில் உள்ள சிற்பப் பெருமையை இம்மண்டபச் சிற்பங்கள் கொண்டே நன்கறியலாம்; தமிழ்நாட்டுச் சிற்பியின் திறமையும் சிற்பமும் பிறநாட்டார் போற்றும் தன்மை வாய்ந்தவை; இங்குள்ள சிற்பங்கள் அணிந்துள்ள ஆடை, அணி, செருப்பு, தலையணி முதலியன கொண்டு அச்சிற்பங்கள் தோற்றுவிக்கப்பட்ட காலத்தின் நாகரிகத்தை நன்கு உணரலாம்.

இத்தகைய சிறந்த மண்டபத்தைத் தோற்றுவித்தவர் நமது அரியநாதர் என்பதை நினைக்கும்பொழுது நமது உள்ளம் மலர்கின்றது அன்றோ?

108269

# THALAVOI ARIYANATHAR

[TAMIL]

BY

K. APPADURAI, M.A., L.T.

THE NATIONAL PUBLISHING CO.
6, KONDI CHETTY STREET, MADRAS-1

COPYRIGHT]

[87 N. P.